இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28


சுடர் 32 | கதிர் 222 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 22 வியாழக்கிழமை 06.07.2017

## பா.ஜ. கட்சியின் தமிழகத் தலைவர் இன்று யாழ். வருகை



யாழ்ப்பாணம், ஜூலை 06
இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன். >> 04

## கரும்புலிகள் தினம் கடைப்பிடிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கரும்புலி தினம் நேற்று உணர்வெழுச்சியு டன் மட்டக்களப்பு மாவடி துயிலும் இல் லத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. (5)

### வித்தியா படுகொலை வழக்கு:

## சடலம் மீட்கப்பட்ட இடத்தில் குற்றச்செயல் நடக்கவில்லை

*நிபுணத்துவ சாட்சியத்தில் சட்ட மருத்துவ அதிகாரி உறுதி*

யாழ்ப்பாணம், ஜூலை 6
"புங்குடுதீவு மாணவி சடலமாக மீட்கப்பட்ட இடத்தில் அவர் மீதான குற்றச்செயல் இடம்பெற வில்லை. அவர் கடின மான தரைப்பகுதியில் (சிமெந்திலான >> 25

### வாய்க்குள் திணித்திருந்த ஆடையால் உயிரிழப்பு விரைவாக ஏற்பட வாய்ப்பு

"புங்குடுதீவு மாணவி வித்தியாவின் உயிரிழப்புக்கு 3 காரணங்களைக் கூறலாம். அவற்றில் அவரின் வாய்க் குள் திணிக்கப்பட்டிருந்த உள்ளாடை தொண்டைக்குள் சிக்கியதால் அவர் உயிரிழந்திருக்க அதிக வாய்ப்புக் >> 25

## மயிலிட்டித் துறையில் முதியவர் போராட்டம்

*காணியை விடுவிக்கக்கோரி நேற்று ஆரம்பித்தார்*

யாழ்ப்பாணம், ஜூலை 6
மயிலிட்டித் துறைமுகத்தை அண்மித் துள்ள தனது காணியை விடு >> 24

*ரூ. 150,000 பெறுமதியான*

## கடிகாரத்தை திருடியதாக பொலிஸ் அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6
பொலிஸ் அலுவலகர் ஒருவரின் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி யான கைக்கடிகாரத்தைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் மன் றில்இன்று முற்படுத்தப்படுவார் >> 04

# மகாநாயக்கர்களின் முடிவு நல்லிணக்கத்துக்கு குந்தகம்

### முடிவை மறுபரிசீலனை செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
நாட்டுக்குப் புதிய அரசமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்க தேரர் கள் கூறுவது நாட்டில் நல்லிணக்கம் தேவையில்லை என்று சொல்வ தற்குச் சமனானது. மகாநாயக்க தேரர்கள் தமது முடிவை உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளாக இருக்கின்றது. இவ்வாறு அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
புதியஅரசமைப்புத் தேவையில்லை என்று, மகாநாயக்க தேரர்கள் நேற்று முந்தி னம் மீண்டும் ஒன்றுகூடி முடிவெடுத்துள்ளனர். இதனை அரசுக்குத் தெரி >> 04

## ஒகஸ்ட் 8 ஆம் திகதி உயர்தரப் பரீட்சை

### 20 ஆம் திகதி புலமைப் பரிசில்

கொழும்பு, ஜூலை 6
இந்த வருடத்துக்கான ஜி. சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.
இதில், உயர்தரப் பரீட்சை 2 ஆயிரத்து 230 >> 06

### வடக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு

## சம்பள நிலுவை ரூ.30 கோடி!

*பெற்றுத் தருமாறு ஆளுநரிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாணத்தில் அதிபர் கள் ஆசிரியர்களுக்கு வழங் கப்படவேண்டிய ரூபா 30 கோடியை கொழும்பு அரசிடமி ருந்து விடுவிக்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள் ளது.
இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள செய்திக்குறிப் பில் தெரிவிக்கப்பட்டதா >> 06

## இனவாதத்தை ஆதரிப்போர் தண்டிக்கப்படுவது நிச்சயம்

*சபையில் ரணில் கடும் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 6
குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இனவாதம் மற்றும் அடிப்படைவாதத்தைத் தூண்டிவிடும் செயற் பாடுகளுக்கு ஆதரவ ளிப்பதுதண்டனைக்கு ரிய குற்றம் என்று சபையில் >> 06

## பௌத்த பீடங்களின் எதிர்ப்பை கவனத்திலெடுக்காத ரணில்

யாழ்ப்பாணம், ஜூலை 06
புதிய அரசமைப்புத் தேவை யில்லை என்று மகாநாயக் கதேரர்கள் கூறியிருப்பதை 'சீரியசாக' எடுத்துக் கொள் ளத் தேவையில்லை என்று, தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க, வழிநடத்தல் குழுவின் நேற்றைய கூட்டத்தில் கூறி யுள்ளார்.
புதியஅரசமைப்பை >> 25

## புதிய அரசமைப்பு நிறைவேறியே தீரும்

*அரசு நேற்று அறிவிப்பு*

கொழும்பு, ஜூலை 6
புதிய அரசமைப்பு அவசியமில்லை என்று ஒட்டுமொத்த பௌத்த பீடங்களும் வலியுறுத் தியுள்ள நிலையில், 64 சதவீதமான மக்கள் புதிய அரசமைப்புக்கு ஆணை வழங் >> 06

## பன்னாட்டு நீதிமன்றுக்கு படையினர் செல்லவேண்டியிருந்ததைத் தடுத்தேன்

*மைத்திரி நேற்று இறுமாப்பு*

கொழும்பு, ஜூலை 06
வீரமிகு படையினர் பன்னாட்டு நீதி மன்றத்துக்கு செல்லவேண்டியி ருந்த நிலையை மாற்றி உலகில் எந்தவொரு நாடோ, பன்னாட்டு அமைப்போ அவர்கள் மீது >> 06

## முதல்வர் விக்னேஸ்வரன் விவகாரம் எல்லோரும் கூடிப் பேசித் தீர்ப்போம்

*சம்பந்தன் நேற்றுத் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாண முதலமைச் சர் விக்னேஸ்வரன் தொடர் பான சகல பிரச்சி னைகளை யும், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் >> 06

## வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் மகிந்த அணி பங்கேற்கவில்லை

யாழ்., ஜூலை 6
உள்ளூராட்சித் தேர் தல் நடத்தப்படும் வரையில் வழிநடத் தல்குழுவிலிருந்து விலகியிருக் >> 23

## காணாமற்போதலைக் குற்றமாக்கும் சட்டவரைவு திட்டமிட்டுப் புறக்கணிப்பு

*அரசு மீது கடும் சந்தேகம்*

யாழ்ப்பாணம், ஜூலை 6
பலவந்தமாக காணாமற்போதலை குற்றமாக்கும் சட்டவரைவை நிறை வேற்ற வேண்டாம் என்று பௌத்த பீடங்கள் அரசுக்கு தெரிவித்திருந் தன. இந்தப் பின்னணியில், >> 06

## தெரிவுக்குழுவை எதிர்கொள்ள அச்சப்படுகிறார் முதல்வர் விக்கி

*சமரச முயற்சியால் பயனில்லை*

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு உள் ளிட்ட 5 அமைச்சுக்கள் மீதும் விசாரணை செய்வ தற்கு தெரிவுக் குழுவை அமைக்கக் கோரும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி யின் பிரேரணையை ஒத்திவைக்குமாறு >> 06

## 28அடி வள்ளங்களுக்கு சேத்துக் கடலில் இறால் பிடிப்பதற்கு அனுமதிக்கும் திருத்தம்

*நாடாளுமன்றில் இன்று முன்வைப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 6
28அடி நீளமான வள்ளங்க ளைப் பயன்படுத்தி சேத்துக் கடலில் இறால் பிடிப்பதற்கு அனுமதியளிக்கும், சட்டவ ரைவு மீதான திருத்தம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் இன் றைய தினம் முன்வைக்கப் படவுள்ளது. இதற்குத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் >> 04

newuthayan.com புதுப் பொலிவுடன் உதயன் இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33 ஆண்டுகளின் பின் வாவெட்டி மலையில் மக்கள் வழிபாடு





யாழ்ப்பாணம், ஜூலை 6

வாவெட்டி ஈஸ்வர ஆலயத்தில் 33 ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் வழிபாடுகளைமேற்கொண்டனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரன் ஆலயத்துடன் தொடர்புடைய வாவெட்டி மலையில்அமைந்துள்ளவாவெட்டி ஈஸ்வர ஆலயத்தில் நேற்று மக்கள் வழிபாடு மேற்கொண்டனர்.

1984ஆம் ஆண்டுக்குப் பின்னர் போரால் இந்த ஆலயத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இந்த ஆண்டு வனவளப் பாதுகாப்புத்திணைக்களம், பொலிஸார் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினருடன்கலந்துரையாடிஒட்டுசுட்டான்ஆலயப்பரிபாலனசபையினர் மக்களுடன் இணைந்து வழிபாடுகளைநடத்தினர்.

ஒட்டுசுட்டான்தான்தோன்றீஸ்வரர் ஆலய வேட்டைத்திருவிழாஅன்று ஆலயத்திலிருந்துவாவெட்டிமலை சிவன் ஆலயத்துக்குச் சென்று அங்கு பூசைகள் நடைபெற்றுவேட்டையாடி ஆலயம் திரும்புவது வழமையாகும். போரால்இதுதடைப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக உயர்ந்த மலையாக இது காணப்படுகின்றது. இந்த மலையில் சுமார் 1800ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்துவன்னியை ஆட்சி செய்தமன்னர்களால்ஆலயம்உருவாக்கப்பட்டு வழிபட்டு வந்தமைக்கான சான்றுகள் இன்றும் அங்கு காணப்படுகின்றன. மலையின் உச்சியில் ஆலயம் இருந்தமைக்கான கற் தூண்கள் மலையின் உச்சியில் கொடி நாட்டப்பட்டமைக்கான கொடிப்பீடம் ஆகியன இன்றும் காணப்படுகின்றன.

(ற-102)



# பட்டதாரிகள் போராட்டம் தீர்வின்றித் தொடர்கின்றது

மட்டக்களப்பு, ஜூலை 6

மட்டக்களப்பில் காந்தி பூங்கா முன்பாகநிரந்தநியமனம்கோரிவேலை தேடும் பட்டதாரிகள் முன்னெடுக்கும் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம் எந்தவிதத் தீர்வுமின்றி 135 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

எமது போராட்டத்திற்குத் தீர்வு பெற்றுத்தரும் வகையில் ஒரு சின்ன நம்பிக்கையை ஏற்படுத்தும்வகையிலான நடவடிக்கைகள் கூட எடுக்கப்படாமல்இருப்பதுகவலையளிக்கின்றதுஎன்றுபோராட்டத்தில்ஈடுபடும்பட்டதாரிகள் தெரிவித்தனர்.

(ற)

# சாவகச்சேரி தபாலகத்தில் முத்திரைக் கண்காட்சி



சாவகச்சேரி, ஜூலை 6

சாவகச்சேரி தபால் அலுவலகப்பகுதிக்குட்பட்ட பாடசாலைகளின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான முத்திரைக் கண்காட்சி சாவகச்சேரி தபாலகத்தில் நேற்று நடைபெற்றது.

வருடந்தோறும் சாவகச்சேரி தபால் அலுவலகத்தால் முத்திரைக் கண்காட்சி நடத்தப்படும் நிலையில் பாடசாலை மாணவர்களுக்கான கண்காட்சியை நடத்துமாறு பாடசாலைகளின் அதிபர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதையடுத்து இந்த முத்திரைக் கண்காட்சி நேற்று நடத்தப்பட்டது. கண்காட்சியைப்பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பலர்பார்வையிட்டனர்.

(ஐ)

# கழிவுநீர் மதகுக்குள் மண்டையோடு



கொழும்பு, ஜூலை 6

மன்னார், தலைமன்னார்பிரதான வீதியில் உள்ள கைத்தொழில்பேட்டைக்குஅருகில் கழிவுநீர்செல்லும்மதகுக்குள் இருந்து நேற்று மாலை மனித மண்டையோடு ஒன்று மன்னார்நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் மீட்கப்பட்டது.

மதகுக்குள் மனித மண்டையோடு காணப்படுகின்றது என்று மன்னார்பொலிஸாருக்குக்கிடைத்த தகவலை அடுத்து மன்னார் பொலிஸார்கடந்ததிங்கற்கிழமைமாலை சம்பவ இடத்துக்குச் சென்றனர். மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்கும் கொண்டுசென்றனர்.

நேற்று பி.ப. 2.45 மணியளவில் மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் சிறப்பு சட்ட வைத்திய அதிகார்ரி டபில்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஸ, மன்னார் சட்டவைத்தியஅதிகாரிஎம்.யு.எம். சப்வான் ஆகியோரின் பங்களிப்புடன் மண்டையோடு அடையாளம் காணப்பட்ட பகுதியில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. நீதவான் முன்னிலையில்கழிவுநீர்செல்லும் மதகுக்குள் இருந்து மனித மண்டையோடு மீட்கப்பட்டது. அந்தப் பகுதிகளில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது வெற்று இளநீர்கோம்பைகள்இரண்டுமுழுமையாக மீட்டப்பட்டன. வேறு எவ்வித தடையங்களும் மீட்கப்படவில்லை.

மீட்கப்பட்ட மனித மண்டையோடை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனர்.

மனித மண்டையோடு மீட்கப்பட்ட இடத்தில்இருந்துமன்னார்நோக்கி சுமார்100மீற்றர்தொலைவில்மன்னார் பொது மயானம் அமைந்துள்ளது.

(ற-56)

# படைகள் நாட்டைப்பாதுகாத்தது நீதிமன்று செல்வதற்காக அல்ல

*தினேஸ் குணவர்த்தன கூறுகின்றார்*

கொழும்பு, ஜூலை 6

இராணுவத்தினர் நாட்டைப் பாதுகாத்தது, ஒருபோதும் பன்னாட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாவதற்காக அல்ல என்று தெரிவித்தார் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான தினேஸ் குணவர்த்தன.

நேற்று நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் நடைபெற்ற கூட்டு எதிரணியின் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சட்டவரைபு நிறைவேற்றப்படுவதன் ஊடாக இராணுவத்தினர் போன்றே முன்னாள் அரச தலைவர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரதும் உயிருக்குப்பாதுகாப்பின்மை ஏற்படுகின்றது.

இராணுவ வீரர்கள் நாட்டைப் பாதுகாத்தது பன்னாட்டு நீதிமன்றத்தின் முன்னிலையாகும் நோக்கத்தில் அல்ல. இது நாட்டின் இறையான்மைக்கு ஏற்படுகின்ற பெரும் அச்சுறுத்தல். ஜெனிவாவில் எற்படுத்திக் கொண்ட உடன்பாட்டின் படி இது மேற்கொள்ளப்படுகின்றது எனச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கூட்டு எதிரணியினர் குறிப்பிட்டனர். இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யாமல் திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும்என்றும்அவர்கள்வலியுறுத்தினர்.

(ற)

# ரயிலுடன் மோதி பாரவூர்தி விபத்து

கொழும்பு, ஜூலை 6

அவிசாவளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த தொடருந்துடன் பாரவூர்தி மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பாரவூர்தியின் சாரதி சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் புவக்பிட்டிய தொடருந்து நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்றது. தண்டவாளத்துக்குக் குறுக்காக உள்ள சாலையைப் பாரவூர்தி கடக்க முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றது. பாரவூர்தியைச் செலுத்திச் சென்ற சாரதிக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். பாரவூர்தி பெரும் சேதம் அடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# கிறைண்டருள் சிக்கி விரல்கள் பாதிப்பு

தென்மராட்சி, ஜூலை 6

மின்சாரத்தில் இயங்கும் கிறைண்டர் மோட்டாருக்குள் அகப்பட்டு தொழிலாளியின் விரல்களில் பாதிப்பு எற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று வரணியில் இடம்பெற்றது.

புன்னாலைக்கட்டுவனிலிருந்து வரணிக்குத் தொழிலுக்குச் சென்ற நபர்மோட்டாரில்வேலைசெய்துள்ளார். அதன் போது இயந்திரத்துக்குள் நபரின் விரல்கள் அகப்பட்டுப் பாதிப்புஏற்பட்டதுஎனத்தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட தொழிலாளி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஐ-9)



மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்டது. சமாதான வாழ்வுக்கானசர்வமதங்களின்நல்லிணக்கம்எனும்தொனிப்பொருளில்தேசிய கரித்தாஸ் நிறுவனம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு அதன் பணிப்பாளர் மகேந்திர குணதிலக்க தலைமையில் யாழ். காங்கேசன்துறை தல்செவன விடுதியில் நடத்தப்பட்டது. நிகழ்வில் சர்வமதங்களின் மதகுருமார் மற்றும் சமயப் பிரதிநிதிகளுக்கு சமய நல்லிணக்கம் குறித்து விளக்களிக்கப்பட்டது.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## புதிய இராணுவத் தளபதி அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 6
போர்க்குற்றவிசாரணைக்குஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அறிவித்த புதிய இராணுவத் தளபதிலெப். ஜெனரல்மகேஸ்சேனாநாயக்க, இராணுவத்தைஅகற்றுமாறுவடக்கிலிருந்துஎழும்அரசியல் கோசங்கள் குறித்து அலட்டிக்கொள்ளதேவையில்லை என்றும்தெரிவித்தார்.

இலங்கையின் 22 ஆவது இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளலெப். ஜெனரல்மகேஸ் சேனாநாயக்க நேற்று தமது கடமைகளை இராணுவத் தலைமையகத்தில் பொறுப்பேற்றார். அவருக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார். கேள்வி நேரத்தின்போதுபடையினருக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள போர்க்குற்றங்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், ஒழுக்கமும், அர்ப்பணிப்பும் தான் இராணுவத்தின் பலமாகும். இவ்விரண்டும் இல்லாவிட்டால் சிறப்பானதொரு இராணுவக் கட்டமைப்பு இருக்கமுடியாது.

இப்படியானகுற்றச்சாட்டுக்களை (போர்க்குற்றச்சாட்டு)முன்வைப்பவர்கள் நேரில் எதையும் பார்க்காது செவிவழியாகக்கேட்டதை அடிப்படையாகக்கொண்டே குற்றஞ்சுமத்தி யுள்ளனரா என்ற சந்தேகமும் எழுகின்றது. இராணுவத்தினர் அப்படியான செயலில் (போர்க்குற்றங்களில்) ஈடுபடவில்லை. களத்தில் இருந்தவன் என்ற அடிப்படையில் இது எனக்குநன்குதெரியும்.

எனினும், குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளநிலையில்அது பற்றி விசாரணையும் நடக்கின்றது. அதற்கு ஒத்துழைப்புவழங்கப்படும். ஒழுக்கமுள்ள எமது இராணுவம் அப்படி எதுவும் (போர்க்குற்றம்) செய்யவில்லை என்பதை மறுபடியும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இராணுவத் தளபதியாவதற்கு முன்னர் 14 மாதங்கள் யாழ்ப்பாணத்தில் கட்டளைத் தளபதியாக இருந்தேன். எனவே, அங்குள்ள நிலைமைகுறித்துஎனக்குநன்கு தெரியும். போர் முடிவடைந்து 8 வருடங்களாகின்றன. அங்குள்ளவர்களும் எமது மக்களே. அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

போர்க்காலத்தில் இராணுவம் காணிகளை தேவை நிமிர்த்தம் கையகப்படுத்தியது. தற்போது முக்கிய தளங்களையும், தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவமிக்க இடங்களைத் தவிர ஏனைய காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. இதனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை. பாதுகாப்பு நிலைவரம் குறித்து அந்தவிடயத்துடன்தொடர்புடையவர்களேஉரியகருத்துக்களை வெளியிடமுடியும். கணிப்பு, ஆய்வின் பிரகாரமே காணிகள் விடுவிக்கப்பட்டுவருகின்றன.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்போன்றவர்கள் அரசியல் நோக்கங்களுக்காகவே அப்படிப் பேசு வருகின்றனர். எனவே, அரசியல் அறிவிப்புகள் பற்றி இராணுவம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை - என்றார். (த)

## நாகர்கோயில் திருட்டு; சந்தேக நபர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 6
வீடொன்றில் இடம்பெற்ற களவுச்சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

நாகர்கோவில் மேற்கில் உள்ள வீடொன்றில் கடந்த 28 ஆம் திகதி திருட்டு நடைபெற்றது. வீட்டில் இருந்த அலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், பணம் என்பன களவாடப்பட்டன.

அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குடத்தனையைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 3 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் மற்றும் சில புதிய ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-ஜ-26)



## முதிரை மரக் கடத்தலில் ஈடுபட்ட லொறி சிக்கியது

### இருவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமாக முதிரை மரக் கடத்தலில் ஈடுபட்ட லொறி ஒன்று நேற்று கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

காலை 6 மணியளவில் மீசாலை தொடருந்து நிலையத்துக்கு அருகில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கொடிகாமம் பொலிஸார் லொறியை வழிமறித்தனர். லொறியில் வந்த இருவர் தப்பித்து ஓடி விட்டனர். லொறியை கைப்பற்றிய பொலிஸார் அதிலிருந்து 15 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரைமரக்குற்றிகளை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தப்பி சென்ற இருவரையும் கைது செய்ய கொடிகாமம் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந)

## மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 6
மாலபே தனியார் வைத்தியக் கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவர்களைப்பதிவுசெய்யவேண்டும்என்று அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக, இலங்கை மருத்துவச் சபையால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விசாரணைகளில் தலையிட்டுத் தகவலளிக்க அனுமதிக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நீதிமன்றத்தில் கோரியது.

இன்று இது குறித்து தகவலளிக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியிடம் உயர்நீதிமன்றம் தெரியப்படுத்தியுள்ளது. இன்றுவரை அந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ந)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வயல் கிணற்றில் கைக்குண்டு மீட்பு

வல்வெட்டித்துறைப் பகுதியைஅண்மித்த வயல்கிணறு ஒன்றிலிருந்து இரண்டு கைக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன. அந்தப்பகுதியைச் சேர்ந்தவயல் ள்நே உரிமையாளர் வயலுக்குகிணற்றிலிருந்து நீர்இறைக்கும்போதே கைக்குண்டுகள் இருப்பதுஅவதானிக்கப்பட்டது. அதனையடுத்து பொலிஸாருக்குத்தகவல்வழங்கப்பட்டது. சம்பவஇடத்துக்குவிரைந்தபொலிஸார்பருத்தித்துறைநீதிமன்றில்அனுமதிபெற்றுசிறப்புஅதிரடிப்படையினரின் உதவியுடன்கிணற்றிலிருந்துஇரண்டு கைக்குண்டுகளை மீட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டது.(ஐ-26)

# பெண் ஊடகவியலாளரை கொலை செய்தவருக்குத் தூக்கு

கொழும்பு, ஜூலை 6

பெண் ஊடகவியலாளர் மெல் குணசேகரவைக் கொலை செய்த குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம்நேற்றுத் தீர்ப்பளித்தது.

2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி பத்தரமுல்லைசுபோதிபுர பகுதியிலுள்ளவீட்டில்தனிமையிலிருந்தபெண்ஊடகவியலாளர் மெல் குணசேகரா கத்தியால் குத்தப்பட்டுகொலைசெய்யப்பட்டார். அவரது தாயாரும் சகோதரரும் ஆலயத்துக்குச் சென்றிருந்த போதே இந்தச்சம்பவம்இடம்பெற்றது. ஊடகவியலாளரிடமிருந்து ஆயிரத்து 700 ரூபாபணமும், அலைபேசியையும்திருட்டுப்போயிருந்தன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் தொம்பே பிரதேசத்தைச் சேர்ந்த துருலாந்தி அன்தனி ரம்சான் ஜோர்ஜ் என்பவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக சட்டவிரோதமாக ஆயுதத்துடன் அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்தமை, அலைபேசியைக் கொள்ளையிட்டமை, கொலை செய்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கொலைக் குற்றச்சாட்டில் எதிரி குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்குதூக்குத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றநீதிபதிபியசேன ரணசிங்க நேற்றுத் தீர்ப்பை அறிவித்தார். மேலும் எதிரி சட்டவிரோதமாக ஆயுதத்தை வைத்திருந்தகுற்றச்சாட்டும்நிரூபிக்கப்பட்டுஅவருக்கு30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (வ-ஐ)

# டெங்குத் தாக்கத்தால் பாடசாலைச் சீருடைகள் தற்காலிகமாக மாற்றம்

கொழும்பு,ஜூலை 6



பாடசாலை மாணவர்களிடையே டெங்கு நோய் விரைவாகப் பரவுவதன் காரணமாக, பாடசாலைச் சீருடையைத் தற்காலிகமாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றுகல்விஅமைச்சுஅறிவித்துள்ளது. இது தொடர்பாகக் கல்வியமைச்சு சிறப்புச் சுற்றறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டு இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கைஇன்னும்இரண்டுதினங்களில் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்என்றுகல்விஅமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். அதற்கமைவாக கட்டைக் காற்சட்டை அணிந்து பாடசாலை வரும்மாணவர்களுக்குநீளக்காற்சட்டை மற்றும் மாணவிகளுக்கு முழுமையாக உடலை மறைக்கும் வகையிலானசீருடைகளுடன்பாடசாலைக்கு வரமுடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். இதனிடையே, சுகாதார அமைச்சின் புள்ளிவிவரப்படி கடந்த 7 மாதங்களில் மட்டும் 77 ஆயிரத்து 222 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் 600 இற்கும் அதிகமானவர்கள்உயிரிழந்துள்ளனர். அவர்களுள்பாடசாலைமாணவர்களும் கணிசமான அளவு உயிரிழந்துள்ளனர். அதே வேளை, பதுளை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் கடந்த திங்கள்கிழமை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



கரும்புலிகள் தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நினைவுகூரப்பட்டது. (வ-106)

## 49 குண்டங்களில் யாகம் வளர்த்து கணபதிக்கு குடமுழுக்கு

ஈழத்தில்முதன்முறையாக ஏகோன்ன பஞ்சாசத் (49) யாகங்கள் வளர்க்கப்பட்டுச்சித்தன்கேணிபெரியவளவு மகா கணபதிப் பிள்ளையாருக்குநேற்றுதிருக்குடமுழுக்கு நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான குருமார்களின் மந்திர உச்சாடனத்துடன்ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் திருக்குடமுழுக்குஇடம்பெற்றது. (ற)





## தோட்டக் காணிக்குள் மிதிவெடிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 6



குப்பிளான்வடக்குச்சமாதிகோவிலடிக்கு அருகில்வீட்டுடன் இணைந்த தோட்டக்காணியொன்றிலிருந்து2 மிதிவெடிகள் நேற்று மீட்கப்பட்டன. இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த இந்தப் பிரதேசம் 2015 ஆம் ஆண்டுவிடுக்கப்பட்டது.

காணியின்பாராமரிப்பாளர்வீட்டின் பின்புறமாக விவசாயச் செய்கை மேற்கொள்வதற்காகக்காணியைத் துப்புரவுசெய்துள்ளார். காணி உழவியந்திரத்தால் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்ட போது அதன் சாரதியால் 2மிதிவெடிகள் அங்குகாணப்பட்டன. உழவியந்திரம் மிதிவெடியின் மேலாக ஏறிய போதிலும்தெய்வாதீனமாக அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதிரடிப் படையினரின் உதவியுடன் அவை அகற்றப்படும் என பொலிஸார்தெரிவித்தனர். (ஐ-26)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### *மகாநாயக்கர்களின்...*

யப்படுத்தப் போவதாகவும் கூறியிருந்தனர். மகாநாயக்க தேரர்களின் இந்த நிலைப்பாடு தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி இப்போது ஆரம்பிக்கப்படவில்லை. ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே அது ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில் உள்ள அனைவருக்கும் இது தெரியும். இவ்வாறான நிலையில், மகாநாயக்க தேரர்கள் திடீரென, புதிய அரசமைப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அவர்கள் தங்களுடைய எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர். இவர்கள் ஏன் திடீரென்று இவ்வாறு செயற்படுகின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டில் மக்களிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். நாட்டில் நடைமுறையிலுள்ள அரசமைப்பு தமிழ் மக்களின் பங்களிப்பு இல்லாமல் அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் கொண்டு வரப்பட்டது. தமிழர்கள் மீது திணிக்கப்பட்டது. இதனால்தான் நீண்ட கால ஆயுதப் போர் நடந்தது.

இந்த நிலமைகளிலிருந்து நாடு மீள வேண்டுமாக இருந்தால் புதிய அரசமைப்பு அனைவரினதும் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படியான இணக்கப்பாடுகள் தற்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, சில நாள்களில் இறுதி செய்யப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சந்தர்பத்தில் புதிய அரசமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்கத் தேரர்கள் கூறுவது நாட்டில் நல்லிணக்கம் தேவையில்லை என்று கூறுவதற்கு ஒப்பானது. எனவே மகாநாயக்க தேரர்கள் தங்களது நிலைப்பாடுகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இது எமது வேண்டுகோளாகவும் இருக்கின்றது - என்றார். (5)

### *28 அடி...*

குழுக் கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம், கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள இழுவைமடி மீன்பிடி தொடர்பான சட்டவரைவு தொடர்பில் பேசப்பட்டது. இதில் திருத்தம் முன்வைப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார். கொண்டு வரப்படவுள்ள சட்டத்திலிருந்து விதிவிலக்காக, 28அடி நீளமான வள்ளங்களைப் பயன்படுத்தி சேத்துக் கடலில் இறால் பிடிப்பதற்கு அனுமதியளிக்கக் கோரும் வரைவை முன்வைப்பது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணங்கியுள்ளனர். (5-101)

### *பா.ஜ.க...*

யாழ்ப்பாணத்திற்கு இரு நாள் பயணமாக இன்று வருகை தரவுள்ளார். இவரது பயணம் தனிப்பட்ட ரீதியிலானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டு மாநிலத் தலைவராக உள்ள தமிழிசை சௌந்தர்ராஜன், கொழும்பு கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தித் தளத்தை நேற்று மதியம் வந்தடைந்தார். இவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் ஞா.சிறிநேசன் இருவரும் வரவேற்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்று இரவு சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தரும் தமிழிசை இரு நாள்கள் இங்கு தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசுவார் என்று தெரிய வருகின்றது. (5-101)

### *கடிகாரத்தை...*

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

"ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்துள்ளார். அவர் மாணவி வித்தியா படுகொலை வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பாயத்தில் முன்னிலையாகவே வருகை தந்துள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சிறுகுற்றப்பிரிவு பொலிஸ் அலுவலரின் கைக்கடிகாரத்தை நேற்றுமுன்தினம் காலையிலிருந்து காணவில்லை. அதனால் பொலிஸ் அதிகாரியின் அலைபேசிக்கு அழைப்பெடுத்த பொலிஸ் அலுவலகர், தனது கடிகாரம் பற்றி கேட்டபோது, தான் அதனைக் காணவில்லை என்றும் அதைப்பற்றி தனக்கு தெரியாது என்றும் அவர் பதிலளித்துள்ளார்.

அந்தப் பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் இருந்து மாலை பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிய பின்னர் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரியின் முன்னிலையில் வைத்து பொலிஸ் அலுவலகர், தனது கைக்கடிகாரம் வெளிநாட்டிலுள்ள உறவினர் ஒருவர் அன்பளிக்காக வழங்கியதாகவும், அந்தக் கைக்கடிகாரத்தை கண்டதா? என பொலிஸ் அதிகாரியிடம் கேட்டுள்ளார்.

"நான் எடுக்கவில்லை. வேண்டும் என்றால் எனது கைப்பையைப் பரிசோதனை செய்து பாருங்கள். இருந்தால் எனக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்" என்று பொறுப்பதிகாரியின் முன்னிலையில் அந்த அதிகாரி கூறியுள்ளார். தலைமைப் பொலிஸ் அதிகாரிக்கு முன்பாக அந்தப் பொலிஸ் அதிகாரியின் கைப்பையைப் பார்த்த போது, அதற்குள் கைக்கடிகாரம் இருந்துள்ளது. உடனடியாக பொலிஸ் அலுவலகர் அந்தப் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் இன்று வியாழக்கிழமை பொலிஸ் அதிகாரி யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்றனர். (வ-106)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்கானை மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை

## பிரதேச மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் , ஜூலை 6
சங்கானை மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லாதமையால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

"சங்கானை மருத்துவ மனைக்கு நாளாந்தம் ஏராளமான நோயா ளர்கள் சிகிச்சைக்காகச் செல்கின்றனர். எனினும் அங்கு நான்கு மருத்துவர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். இதனால் சிகிச்சைக் குச் செல்லும் நோயாளர்கள் பெரும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். நீண்ட நேரம் காத்திருந்து சிகிச்சை பெற வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. சிலர் சங்கானை மருத்துவ மனைக்குச் செல்வதை விட அவர்களுக்கு எனவே எமது மருத்துவ மனைக்கு போதுமான மருத்துவர்களை தேவையின் அடிப்படையில் நியமிக்க வேண்டும்" என்று அவர்கள் கேட்கின்றார்கள்

"சங்கானை மருத்துவமனை "ஏ" தரம் வாய்ந்தது. பொதுவாக இந்தத் தரத்தில் இருக்கும் மருத்துவமன்னக்கு 9 மருத்துவர்கள் கடமையில் இருக்க வேண்டும். ஆனால் எமது மருத்துவமனையில் ஐந்து மருத்துவர்களே கடமையில் உள்ளனர். அவர்களிலும் ஒருவர் விடுமுறையில் சென்றுவிட்டார். தற்போது இருக்கின்ற நான்கு மருத்துவர்களே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுவாக எமது மருத்துவமனைக்கு மொத்தமாக நூறு பணியாளர்கள் இருக்க வேண்டும். ஆனால் தற்போது 50 வரையான பணியாளர்களே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். வெளி மாவட்டங்களில் உள்ள மருத்துவமனை களில் அனைத்து தேவைகளும் நிறைவு செய்யப்படுகின்றன. எமது மாவட்டத்தில் தான் இவ்வாறான நிலைமை காணப்படு கின்றது. எமது மருத்துவமனையில் பரிசோதனை கூடம் இருக்கின்ற போதிலும் அதற்கான ஆளணி இல்லாமையால் பரிசோதனைகளை வெளியிலேயே செய்யவேண்டிய நிலமையும் காணப்படுகின்றது" என்று சங்கானை மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (21-8)

## வெள்ளவாய்க்கால் சுதுமலையில் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமத்துக்கு ரூபா 5 இலட்சம் நிதியுதவியுடன் வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சுதுமலை வடக்கிலுள்ள. 4 வெள்ள வாய்க்கால்கள் கனரக இயந்திரத்தின் மூலம் ஆழமாக்கிச் சீரமைக்கப்ப டுகின்றன. இந்த வேலையைச் சுதுமலை வடக்கு விவசாய சம்மேளனம் முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுதுமலை வடக்கு, நெல்வயல் காணிகளுக்கு நடுவே அமைந்துள்ள குளத்தைச் சுற்றியிருக்கும் நான்கு வெள்ளவாய்க்கால்கள் நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாதமையினால் வாய்க்கால்கள் மண்மேடாக மாறியுள்ளன. இதனால் மழை காலங்களில் குளத்தை நோக்கிவரும் வெள்ளம் வாய்க்கால்களில் தேங்கி நிற்பதனால் விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்தநிலை சுதுமலை வடக்கு விவசாய சம்மேளனம் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியமையைத் தொடர்ந்து கிராமத்துக்கு ரூபா 5 இலட்சம் நிதியுதவித் திட்டத்தின் கீழ் குளத்தை அண்டியுள்ள நான்கு வாய்க்கால்களும் கனரக இயந்திரத்தின் உதவியுடன் ஆழமாக்கப்பட்டு சீரமைக்கப்படுகின்றன என மேலும் தெரிவிக்கப்பட்டது. (21-15)

## விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
இரு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் பருத்தித்துறை கிராமக்கோட்டுப் பகுதியில் இடம் பெற்றது. இதில் பருத்தித்துறை கிராமக்கோட்டைச் சேர்ந்த முகுந்தன் வசந்தி (வயது -45 ), துன்னாலை வடக்கு இந்திரம்மன் கோவிலடியைச் சேர்ந்த செல்லக்குமார் சயந்தன் (வயது- 19) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். (வ-21-422)



எழுதுமட்டுவாழ் பகுதியில் திடீரென பனை வடலிகளில் தீப்பற்றிதால் பெரும் பகுதி காடு அழிந்துள்ளதென பிரதேச மக்கள் தெரி வித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.
யாழ்.மாநகர தீயணைப்புப் பிரிவினரும் எழுதுமட்டுவாழில் நிலை கொண்டுள்ள படையினரும் இணைந்து மூன்று மணித்தியால போராட்டத்துக்குப் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். கொழுந்துவிட்டு எரிந்த தீயால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதென மக்கள் தெரிவித்தனர். (21-9)


## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழா இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூலை 6
கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் முன்னெடுக்கும் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிமையும் கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வுகள் நாடக விழாவாக வும் இரண்டாம் நிகழ்வுகள் இயல் இசை விழாவாகவும் முன்னெடுக் கப்படவுள்ளன.

இன்று இடம்பெறும் நாடக விழா கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும். இதில் முதன்மை விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் எஃப்.ரி.அல்பிரட்டும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க. திலகநாதனும் கலந்து கொள்வர். நிகழ்வில் ஆசியுரையை கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கமும் வாழ்த்துரையை மூத்த விரிவுரையா ளர் வி.எஸ் குணசீலனும் வழங்குவர். தமிழ் மணம், விசப் பாம்புகள், எப்போது விடியல், சிந்தனை செய் மனமே என்ற தலைப்பில் 40 நிமிடங்களுக்கு ஆற்றுகை செய்யப்படும் நாடகங்கள் போட்டி அடிப்படையில் மேடையேறவுள்ளன.

இரண்டாம் நாள் இயல் இசை விழா கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெறும். இதில் முதன்மை விருந்தினர்க ளாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முக தாஸ், தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (4)







இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளின் குருளைச் சாரணர்களுக்கான பயிற்சிகள் கடந்த சனிக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடை பெற்றன.
இந்தப் பயிற்சி வகுப்புகளில் காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தைச் சேர்ந்த சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து 13 குருளைச் சாரணர்கள் கலந்து கொண்டு சிறப்பாக பயிற்சிகளை மேற்கொண்டனர்.
அவர்கள் அதற்கான விருதுகளையும் பெற்றுக் கொண்டனர் என்று சாரணர் மாவட்ட ஆணையாளர் தெரிவித்தார். (21-9)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 6
புலோலி வில்லுபதி முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி 15ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (4)

## குடமுழுக்கு இன்று

ஊர்காவற்றுறை மருதவளவு மேலைக்கரம் பொன் முருகமூர்த்தி திருக்கோயில் வைரவப் பெருமானுக்குப் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு குடமுழுக்கு இடம்பெற வுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் நேற்று புதன் கிழமை 4.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகின. (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவாதத்தை...

எச்சரிக்கை விடுத்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றம் நேற்றுச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

“நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன மற்றும் அடிப்படைவாதங்களைப் பரப்பும் வகையில் திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தடுக்கவும், நாட்டில் சட்ட, ஒழுங்கைப் பாதுகாக்கவும் அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? 2014 ஆம் ஆண்டு அளுத்கம தர்கா நகர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் அரசால் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?” என்று மரிக்கார் இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும் இடையிலான ஒற்றுமையின் நிமிர்த்தம் எமது அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. கடந்த காலங்களில் (மகிந்த ஆட்சிக் காலத்தில்) திட்டமிட்ட இன மற்றும் அடிப்படைவாத நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. அரசின் அனுசரணை இல்லாமல் அவை அப்போது இடம்பெற்றிருக்கவில்லை. நாம் ஆட்சிக்கு வந்ததும் அவற்றை நிறுத்தவும் அமைதியை நிலைநாட்டவும் சகல நடவடிக்கைகளையும் எடுத்திருந்தோம்.

இன மற்றும் அடிப்படைவாதச் செயற்பாடுகளுக்குக் கடந்த ஆட்சியின்போது அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. இம்முறை அவ்வாறான அனுசரணை கிடைக்கவில்லை என்பதே இங்குள்ள வித்தியாசம். மக்கள் இதற்கு ஆதரவளிப்பதில்லை.

அதிகாரத்துக்கு வர முயற்சிப்பவர்களே இனவாதத்துக்கு அர்த்தம் கற்பிக்கப் பார்க்கின்றனர். எவ்வாறிருப்பினும், இன மற்றும் அடிப்படைவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முடிவடையும் வரை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன மற்றும் அடிப்படைவாதங்களைத் தூண்டிவிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இனங்களுக்கிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கு மக்களிடம் தகவல்களைப் பெற்றுத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கோ அல்லது விகாரைகளுக்கோ சேதம் ஏற்படும் பட்சத்தில் தகுந்த நட்டஈடுகளை வழங்குவதே எமது அரசின் கொள்கையாகும்.

இன மற்றும் அடிப்படைவாதங்களில் தொங்கி குறுகிய அரசியல் இலாபம் தேட முயற்சிப்பவர்களுக்கு ஆதரவளிக்கக்கூடாது. அவ்வாறு ஆதரவளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அதற்கு இங்கு இடமளிக்கப்படமாட்டாது -என்றார். (த)

## பன்னாட்டு...

கை வைக்க முடியாதவாறு பன்னாட்டுச் சமூகத்தின் ஒத்துழைப்பை பெறுவதற்குத் தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற அனைவருக்கும் நிழல், படைவீரர் வீட்டு உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

குறுகிய அரசியல் சதியின்றி நாட்டின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்காகவும் வீரமிகு படையினர் ஆற்றிய அர்ப்பணிப்புகளால் நாடும், மக்களும் பெற்ற வெற்றியை உறுதிப்படுத்தி முன்னோக்கிச் செல்வதே இன்று தேவையாக உள்ளது.

நாட்டில் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்பி தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசு பாடுபட்டு வருகின்றது. எதிர்காலத்தில் ஆட்சிக்கு வர கனவுகாணும் சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அந்தச் சதிகளை தோற்கடிப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்.

ஆட்சியிலுள்ளபோது கோடிக்கணக்கில் மக்கள் பணத்தையும், அரச சொத்துக்களையும் கொள்ளையடித்து அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பெரிய ஊழல், மோசடி மற்றும் குற்றம் புரிந்தோர் மீண்டும் ஆட்சிக்கு வருவதாக மக்களுக்கு காட்ட முயற்சிக்கப்படுகின்றது. கீழ்த்தரமான அரசியல் சதி ஊடாக அந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றிபெற முடியாது. இன்று போல் நாளையும் நாட்டுக்கு தேவையான செயற்திட்டங்களை தற்போதைய அரசு முறையாக நடைமுறைப்படுத்தும்.

இந்த நாட்டில் ஊடகவியலாளர்களை கொலை செய்து, அவர்களை காணாமற்போகச் செய்து, ஊடக நிறுவனங்களுக்கு தீ வைத்த காலத்தை முடிவுறுத்தி அனைத்து ஊடகவியலாளர்களினதும் உயிர்களை பாதுகாப்பதற்கும், ஊடக நிறுவனங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்த தற்போதைய அரசையே விமர்சித்து நாட்டில் பிரச்சினைகள் இருப்பதாக மக்களுக்கு காட்டுவதற்கு முயற்சிக்கும் சில ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கவலையடைவதாகவும் அரச தலைவர் இதன்போது குறிப்பிட்டார். (5)

## தெரிவுக்...

அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கடிதம் அனுப்பியுள்ளார். தான் சமர்பித்த பிரேரணை இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும், அந்தப் பிரேரணையை ஒத்திவைக்குமாறு தனக்கு யாரும் தெரிவிக்கவில்லை என்று, வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி நேற்று முன்னிரவு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்வதற்காக ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி பிரேரணை சமர்பித்திருந்தார். முதலமைச்சரின் அமைச்சு உள்ளிட்ட 5 அமைச்சுக்கள் மீதும் மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிவுக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும், கட்சித் தலைவர்கள் வடக்கு விவகாரம் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் இதனைப் பார்த்துக் கொள்ளலாம் என்றும், வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற சபை நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். இதனை ஒத்திவைப்பதாயின், வடக்கு மாகாண முதலமைச்சரும் விசாரணைக் குழு தொடர்பில் எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இதனையடுத்து முதலமைச்சரிடம் அறிவிப்பை ஒத்திவைக்கக் கோருவதற்கான பொறுப்பை எம்.கே.சிவாஜிலிங்கமும், பரஞ்சோதியின் பிரேரணையை ஒத்திவைக்கக் கோரும் பொறுப்பை ப.அரியரட்ணமும் எடுத்திருந்தனர்.

இதற்கிடையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பரஞ்சோதியின் பிரேரணையை ஒத்திவைக்குமாறு கோரி வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில், அவரது அணியினருக்கான கூட்டம் நேற்று மாலை நடைபெற்றுள்ளது. இதன்போது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கட்சித் தலைவர்கள் எல்லோரையும் அழைத்துப் பேசவுள்ளதாகக் குறிப்பிட்டு தனக்கு பதில் அனுப்பியுள்ளதைத் தெரிவித்துள்ளார். அத்துடன் விசாரணைக் குழு தொடர்பான அறிவிப்பையும் அதுவரை ஒத்திவைப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பிரேரணையைச் சமர்பித்த அ.பரஞ்சோதியிடம் நேற்று முன்னிரவு தொடர்பு கொண்டு கேட்டபோது, எனது பிரேரணையை இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளாமல் விடுவதற்கு யாரும் என்னிடம் கோரவில்லை என்று குறிப்பிட்டார். (5-101)

## காணாமற்...

நாடாளுமன்றத்தின் நிகழ்சி நிரலில், பலவந்தமாக காணாமற்போதலை குற்றமாக்கும் சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பு உள்ளடக்கப்பட்டிருந்தபோதும் அது எடுத்துக் கொள்ளப்படவில்லை. பிறிதொரு தினத்தில் அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

பலவந்தமாக காணாமற்போதலை குற்றமாக்கும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று பௌத்தபீடங்கள் அரசுக்கு அவசர அறிவிப்பை விடுத்திருந்தன. இந்தச் சட்டத்துக்கு எதிராக மகிந்த ஆதரவு அணியினரும் போராட்டங்களை நடத்தியிருந்தனர். முன்னாள் படைவீரர்களின் ஒன்றியமும் இதற்குப் பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது.

நாடாளுமன்றத்தின் நேற்றைய நிகழ்சி நிரலில் இரண்டு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இலஞ்ச, ஊழல் ஒழிப்பு பணிப்பாளர் நாயகத்தின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான பிரேரணை மற்றும் பலவந்தமாகக் காணாமற்போதலை குற்றமாக்கும் சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பு என்பனவே உள்ளடக்கப்பட்டிருந்தன.

முதலாவது பிரேரணை மீது விவாதம் நடத்தியிருக்க வேண்டியில்லாதபோதும், அதன் மீது விவாதம் நடத்தப்பட்டது. பின்னர் நேரம் போதாது என்று கூறி பிறிதொரு நாளில், பலவந்தமாகக் காணாமற்போதலை குற்றமாக்கும் சட்டவரைவை எடுத்துக் கொள்ளலாம் என்று தலைமை அமைச்சர் ரணில் சபையில் தெரிவித்துள்ளார். (5-101)

## புதிய...

கியுள்ளனர் எனவும், எனவே, அதன் பிரகாரமே அரசு செயற்படும் எனவும் அமைச்சரவை இணைப்பேச்சாளர்கள் தெரிவித்தனர்.

“புதிய அரசமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்பதை இந்த நாட்டின் 64 சதவீத மக்கள் அங்கீகரித்துள்ளனர். இந்த மக்கள் ஆணையை நிறைவேற்றுவதில் அரசு முக்கியத்துவம் வழங்கி செயற்பட்டு வருகின்றது. இதனை வேண்டாம் என்று கூறுபவர்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தவில்லை. மக்களின் ஆணையை நிறைவேற்றுவதிலேயே அரசு தீவிரம் காட்டி வருகின்றது” என்று அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் இணைப் பேச்சாளர்கள் ராஜித சேனாரத்ன, தயாசிறி ஜயசேகர ஆகியோர் கூறினர்.

புதிய அரசமைப்பு தேவையற்றது என மகாசங்கத்தினர் தெரிவித்துள்ளமை குறித்து செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர்கள் இந்த விடயத்தைக் குறிப்பிட்டனர்.

செய்தியாளர்: பொது எதிரணி இதற்கு உடன்படுவதில்லை என்று தெரிவித்துள்ளனரே?

அமைச்சர் தயாசிறி: இவ்வாறான கோசங்களினால்தான் நாட்டுக்கு இந்த நிலை ஏற்பட்டது. எதிர்க்கட்சிகளுடன் இது குறித்து நாம் பேச்சு நடத்துகின்றோம். பொது உடன்பாடு காணவேண்டும் என்பதே நோக்கமாகும்.

போரின் பின்னர் தமிழ் மக்களுக்குத் தமது பிரச்சினை தொடர்பில் பெரும் மனஅழுத்தம் உண்டு. தமது பிரச்சினைக்குரிய தீர்வு காணப்படவேண்டும் என்பதே அவர்களது உள்ளக்கிடக்காகும். இதேபோன்று முஸ்லிம் மக்களுக்கும் இதே மனவேதனை உண்டு. வடக்கு, கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் மத்தியிலும் இவ்வாறான நிலமை உண்டு.

இறைமை, மதங்களுக்கான உரிமை உள்ளிட்ட விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டைச் சுபீட்சம் மிக்கதாக முன்னெடுப்பதற்காகவே புதிய அரசமைப்பு தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்தியுள்ளனர். நாடு முன்னோக்கிப் பயணிக்கவேண்டும். மீண்டும் 2500 ஆண்டுகள் பின்னோக்கி நகர்த்தக்கூடாது. அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து பேசும் இடம்தான் அரசமைப்புச் சபையாகும். இங்குதான் இவற்றைப் பேசவேண்டும். இங்கு பேசுவதற்கு உடன்படுகின்றனர். இங்கு பேசுபவற்றை வெளியில் வந்து திரிபுபடுத்துவது அநாகரிகமாகும். இந்தச் சபையில் பல்வேறு பட்ட கருத்துக்கள் உண்டு. இது இறுதி முடிவல்ல. அரசமைப்பு விடயத்தில் இறுதி முடிவு எட்டப்படவில்லை. பேச்சு மட்டத்திலேயே உண்டு. கட்சிகளின் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் உண்டு. இந்தக் கருத்துக்களை விகாரைகளிலும் வேறு இடங்களிலும் விமர்சிப்பது பொருத்தமானது அல்ல. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. 2000ஆம் ஆண்டிலும் புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட்டது. அது தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. மக்களின் கருத்தை ஒன்றிணைப்பது அரசியல் பேரவையில் மேற்கொள்ளப்படும் பேச்சின் மூலமே ஆகும். இதனைச் சீரழிக்கவேண்டாம்.

அமைச்சர் ராஜித: மக்கள் விரும்பும் அரசமைப்பொன்றை இப்பொழுது வேண்டாம் என்று சிலர் கூறுகின்றனர். இவர்களின் கருத்து என்னவென்று நமக்குப் புரியவில்லை. அதிகாரம் பகிரப்பட்டபோது அனைவரும் கூக்குரல் எழுப்பினர்.

அரச தலைவர் நாடாளுமன்றத்தின் கருத்தையும் அறிந்து பொதுமக்களின் கருத்தையும் அறிந்து இதனை முன்னெடுக்கவுள்ளார். புதிய அரசமைப்பின் அவசியத்தைக் கடந்த பொதுத்தேர்தலிலும், அரச தலைவர் தேர்தலிலும் வாக்களித்த பெரும்பான்மை மக்கள், பௌத்த மத பிக்குகள், மதகுருமார்கள் ஆகியோர் உணர்த்தியுள்ளனர்.

புதிய அரசமைப்பு விடயத்தில் பொதுமக்களின் கருத்தறியும் பொது வாக்கெடுப்பு சிறப்பானதாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இந்த விடயத்தில் பெருந்தன்மையுடனேயே நடக்கின்றார். பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளாத தீர்வை அவர் விரும்பவில்லை. பெரும்பான்மை சிங்கள மக்களின் விருப்பத்துடனான அரசியல் தீர்வையே அவர் விரும்புகின்றார் - என்றார். (த)

## வடக்கு...

வது, வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவையான ரூபா 30 கோடி (300மில்லியன்) நிதியை கொழும்பு அரசு இதுவரை வழங்கவில்லை. எந்தெந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எவ்வளவு நிலுவைகள் வழங்கப்படவேண்டும் என்ற விபரத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு பரிந்துரை செய்துள்ளது.

ஆனால் இதுவரை கொழும்பு அரசிடம் இருந்து நிதி கிடைக்கப்பெறாததால் கொழும்பு அரசிடம் நிதியை வழங்கக் கோரி வடக்கு மாகாண ஆளுநரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

30கோடி நிதி என்பது சாதாரண தொகை அல்ல. ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் தமது கடமைகளைச் செய்தபின்னர் வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவைகள் இதுவரை வழங்கப்படாததால் பலர் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். பலர் கடன்சுமைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே வடக்கு மாகாண ஆளுநர் கொழும்பு அரசிடம் இருந்து 30கோடி நிதியை விரைவாக விடுவித்துத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம். இதுவரை காலமும் எமது குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பொறுத்திருந்த நாம் இனிமேலும் பொறுக்கமுடியாத அளவுக்கு சுமைகளைச் சுமக்கின்றோம். எமக்கான நிலுவைகள் விரைவில் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் கற்பித்தல் பணிகளைப் புறக்கணிக்கப்போம் என்று ஆளுநரிடம் எடுத்துரைத்துள்ளோம்- என்றுள்ளது. (4)

## முதல்வர்...

அவரையும் அழைத்து ஒன்று கூடிப் பேசித் தீர்ப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் விவகாரம், வடக்கு மாகாண சபையின் அமர்வில் எடுத்துக் கொள்வதற்காக சமர்பிக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவைக் கோரும் பிரேரணை விடயம் தொடர்பில் பேசப்பட்டது.

இதன்போது கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் எல்லா விடயங்களையும், கூட்டமைப்பின் சகல கட்சித் தலைவர்கள், வடக்கு முதலமைச்சரையும் அழைத்துப் பேசித் தீர்ப்போம் என்று பதிலளித்துள்ளார். (5-101)

## ஓகஸ்ட்...

பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளதுடன் இந்தப் பரீட்சையில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 227 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

அதேபோன்று, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, 3 ஆயிரத்து 14 மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளதுடன் இதில் 3 இலட்சத்து 56 ஆயிரத்து 728 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள் அடைப்புக்கான வரி செலுத்துவதற்கு 20 பவுண் நகைகள் வங்கியில் அடைவு

## வாழ்வாதார தொழிலைக் காப்பாற்ற கோணவில் போத்தல் கள் நிலையப் பணியாளர்கள் துணிகரம்



கிளிநொச்சி, ஜூலை 6

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அனுமதி வழங்காததால் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கோணாவில் போத்தல்கள்அடைப்புநிலையப்பணியாளர்கள்தமது தங்கநகைகளைஅடைவுவைத்துமதுவரித்திணைக்களத்துக்கு உற்பத்தி வரி செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமுகாமையாளர் உட்பட சங்க பணியாளர்கள் அனைவரும்ஒன்றிணைந்துதமதுதங்கநகைகளைச் சேர்த்து 20 பவுண் நிறையுடைய தங்க நகைகளை நேற்றுகிளிநொச்சிமக்கள்வங்கியில்அடைவுவைத்து மதுவரித்திணைக்களத்துக்கு18லட்சத்து88ஆயிரத்து 218 ரூபா 75 சதம் நிதி உற்பத்தி வரியாக செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கோணாவில் போத்தல் கள் அடைப்பு நிலையத்தினர் தெரிவித்ததாவது:, "கிளிநொச்சிபனைதென்னைவளஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கோணாவில் போத்தல் கள் அடைப்பு நிலையத்தில் இந்த வருடம் 5 இலட்சம் போத்தல்களில் அடைக்கப்பட்டு ரூபா 15 மில்லியனுக்கு மேல் உற்பத்தி வரியாக மதுவரித் திணைக்களத்துக்குச்செலுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொருமாதமும் 15 நாள்களுக்கு ஒரு தடவை இந்த உற்பத்தி வரி செலுத்தவேண்டும். தற்போதுவரிஅதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி மக்கள் வங்கியில் எமது சங்கத்தின் பெயரில் நிரந்தர வைப்பில் உள்ள 62 மில்லியன் ரூபா நிதிக்கு எதிராக 10 மில்லியன் ரூபா கடன் பெறுவதற்கு விண்ணப்பித்தபோது, கடன் பெற முடியாது. நிரந்தரவைப்பைமுடிவுறுத்திஅதில்இருந்து பணத்தைப் பெற்று வரிகளைக் கட்டுமாறு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூறியதற்கு அமைவாக, சுமார் 75 இலட்சம் ரூபாவுக்கான அனுமதிகள் கிடைக்கப்பெற்று நாம் வரிகளைச்செலுத்தியுள்ளோம். ஆனால், இந்தமாதம் முதலாம் திகதி மதுவரித் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய உற்பத்தி வரி ஆகக் குறைந்தது ரூபா 2 மில்லியன் 05.07.2017 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறும் பட்சத்தில் மதுவரித் திணைக்களத்தினால் எமது போத்தல் கள் அடைப்பு நிலையம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமன்றிக் கட்டப்படாத தொகைக்குமூன்றுவீதவட்டியுடன்தொடர்ச்சியாகநிதி செலுத்தவேண்டும். இந்தவிடயம்சம்பந்தமாகவடக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளரிடம் தெரியப்படுத்தியபோது, நிரந்தரவைப்பில்இருந்துநிதியை பெற முடியாது என்றும், அங்கத்தவர்களின் சம்பளத்தை குறைத்துக் கொடுத்து மதுவரித் திணைக்களத்துக்குவரியைச்செலுத்துமாறுகூறியுள்ளார். இந்த நிலையில் அங்கத்தவர்கள் நாளாந்தம் இந்த உழைப்பைநம்பியேஅவர்களின்ஜீவனோபாயத்தை கொண்டுசெல்கின்றனர்.

எனவே, கோணாவில் போத்தல் கள் அடைப்பு நிலையத்தைப் பூட்டினால், அங்கத்தவர்கள் நாளாந்தம் அடைப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்லும் சுமார் 4 ஆயிரம் போத்தல் கள்ளும் நிலத்தில் ஊற்றப்படும் அபாயம் ஏற்படும். இதனால், அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். உற்பத்தியை நிலத்தில் ஊற்றினால் பெரும் கடன் சுமையினை அங்கத்தவர்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

சங்கத்தின் நிதிப்பற்றாக்குறையால், நகைகள்அடைவு வைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கள் அடைப்பை மேற்கொள்ள நிதி இல்லாமை தொடர்பில் அவசர பணிப்பாளர்சபைக் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுக்க நிர்வாகம் முடிவெடுத்துள்ளது-என்றனர். (21-35)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு ஓகஸ்ட்டில்நிரந்தர நியமனம்

## வழங்குவதற்குச் சாத்தியமுள்ளதாக கூறுகிறார் கல்விச் செயலர்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடக்கு மாகாணத்தில் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் கடிதங்கள் அடுத்த மாதம் வழங்கப்படலாம் என்று எதிர்பார்ப்பதாகவடக்குமாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன்தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்குமாகாணத்தில்தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தர நியமனம் செய்வதற்கு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் பங்குபற்றிய ஆயிரத்து 79 பேரில் 676 பேருக்கு மட்டுமே நியமனங்கள் கிடைப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களிலும் 2011 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2011 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதி உள்ளடங்கலாகத் தொடர்ச்சியாக 3 வருடங்களுக்குக்குறையாது பணியாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வகையிலேயே இந்த நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் தவணைப் பரீட்சை நிறைவடைந்துமூன்றாம்தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் செப்ரெம்பர் மாதம்ஆரம்பமாகும். அதன்போது அவர்கள் கடமையில் ஈடுபடக் கூடிய வகையில் அடுத்த மாதம் நியமனக்கடிதங்கள்வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார். (4-ரி)

# இழப்பீடுகள் வழங்கிய பின்னரே சாலைகளை அகலிக்க வேண்டும்

## உலக வங்கியின் நிபந்தனையால் பணிகள் மேலும் தாமதமாகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணம்-பொன்னாலை, கொடிகாமம்-பருத்தித்துறைச் சாலைகளை அகலிப்புச் செய்வதில் தாமதம் ஏற்படக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அகலிக்கப்பின்பொது, பிரதேச பொதுமக்கள் காணிகளை இழக்கும் நிலை ஏற்படும். அந்த மக்களுக்கு இழப்பீடு வழங்கிய பின்னரே, அகலிப்புப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று உலக வங்கி வலியுறுத்தியுள்ளதால் இந்த நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக வங்கியின் நிதி உதவியில், யாழ்ப்பாண நகர அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் பொன்னாலை - பருத்தித்துறைச் சாலையும், கொடிகாமம் - பருத்தித்துறை சாலையும் அகலிப்புச் செய்யப்படவுள்ளன. முதற்கட்டமாக சாலைகளை அகலமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சாலை அகலிப்பு நடவடிக்கைகளின் போது, மக்களின் ஒப்புதல் கடிதங்களைப் பெற்றுச் சாலைகள் அகலிக்கப்பட்டன. தற்போதும் அதேபோன்றதொரு நடவடிக்கையைப் பின்பற்றினால், சாலை அகலிப்பு வேலைகளை வேகமாக முன்னெடுக்கலாம் என்ற அடிப்படையில், திட்டத்தைச் செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சாலை அகலிப்பினால் காணிகளை இழக்கும் மக்களுக்கு இழப்பீடுகளை வழங்கிய பின்னரே, சீரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கடுமையான நிபந்தனையை உலக வங்கி விதித்துள்ளது.

இதனால் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் அளவிலேயே சீரமைப்புப் பணிகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (5)

# திண்மக் கழிவு டெங்கு பரவலுக்கு சிறப்புக் கவனம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார். யாழ்ப்பாணமாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலான 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகைப் போட்டிகள் தொடர்பான ஆய்வுகள் உரிய அதிகாரிகளால் ஜூலை மூன்றாம் வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன என்று யாழ்ப்பாண பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந. திருலிங்கநாதன் சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜூலை தொடக்கம் இந்த வருடம் ஜூன் வரையான காலப்பகுதியில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள்தொடர்பானஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருக்குமாறும்அறிவித்துள்ளார். (4,9)

# வடக்கு காளான் செய்கையாளர் பிரச்சினை குறித்து ஆராய்வு

## மார்க்கந்துறைக் காளானும் இன்று அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடக்கிலுள்ள காளான் செய்கையாளர்கள், காளான் செய்கையில் பல பிரச்சனைகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவற்றுக்கான தீர்வுகள் பற்றி ஆராய்ச்சியாளர்கள் இன்று தெளிவுபடுத்தவுள்ளனர். மார்க்கந்துறைவெள்ளைக்காளானும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டவிவசாயபயிற்சிநிலையத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன என்று வடக்கு மாகாணவிவசாயத்திணைக்களப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார். இந்தப் பயிற்சி நெறியில் மார்க்கம்துறை என்ற இடத்தில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திலிருந்து ஆராய்ச்சியாளர் பாலித ராஜபக்சகாளான்வளர்ப்புதொடர்பிலும் அது சார்ந்த ஆராய்ச்சிக் கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார். காளான் செய்கையில் நவீன தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பிலும் இன்று ஆராயப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் காளான் வளர்ப்பில் ஈடுபடும் பயனாளிகளுக்குக் காளான் வளர்ப்பு தொடர்பானபயிற்சிநெறியும்இன்றுவழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்காக வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் காளான் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். இப்பயிற்சிநெறிக்குகோபியா என்ற நிறுவனம் அனுசரணை வழங்குகிறது.

காளான் செய்கை கடந்த வருடம் சிறப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. காளான்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும்அவர்களின்காளான் உற்பத்தியைஅபிவிருத்திசெய்யும் வகையிலும் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதற்குயாழ்ப்பணத்திலிருந்து 15 காளான் செய்கையாளர்களும், கிளி நொச்சியிலிருந்து 30 காளான் செய்கையாளர்களும், மன்னாரிலிருந்து 11 காளான் செய்கையாளர்களும், வவுனியாவிலிருந்து 13 காளான்செய்கையாளர்களும், முல்லைத்தீவிலிருந்து 22 காளான் செய்கையாளர்களுமாக வடக்கு மாகாணத்தில் 91 காளான் செய்கையாளர்கள் இந்த பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றவுள்ளனர்.



இந்தப் பயிற்சிப் பட்டறையில் காளான் செய்கையாளர்கள் தாங்கள் காளான் செய்கையில் எதிர்நோக்கும்பிரச்சனைகளைவெளிப்படுத்தமுடியும். காளான் செய்கையில் நவீன தொழில்நுட்பங்களை எவ்வாறுபயன்படுத்தலாம்என்பது தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது. (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை விதை வெங்காய நாற்றுக்களை நடுகை செய்வதில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்.ஜூலை 6
வடக்கு மாகாணத்தில் வெங்காயச் செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு தற்போது வெங்காய நாற்று மேடைகள் ஊடாக நாற்றுக்கள் உற்பத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் உண்மை விதை வெங்காயத்தைப் பயன்படுத்தி நாற்று மேடைகளை அமைத்துள்ளனர். இந்த நாற்று மேடைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் வெங்காய நாற்றுக்கள் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டும் வருகின்றன. அநேகமான செய்கையாளர்கள் இந்த உண்மை விதை வெங்காய நாற்றுக்களைப் பயிரிட்டும் வருகின்றனர்.
குடாநாட்டில் ஏற்கனவே சின்னவெங்காய விதைகளுக்குப் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் நிலவி வருகின்றன. இந்தச் சின்னவெங்காய விதைகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் செய்கையாளர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.
விதை வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள பற்றாக் குறையினாலும் போதியளவு செய்கையில் விவசாயிகள் ஈடுபட முடியாநிலை ஏற்பட்டுள்ளன. ஆயினும் அநேகமான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொல்புரம், அராலி, சண்டிலிப்பாய், கரவெட்டி போன்ற இடங்களில் உண்மை விதை வெங்காய நாற்றுக்களை நடுகை செய்து வருவதாக வடக்கு மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார். (21-17)

### கொக்கிளாய் வாடி தொடர்பில்

# சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனை மீள்பரிசீலனை

## கொழும்பு பறக்கிறது அதிகாரிகள் குழு

முல்லைத்தீவு, ஜூலை 6
முல்லைத்தீவு கொக்கிளாய் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடுவது தொடர்பில், தென்னிலங்கை மீனவர்களுக்குச் சாதகமானதெனக் குற்றஞ்சாட்டப்படும் சட்டமா அதிபரின் ஆலோசனை இன்று மீள்பரிசீலனை செய்யப்பட உள்ளது. வாடியின் அமைவிடம் தொடர்பான வரைபடங்கள், மற்றும் ஆவணங்களுடன் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் இன்று கொழும்பில் சட்டமா அதிபரைச் சந்திக்க உள்ளனர்.
முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைக்கப் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட நிலப் பகுதி தென்னிலங்கை மீனவர்களின் கரைவலைப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குகின்றது. எனவே உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதற்குத்தடைவிதிக்க வேண்டும் எனக் கோரி தென்னிலங்கை மீனவர்கள் 3 பேர் சார்பில் முல்லைத்தீவு நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது. இதனால் உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட நீதிமன்றால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு விசாரணைகளும்தொடர்ந்து இடம்பெறுகிறன. உள்ளூர் மீனவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்ட நிலப்பகுதி தென்னிலங்கை மீனவர்கள் தொழிலில் ஈடுபடும் பகுதியிலிருந்து 375 மீற்றருக்கு அப்பாலேயே உள்ளது என்று அரச நில அளவையாளர் மூலம் மேற்கொண்ட அளவீட்டின் ஆவணம் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலாளரால் நீதிமன்றில் முன்வைக்கப்ப ட்டது. எனினும் பிரதேச செயலாளரின் அளவை வரைபடத்தை நீக்கம்செய்து அந்தப் பகுதியைக் கரைவலைப்பாடுதொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களிடம் வழங்கவேண்டும். என்று நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் கோரியிருந்தனர். இதனால் குறித்த பகுதியைச் சகல தரப்பின் பங்குபற்றலுடன் மீண்டும் அளவை செய்யுமாறு நீதிமன்று கட்டளையிட்டிருந்தது. நில அளவீடு இடம்பெற்ற போதும் தென்னிலங்கை மீனவர்கள் குறுக்கீடு செய்தனர். முறையான வகையில் அளவீடு இடம்பெறாததால் குறித்த பகுதியில் தொழில் செய்வதற்கு உள்ளூர் படகுத் தொழிலாளர்களுடன் தென்னிலங்கைக் கரைவலைத் தொழிலாளர்களுக்கும் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.
இரு தரப்புக்கும் தடை விதிக்கப்பட்டபோதும் தென்னிலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் சட்டத்தை மீறித் தொழிலில் ஈடுபடுகின்றனர். எனவே உள்ளூர் மீனவர்களையும் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு மன்றில் கோரப்பட்ட நிலையில் இன்றுவரை தடை உத்தரவு தொடர்கின்றது.
இருப்பினும் இந்தப் பிரச்சினை தொடர்பில் இறுதி முடிவை நீதிமன்று கோரியது. இந்தப் பிரச்சினைக்குச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெறுவதற்காக நீரியல் வளத் திணைக்களம் முடிவு செய்தது. எனினும் கடந்த 2 தவணைகளின் போதும் நீதிமன்றில் சட்டமா அதிபரின் அறிக்கை முன்வைக்கப்படவில்லை. உள்ளூர் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பது தொடர்பில் ஆராய்வதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் ஆகியோரைச் சட்டமா அதிபர் அழைத்தார். இந்தச் சந்திப்பு கடந்த வியாழக்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இடம்பெற்றது. அங்கு மேற்படி விடயம் பிரதிச் சட்டமா அதிபர் தலைமையில் மூன்று தரப்பினரின் முன்னிலையில் ஆராயப்பட்டது. இதன் பின்னரே உள்ளூர் மீனவர்களால் அமைக்கப்பட்ட வாடி பிரதிச்சட்டமா அதிபரினால் பின்நகர்தப்பட்டது. உள்ளூர் மீனவர் சங்கத்தின் பாவனைக்காக வழங்கப்பட்ட நிலத்தில் அமைக்க முயன்ற வாடியை அந்த இடத்தில் இருந்து வடக்குத் திசைநோக்கி 275 மீற்றர் தூரம் நகர்த்தி நிரந்தர வாடி அமைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. சகல தரப்பினரும் இணக்கத்துக்கு வந்தனர். அதன்கான் உறுதிப்பாட்டில் ஒப்பமிட்டிருந்தனர். இதன் பிரகாரம் குறித்த விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முல்லைத்தீவு நீதிமன்றுக்கும் எழுத்தில் அறிவிக்கப்பட்டு எதிர் வரும் தவணையுடன் குறித்த வாடி தொடர்பான வழக்கு முடிவுறுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.
இந்த நிலையில் சட்டமா அதிபரினால் பின்னகர்த்தப்பட்டு உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட பகுதி பாறைகள் நிறைந்த பகுதி . அதில் எப்போதும் படகுகளை நிறுத்தி வைக்க முடியாது. எனவே அதிகாரிகள் இந்த முடிவை மீள் பிரிசீலனை செய்ய வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் மரியராசா கேட்டுகொண்டார். இதனை நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளும் நேரில் சென்று ஆய்வு செய்தனர். சட்டமா அதிபருக்கு அறிக்கையிட்டனர்.
இவ்வாறான தொரு பின்னணியிலேயே இன்று வாடி தொடர்பான பிரச்சினைகள் சட்டமா அதிபர் முன்னிலையில் ஆராயப்பட உள்ளன. (21-101)

## உயர் குருதியமுக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

★ஒழுங்காக மருத்துவ சிகிச்சையைப் பெற்று வருதல், காலையில் மருந்தை எடுத்தல் பின்னரே சிகிச்சை பெற செல்லல் வேண்டும்.

★கர்ப்பகாலத்தில் ஏற்படும் குருதியமுக்கம், குழந்தை பிறப்பின் பின்பு கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்.

*தகவல்*
*சு.வை.அ.பணிமனை,*
*யாழ் .மாநகரசபை*

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

# பெற்றெடுத்த குழந்தையை வேறொருவரிடம் கொடுத்து தலைமறைவானார் தாய்

## அநாதரவாகித் தவிக்கிறது குழந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 6
குழந்தையைப் பிரசவித்த தாய், வைத்தியசாலையிலிருந்து வீடு செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் நின்றிருந்த பெண்ணிடம் உடுப்புப் பையை எடுத்துவருகிறேன் குழந்தையை வைத்தி ருங்கள் என்றுகூறிச் சென்ற அவர் தலைமறைவானார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
வைத்தியசாலையின் விடுதியில் பிறந்து ஐந்தே நாள்களான குழந்தையே இவ்வாறு தாயாரால் விட்டுச் செல்லப்பட்டுள்ளது.
அவர் குழந்தையைப் பிரசவித்து ஐந்து நாள்களாக வைத்தியசாலையின் விடுதியில் தங்கியிருந்தார். நேற்றுமுன்தினம் தாயும் குழந்தையும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைக்கு அண்மையில் குறித்த தாய் நின்றிருந்த போது அருகில் நின்ற பெண்ணை உதவிக்கு அழைத்துள்ளார். குழந்தை பிரசவித்த அந்தத் தாயின் நிலைமையைப் பார்த்து அருகில் நின்ற பெண் உதவி செய்தார். தனது புடவையுடன் கூடிய பொதியை வைத்தியசாலை விடுதியில் வைத்துவிட்டுவந்துள்ளேன். அங்கு சென்று அதனை எடுத்து வருகிறேன். அதுவரை இந்தக் குழந்தையை வைத்திருங்கள் என்றுகூறித் தான் பெற்ற குழந்தையை அங்கு நின்ற பெண்ணிடம் கொடுத்துவிட்டுத் தாயார் சென்றுள்ளார். பின்னர் அவர் திரும்பி வரவே யில்லை. குறித்த தாய் நெடுநேரமாகியும் திரும்பி வராததால் சந்தேகம் கொண்ட பெண் அது தொடர்பில் அங்கு நின்றவர்களிடம் உதவி செய்த பெண் சம்பவத்தை விபரித்துள்ளார். அது தொடர்பில் வைத்தியசாலை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.
தேடுதல் நடத்தியும் குறித்த தாயைக் காணவில்லை. அதன்பின்னர் குறித்த குழந்தையை வைத்திய சாலைத் தரப்பினர், புதிதாகப் பிறந்த குழந்தைகளை வைத்திருக்கும் பகுதியில் வைத்திருக்கின்றனர்.
இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்ப ட்டுள்ளதாகத் தெரிவிக்கப்ப ட்டது. போதனா வைத்திய சாலையில் சில தினங்களுக்கு முன்னர் கணவனை இழந்த பெண் ஒருவர் பிரச வத்துக்காக விடுதியில் தங்கியுள்ளார். அந்தப் பெண் இவ்வாறு செய்திருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்த பின்னர் மேலதிக விடயங்களைக் கூறமுடியும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (4-8)

## வவுனியாவில் நீர்நாய்

வவுனியா, ஜூலை 5
வவுனியாவில் பாடசாலை மைதானம் ஒன்றில் அரிய வகை மிருகம் இனங்காணப்பட்டது. அது நீர்நாய் என்று கூறப்பட்டது.
வவுனியா ரீராம்புரம் திருஞான சம்மந்தர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்துக்குள் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் அரியவகை உயிரினம் நடமாடியதைப் பாடசாலை மாணவர்கள் அவதானித்து அதிபரிடம் கூறினர். பாடசாலை அதிபர் கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தினார். சம்பவ இடத்துக்குச் சென்ற கிராம அலுவலர் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு அறிவித்தார்.
விரைந்து வந்த அதிகாரிகள் அது நீர்நாய் என்று உறுதிப்படுத்தினர். அதனை மீட்டு அனுராதபுரம் வனஜீவராசிகள் காரியாலயத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். இந்த வகை உயிரினம் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்டமை இதுவே முதன் முறை என்று தெரிவிக்கப்பட்டது.





*யாழ்ப்பாணம் சித்தன்கேணியில் பெரியவளவு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபி ஷேக நிகழ்வை முன்னிட்டு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் மிருதங்க பேராசான், கலா பூஷணம் க.ப.சின்னராசாவின் மாணவப் பரம்பரையினர் 108 பேர் கலந்து கொண்டு மிருதங்கத்தை இசைத்தனர். (21)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்புப் பணிகளில் 1,125 சிவில் பாதுகாப்பு ஊழியர்

கொழும்பு, ஜூலை6
நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் பணியில் நாடெங்கும் 1,125 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிடுள்ளனர் எனச் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான மேஜர் வஜிர குமாரதுங்க தெரிவித்தார்.
மொனராகலை, மகாஓயா, வில்பத்து, வெலிஓயா, அம்பாறை, திருகோணமலை, கெப்பிற்றிக்கொலாவ, பொலநறுவை, ஹொரவபொத்தான மற்றும் மெதிரிகிரிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 1,125 ஆண், பெண் உத்தியோகத்தர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.
அதேவேளை, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகமவின் ஏற்பாட்டில் களுத்துறை, கொழும்பு, கம்பஹா, ஜாஎல, பாணந்துறை, மஹரகம, கொலன்னாவ, நீர்கொழும்பு, ராகம ஆகிய பகுதிகளில் சுத்திகரிப்புப் பணிகளில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (த-ய)

# மருமகனின் நிறுவனத்துக்காக விதிகளை மாற்றினார் அர்ஜுன்

## மத்திய வங்கியின் மேலதிகப் பணிப்பாளர் சாட்சியம்

கொழும்பு, ஜூலை06
அர்ஜுன் மகேந்திரன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த சமயத்தில் மத்திய வங்கியின் ஏல விற்பனைகளின்போது தனது மருமகனான அலோசியஸின் நிறு வனத்துக்கு அதிக இலாபம் கிடைக்கும் வகையில் வங்கியின் விதிமுறைகளை மாற்றினார் என இலங்கை மத்திய வங்கியின் மூத்த மேலதிகப் பணிப்பாளர் திருமதி ஸ்டெபானி பெர்னாண்டோ தெரிவித்தார்.
பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்துவரும் அரச தலைவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
மத்திய வங்கியில் நடைபெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பில் உயர்நீதிமன்ற நீதியரசர் கே.டி.சித்திரசிறியின் தலைமையில் உயர்நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன எஸ்.ஜயவர்த்தன, ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம் கே.வேலுப்பிள்ளை ஆகியோர் அடங்கிய அரச தலைவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் அவர் சாட்சியமளித்திருந்தார்
2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி காலை அரச கடன் பிரிவில் நடந்த ஏல விற்பனைக்கு இருமுறை பயணம் செய்த அர்ஜுன் மகேந்திரன் அலோசியஸின் நிறுவனம் அதிக இலாபத்தைப் பெறும் விதத்தில் ஏல விதிமுறைகளை மாற்றினார் எனச் சாட்சியத்தில் கூறினார். (த-ய)

# பயண எச்சரிக்கையை புதுப்பித்தது பிரிட்டன்

கொழும்பு, ஜூலை06
இலங்கைக்குச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் தமது நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கான எச்சரிக்கையைப் பிரிட்டன் அரசு புதுப்பித்துள்ளது.
இலங்கையில் நடக்கும் பாலியல் தாக்குதல் ஆபத்துக்கள், ஆபத்தான குடிபானங்கள், வீதி விபத்துக்கள், டெங்குத் தொற்று மற்றும் கடன் அட்டை மோசடி தொடர்பிலேயே சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஆயுத மேந்திய கும்பல்கள் செயல்படுவதாகவும், கடத்தல் மற்றும் வன்முறைக்கு அவர்கள் பொறுப்பாளியாக அறியப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.
அத்துடன் இலங்கையின் நீதித்துறைச் செயற்பாடுகள் மிகவும் மெதுவாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-ய)

# அரச, தனியார்துறைகளில் வெற்றிடங்கள் கணக்கெடுப்பு

கொழும்பு, ஜூலை06
அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில், இந்த மாதம் கணக்கெடுப்பொன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகக் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்தக் கணக்கெடுப்புக்கு 3,500 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
மேலும், முக்கிய சில துறைகள் தொடர்பில் தகவல் திரட்டப்படுவதுடன் அதிக வெற்றிடங்கள் காணப்படும் தொழில்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-ய)

# தேர்தலை பிற்போடுவது அரசுக்குப் பின்னடைவு

உள்ளூராட்சித் தேர்தலை தொடர்ந்தும் பிற்போடுவதானது அரசுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்துமெனத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டு தேர்தலைப் பிற்போட்டு மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதானது அடுத்த தேர்தலில் அரசின் தோல்விக்கே வழிவகுக்கும்.
பழைய தேர்தல் முறையிலாவது தேர்தலை நடத்த வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கத் தயாரின்றியே உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளார் - என்றார். (த-ய)

# உமாஓயா நெருக்கடி குறித்து அமைச்சரவையில் அறிக்கை

உமா ஓயா திட்டம் தொடர்பில் எழுந்துள்ள நெருக்கடி பற்றி ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புப் பயணத்தின் அறிக்கை இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உமா ஓயா திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் மீண்டும் கொழும்புக்கு அழைத்து விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.
உமா ஓயா திட்டத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு நீண்டகால மற்றும் குறுங்கால தீர்வுகள் அவசியமாகும். இந்த நிலையில் அந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களைத் தொடர்ந்தும் அங்கு வாழ அனுமதிப்பது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.
இதனால் தோட்ட நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான 500 ஏக்கர் காணியைச் சுவீகரித்து அங்கு மக்களைக் குடியமர்த்தவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (த-ய)





ஊர்காவற்றுறை – மருதவளவு மேலைக்கரம்பொன்
முருகமூர்த்தி திருக்கோயில்
வைரவப் பெருமான் புனராவர்த்தன அஷ்ட பந்தன ஏக குண்ட பட்க்ஷ
மகா கும்பாபிஷேக சிறப்புமலர் - 06.07.2017

கும்பாபிஷேகம்
இன்று (06.07.2017) வியாழக்கிழமை
முற்பகல் 10.30 - 11.00 வரையுள்ள சுபவேளையில்

கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை

ஊர்காவற்துறையில் மருதவளவு மேலைக்கரம்பொன் பதியிலே வீற்றிருந்து அருள்பாலித்து கொண்டிருக்கின்ற முருகமூர்த்தி ஆலயத்தின் வெளிவீதியிலே வைரவப் பெருமா னுக்கோர் ஆலயம் அமைத்து இன்றைய தினம் மகாகும்பாபிஷேகம் இடம் பெறவிருக்கின்றது. இவ் வைரவர் ஆல யத்தை திருவாளர்கள் பற்குணராஜ அம்பிதேவி தம்பதியினர் தமது தனிப்பட்ட உபயமாக ஏற்று நிர்மாணித்து கும்பாபிஷேகம் செய்கின்றார்கள். இல்லறத்துக்கு தெய்வ சாகித் தியம் நிலைத்திருக்க வேண்டுமென பிரார்த்தனை செய்து கொள்கின்றேன். இவ்வாலய கட்டுமானப் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு ஆலய கட்டட நிர்மாணம் செய்த சத்தி யளுபன் குழுவினருக்கும் இக்கிராமத் தில் வாழ்கின்ற அடியவர்களுக்கும் இக் கும்பாபிஷேக பலன் கிட்ட இறைவனை பிரார்த்தித்து அனைவருக்கும் அனைத்தும் கிடைத்து அவர்கள் தம் வாழ்வு வளம் பெற வேண்டும் என ஆசி கூறி அமைகின்றேன்.

சிவாச்சார்ய இளவரசு, சக்தி கிரிஜா வியாசர் சக்தி தாசன்,
கிரிஜாஞானபானு சமா ஸ்ரீ தேசமான்ய
சிவஸ்ரீ.சிவ. கமல்ராஜ்குருக்கள்
வண்ணை ஸ்ரீ வீரகாளியம்மன்
ஆலய குரு முதல்வரும், ஆதீனகர்த்தாவும், யாழ்ப்பாணம்.

ஆசிச்செய்தி

ஊர்காவற்துறை -மருதவளவு மேலைக்கரம்பொன் முருகமூர்த்தி ஆலயத்தின் வெளிவீதியிலமைந்துள்ள வைரவப் பெருமானுக்கு இன்று மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நடைபெற திரு வருள் பாலித்துள்ளது. வயிரவப்பெருமான் அகந்தையையழித்து அதற்கான தண்டமும் கொடுத்து அருள் பாலிப்பவர். முன்னொரு பொழுது பிரமதேவர் சிவனை இகழ்ந்து தானே முழுமுதற் கடவுளென அகந்தை கொண்ட போது சிவனது திருவருளால் அவரது உள்ளத்திலிருந்து வையிரப் பெருமான் தோன்றி சிவனை இகழ்ந்த உச்சித்தலையை தனது நகங்களால் கிள்ளி எடுத்து அகந்தை கொண்டவர்களின் குருதியை பலியாக ஏற்று அவர்களுக்கும் அருள்புரிந்தார். வைரவப்பெருமான் கிராமங்கள் தோறும் காவல் தெய்வமாகவும் தம் குலதெய்வமாகவும் வணங்கி வருகின்றார்கள். அவரது அருள் அனைத்து அடியார்களுக்கும் கிடைக்க வேண்டு மென பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு "

ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய
சுவாமிகள் நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.

அனுசரணை: வைரவப் பெருமான் திருப்பணி உபயகாரர்
[illegible]
(263, [illegible], யாழ்ப்பாணம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைட்டம் விசாரணையில் ஆளும்தரப்பு எம்.பிக்கள் சிலர் விலகியிருக்க முடிவு

கொழும்பு, ஜூலை06
சைட்டம் நிறுவனம் தொடர்பில் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் விசாரணைகளில் கலந்து கொள்ளாதிருக்க ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தீர்மானம் எடுத்துள்ளமையால் அமைச்சர்களிடையே குழப்பநிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் கடந்த திங்கள்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தையடுத்தே மேற்படி குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் அமைச்சர்கள் தலையீடு செய்வது தேவையற்ற ஒன்று என்றும், இந்த வழக்கைச் சட்டமா அதிபர் முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்குமாறும் இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் சிலர் கோரியுள்ளனர்.

எனினும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்க, சைட்டம் நிறுவனத்தை கலைக்கவேண்டும் என மாற்றுக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

சைட்டம் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கழிந்துள்ள நிலையில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவிப்பதானது புதுமையானது என அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சர் சம்பிக்கவின் கருத்துக்குப் பதிலளித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, ரவுப் ஹக்கீம், விஜயதாச ராஜபக்ச, சுஜீவ சேனசிங்க, அஜித் பெரேரா, ஹர்ஷ டி சில்வா, கருணாரத்ன பரணவிதாரன மற்றும் எரான் விக்கிரமத்ன ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-ய)

10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தனலெட்சுமி
சபாநாதன்

அன்னை மடியில்
18.08.1954

ஆண்டவன் அடியில்
27.06.2007

திதி : பூர்வபக்க திரயோதசி

கண்ணிமை கவிழும் போதும்
கனவுகள் தவழும் போதும்
எம்மையே தொலைத்து விட்டு
எங்கெங்கோ தேடும் போதும்

இதயத்தில் மிதக்கும் எண்ணம்
இனி எப்போதும் அழியாதம்மா
போற்றிய காதல் மட்டும்
புயலிலும் மாறாதம்மா

ஆண்டுகள் பத்தானால் என்ன
நூறானால் என்ன
உன்மீது கொண்ட அன்பு
என்றைக்கும் அகலாதம்மா
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உம் பிரிவால் துயருறும்
கணவர் மற்றும்
குடும்பத்தினர்.

"லக்ஷ்மி"
17, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

மரணஅறிவித்தல்

திருமதி மேரிப்பிள்ளை மனவல்



யாழ் குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிப்பிள்ளை மனவல் 01.07.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லோறன்ஸ் அந்தோனிப்பிள்ளை (சஞ்சோன்) அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பர்னாந்து மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மனவல் (சம்மாட்டி) அவர்களின் அன்பு மனைவியும் அன்ரன் (பிரான்ஸ்), விமலரதி காலஞ்சென்ற டன்சன், செல்வரதி, மனோன் (பிரான்ஸ்), ராஜன் (பிரான்ஸ்), றுவின்சலாஸ்(குயின்ரன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்), எமில்ரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலதேவி(பிரான்ஸ்), அமலதாஸ், சந்திரன், நந்தினி(பிரான்ஸ்), ஜோதி(பிரான்ஸ்), றஜி, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் அரியராசா, அருள்சீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் றோஸ், சின்னமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அனிக்கா, அரனியா, மைக்மலன், அருண்மதி, செல்ரன் செபர்னா, உதயன் மயூறி, றனிஸ்ரன், சின்னத்தம்பி டினுசியா, டெனிடியூளினி, றஜீவ் டிசாளினி, சிரஞ்சீவி டிலக்ஸ்சி, றொக்ஸ்சன், றொக்ஸ்சினி, ஜிகானா, லக்ஸ்சனா, நெறீஸ், நோமன், மான்சி மெலிசா ஆன் எவாளின், தெசாளின், மரிய பியோலின், ஆன்சிறோமி செபானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மரிசலின், செவாக், செப்ரியா, ஜெனக்சன் டிவைனி, றியாஸ், சியோன், சிறோன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.07.2017) வியாழக்கிழமை இல.81, கடற்கரை வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 844 8082

அபேகுணவர்தனவின் வழக்கில்

## கணினிச்சாட்சியங்களை அழைப்பதற்கு ஆட்சேபம்

கொழும்பு, ஜூலை06
2004 தொடக்கம் 2006 வரையான காலப் பகுதியில் நான்கு கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துகளைச் சம்பாதித்தமைக்கான சரியான ஆதாரங்களைக் காட்டத் தவறியுள்ளார் என்ற குற்றச்சாட்டில் பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்ந்துள்ள வழக்கில் கணினிச் சாட்சியங்களை அழைப்பதைத் தான் ஆட்சேபிக்கிறார் என ரோஹித அபேகுணவர்தனவின் சட்டத்தரணி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த 13ஆம், 14ஆம் திகதிகளில் நீதிமன்றம் வழங்கிய அனுமதியின்பேரில் தான் உட்பட்ட சட்டத்தரணிகள் குழு நான்கு வங்கிகளில் ரோஹித அபேகுணவர்தனவின் கணக்குகளைப் பரீட்சித்தனர் எனவும், அந்தவேளையில் இந்த வங்கிக் கணக்குகள் தொடர்பான கணினிப் பதிவுகள் தங்களது தலைமைக் காரியாலயத்திலேயே உள்ளன என்றும் அந்த நான்கு வங்கிகளின் முகாமையாளர்களும் தங்களுக்குத் தெரிவித்தனர் என ரோஹித அபேகுணவர்தனவின் அரச தலைவர் சட்டத்தரணி காளிங்க இந்திரதிஸ்ஸ நீதிமன்றத்துக்கு எடுத்துக் காட்டினார்.

எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தனது கட்சிக்காரரான ரோஹித அபேகுணவர்தனவுக்கு எதிராக அவசர அவசரமாக இந்த வழக்கைத் தொடர்ந்திருப்பதாகவும் அவர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், வழக்கின் அடுத்த விசாரணை ஓகஸ்ட் 2 மற்றும் 3ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-ய)

சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்;

## அறிக்கை கோருகிறது நிதி அமைச்சு

கொழும்பு, ஜூலை 6
சர்ச்சைக்கரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு நிதி அமைச்சு சகல நிதி நிறுவனங்களிடமும் கோரியுள்ளது.

நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலேயே இவ்வாறு அறிக்கை கோரப்பட்டுள்ளது.

ஏதேனும் சர்ச்சைக்குரிய அல்லது சந்தேகத்துக்கு இடமான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது குறித்து மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவிக்குமாறும் நிதி அமைச்சு கோரியுள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இது குறித்து நிதி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் இரகசியமான முறையில் வாடிக்கையாளர்களுக்கு இதுபற்றி அறிவிக்காது சந்தேகத்துக்கு இடமான கொடுக்கல் வாங்கல்கள் பற்றி அறிவிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திடீரென வைப்புச் செய்யப்படும் பெருந்தொகைப் பணம், குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு நீண்டகாலத்திற்குக் கணக்குகளை பேணுதல், அசாதாரண கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(த-ய)

31 ஆம் நாள் அந்தியேட்டி
வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் கந்தசாமி இராசசுந்தரம்

கடந்த 07.06.2017 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் கந்தசாமி இராசசுந்தரம் அவர்களின் சிவ பதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளை (07.07.2017) வெள்ளிக்கிழமை அதிகாலை நடைபெற்று வீட்டுக்கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காட்டுப்புலம்,
தொண்டைமானாறு.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பை விவகாரத்தால் சபையில் பெரும் சர்ச்சை

கொழும்பு, ஜூலை 6

குப்பைகளுடன் மனித உடல் அவயங்களும் முத்துராஜ வெலயில் கொட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சர் பைசல் முஸ்தபா நிராகரித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.

தினப்பணிகள் முடிவடைந்த பின்னர் நிலையி யல் கட்டளையின் 23/2 இன்கீழ் குப்பைப் பிரச்சினை தொடர்பில் சிறப்புக் கூற்றொன்றை விடுத்த தினேஸ் குணவர்தன, "கழிவுகள் வீதிகளில் கொட்டப்பட்டுள்ளன. அவை அகற்றப்படவில்லை. இதனால் சூழலுக்கும் சுகாதாரத்துக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. டெங்கு நோயும் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக பிண அறைகளிலிருந்து வீசப்பட் டுள்ள மனித உடல் அவயங்களும் முத்துராஜவெல யில் கொட்டப்படுவதாக மக்கள் தெரி விக்கின்றனர்" என்று சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், அந்தத் தகவலை நிராகரித்ததுடன், குப்பைப் பிரச்சினையை வைத்து சிலர் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர் எனவும் விசனம் வெளியிட்டார்.

அதேவேளை, முத்துராஜவெல குப்பைப் பிரச்சினை தொடர்பில் மகிந்த அணியிலுள்ள கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்கள், அமைச்சர் பைசல் முஸ்தபாவிடம் கேள்விகளை எழுப்ப முற்பட்டனர். எனினும், அவர்களுக்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால், சபையில் சிறிதுநேரம் சர்ச்சை ஏற்பட்டது. (த)

# 67 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் கறுப்பு பட்டியலில்

கொழும்பு, ஜூலை 6

இந்த வருடத்தில் இதுவரை 67 வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் இவ்வாறு 61 வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

பணியகத்தின் முறைப்பாடுகளை விசாரணை செய்ய ஒத்துழைக்காமை, பணியகத்தில் பதிவு செய்யாமல் நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புதல், போலி ஆவணங்களை முன்வைத்தல், வெளிநாட்டு நிறுவனங்களிடம் பணம் பெற்றுக்கொண்டு ஊழியர்களை அனுப்பாமை போன்றவை இந்த தடைப்பட்டியலில் சேர்க்க காரணமாக அமைந்தன - என்றார். (த-ய)

**அக்கராயன்குளம் பிரதேசத்தில்
நன்னீர் மீன்பிடிக்கான கேள்விகோரல்**

அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் செயற்படும் கமக்கார அமைப்புகளின் கட்டுப்பாட்டிலுள்ள பின்வரும் சிறுகுளங்களில் நன்னீர் மீன்வளர்ப்பு நடைபெற்று வருகின்றது. அக்குளங்களில் உள்ள மீன்கள் அறுவடை செய்யும் பருவத்தை அடைந்துள்ளதால் அக்குளங்களில் மீன்பிடிப்பதற்கான கேள்விகோரல் நிகழ்வு 14.07.2017 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணியளவில் அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மீன் பிடிப்பவர்கள் அன்று காலை 8.00 மணிமுதல் குறிப்பிட்ட குளங்களை பார்வையிட முடியும் என்பதையும் பிற்பகல் 3.00 மணிக்கு ஏல நடைமுறையில் கலந்துகொள்ளலாம் என்பதையும் அறியப்படுத்துகின்றேன்.

சிறுகுளங்களின் விவரங்கள் பின்வருமாறு

1. குஞ்சுக்குளம்
2. திக்காய்குளம்
3. ஆனைவிழுந்தான்குளம்
4. பாலன்குளம்
5. மணியங்குளம்

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
கமநல சேவைநிலையம் அக்கராயன்குளம்

# இடர் பாதித்த மக்களுக்கு 92 எம்.பிக்களின் சம்பளம்

கொழும்பு, ஜூலை 6

இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 92 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது சம்பளங்களை வழங்கியுள்ளனர்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சம்பளங்களை இவ்வாறு இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாக வழங்கியுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் 63 நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 24 நாடாளுமன்ற உறுப்பினர்களும், கூட்டு எதிர்க்கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் இவ்வாறு தங்களது சம்பளங்களை வழங்கியுள்ளனர்.

இதன்படி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் 54 ஆயிரத்து 285 ரூபா பணத்தை வழங்கியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், ஜே.வி.பி மற்றும் கூட்டு எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றச் சம்பளத்தை வழங்காது வேறு வழியில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தங்களது சம்பளத்தைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோரியுள்ளனர். (த-ய)

**தையல் பயிற்சி**
பெண்களுக்கான குறுகிய கால தையல் பயிற்சி நடைபெறுகின்றன.
இல.03, பொதுச்சந்தை கட்டடத்தொகுதி, மல்லாகம்.
076 641 7281

**வேலையாள்கள் தேவை**
- மேசன் - உதவியாளர்
- வயரிங் வேலை
- கிறைண்டர், றில்லர் திருத்த தெரிந்தவர்கள்

076 866 3944

**தேவை**
யாழில் பயிற்சி, ஆலோசனை, தொழில் வழிகாட்டல் மற்றும் கல்வி அபிவிருத்தியினை மேற்கொள்கின்ற CAMPS International நிறுவனத்திற்கு உத்தியோகத்தர்கள் தேவை. கணினி மற்றும் ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
தொடர்பு-077 5449 833

**கடை வாடகைக்கு விடப்படும்**
விசுவமடு சந்திக்கு அருகில் முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் 48 அடி அகலம் 55 அடி நீளம் கொண்ட மாபிள் பதிக்கப்பட்ட கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு-077 239 1080

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
தனியானவர், பொறுப்புக்கள் இல்லாதவர் விரும்பத்தக்கது.
077 929 8034

# சுவிஸ் வங்கியில் இலங்கையர்களின் 307 மில்லியன் பிராங் வைப்பில்

இலங்கையர்களால் கடந்த ஆண்டில் சுவிஸ் வங்கியில் 307 மில்லியன் சுவிஸ் பிராங் சேமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவிஸ் தேசிய வங்கியினால் வெளியிடப்பட்ட புதிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியாகி உள்ளது.

உலகெங்கிலுமுள்ள வெளிநாட்டு வாடிக்கையாளர்களால் சுவிஸ் வங்கியில் சேமிக்கப்பட்டுள்ள பணத்தின் தொகையில் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. புதிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் 1.41 ட்ரில்லியன் சுவிஸ் பிராங்கில் இலிருந்து 1.42 ட்ரில்லியன் வரை அதிகரித்துள்ளது. சுவிஸ் வங்கியில் இந்தியர்களால் முன்னெடுக்கப்பட்ட கணக்குகள் சில நிறுத்தப்பட் டுள்ளன. இதன் பின்னரான பணப் பெறுமதியின் அடிப்படையில் இந்தியா 88ஆவது இடத்துக்குத் தள்ளப்பட் டுள்ளது. அதேநேரத்தில் பிரிட்டன் முதலிடத்தில் உள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளில் பங்களாதேஷ் 89 ஆவது இடத்தையும், நேபாளம் 150ஆவது இடத்தையும் இலங்கை 151 ஆவது இடத்தையும், பூட்டான் 282 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன எனக் குறிப்பிடப்படுகின்றது. (த-ய)

**சேவை நலன் பாராட்டு**



சுன்னாகம் கட்டுப்பாட்டு அஞ்சல் அலுவலகத்தின் கீழ் இயங்கும் ஏழாலை உப அஞ்சல் அலுவலகத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் உப அஞ்சல் அதிபராக 24 வருடங்கள் கடமையாற்றி 30.06.2017 வெள்ளிக்கிழமை ஓய்வு பெற்றுச் சென்ற
திருமதி
மாலதி கிருஷ்ணதாசன்
(உப அஞ்சல் அலுவலகம், ஏழாலை)

அவர்களின் ஓய்வு காலம் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ அகமகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்
அஞ்சல் சமூகம், அஞ்சல் அலுவலகம்

# அறிவித்தல்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.**

வடக்கு மாகாணதமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும்
இலங்கை ஆசிரியர் சேவையின்
3 ஆம் வகுப்பு - 1(அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை
ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017(III)

மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.08.04 ஆகும்.

**பாடரீதியாக காணப்படும் வெற்றிட எண்ணிக்கை விவரம்**

| | தமிழ் | வரலாறு | குடியியல் | தகவல் தொழில்நுட்பம் | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் | வழிகாட்டலும் ஆலோசனையும் | இரண்டாம் மொழி (சிங்களம்) |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | - | - | - | - | - | 4 |
| வலிகாமம் | 10 | 4 | 2 | 4 | 1 | 6 | 8 |
| வடமராட்சி | 1 | 3 | 3 | 2 | 3 | 3 | 6 |
| தென்மராட்சி | - | 5 | 3 | 2 | - | 3 | 5 |
| தீவகம் | 8 | 5 | 7 | 3 | 5 | 2 | 6 |
| கிளிநொச்சி | 12 | 6 | 6 | 4 | 11 | 8 | 8 |
| முல்லைத்தீவு | - | 4 | 3 | 2 | 8 | 7 | 4 |
| துணுக்காய் | 7 | 2 | 1 | 2 | 9 | 4 | 9 |
| வவுனியா வடக்கு | 4 | 4 | 5 | 2 | 5 | 2 | 8 |
| வவுனியா தெற்கு | - | 2 | 3 | 2 | 6 | 2 | 7 |
| மன்னார் | 11 | 2 | - | 2 | 8 | 8 | 8 |
| மடு | 8 | 3 | 6 | 2 | 1 | 2 | 5 |
| மொத்தம் | 61 | 40 | 39 | 27 | 57 | 47 | 78 |

("—"என்ற அடையாளம் வெற்றிடங்கள் இல்லை என்பதைக் குறிக்கும்)

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk Recruitment and Exam Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.அ.மோகன்ராஸ்,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தகவல்கள் வழங்கும்போது அச்சம் கொள்ளவேண்டாம்

## தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஜூலை05
தகவல்கள் வழங்கும்போது அச்சம் கொள்ள வேண்டாம் எனத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களிடம் கோரியுள்ளது.
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்படும் எந்தவொரு விடயம் தொடர்பிலும், உரிய தகவல்கள் வழங்கப்படவேண்டும் என ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.
எனினும், சில திணைக்களங்களில் மக்களால் கோரப்படும் தகவல்கள் வழங்கப்படுவதில்லை எனப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே, தகவல்களை வழங்குமாறு தமது ஆணைக்குழுவால் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டிய நிலை தோன்றியுள்ளதாகவும் அது கூறியுள்ளது.
அரச நிறுவனங்களிலுள்ள தகவல்கள் உள்ளிட்ட ஆவணங்கள் பொது மக்களுக்கு உரித்துடையவை எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (த-ய)

# சரியாக வாக்களித்தால் படகுகள் மூலம் ஆஸி. செல்லத் தேவையிராது

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை05
வாக்கின் மூலம் சரியான தலைவர்களை உருவாக்கினால் நாம் படகு மூலம் ஆஸ்திரேலியா செல்லத் தேவையில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.



வாக்காளர் தினத்தை முன்னிட்டு மக்களை விழிப்பூட்டும் ஊர்வலம் மற்றும் சிறப்பு நிகழ்வுகளின் முதன்மை நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டச் செயலர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.
மட்டக்களப்பு தனியார் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற வீதி நாடகம், விழிப்புணர்வு நிகழ்வுகளுடன் ஊர்வலமாக மட்டக்களப்பு நகர வீதி ஊடாக மணிக்கூட்டுக்கோபுரம், காந்திபூங்கா வழியாக, மட்டக்களப்பு தேர்தல்கள் அலுவலகம் வரை சென்றது.
அதன் பின்னர் பிரதான நிகழ்வுகள் மண்முனை வடக்குப் பிரதேச செலயகத்தில் அமைந்துள்ள டேர்பா மண்டபத்தில் நடைபெற்றன.
இதில் கலந்துகொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்ததாவது:
1967ஆம் ஆண்டு தேர்தல்கள் திணைக்களத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தில் உதவித்தேர்தல்கள் ஆணையாளராகக் கடமையாற்றிய ஒஸ்ரின் பெர்ணான்டோ அரச தலைவரின் செயலாளராகத் தற்போது கடமையேற்பதனையிட்டுத் தேர்தல்கள் ஆணைக்குழு மகிழ்ச்சியடைவதோடு அவருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.
18 வயதான ஒவ்வொருவரும் தமது உரிமையை பெற்றுக் கொள்ளவேண்டும். கட்டாயமாகக் கிடைக்கின்ற மரணத்தை நாம் விரும்புவதில்லை. ஆனால் வாக்கை விரும்புகிறோம்.
வாக்குப் புத்தகத்தில் பெயரிருந்தால் வாக்களிக்முடியும். இல்லாவிட்டார் வாக்கில்லை.
நல்ல அபிவிருத்தி, சிறப்பானவாழ்க்கை வாழ்வதற்குக் கூட வாக்கு முக்கியம் பெறுகிறது.
தேர்தல் நடைபெறவில்லை என்று மக்கள் தேர்தல் ஆணைக்குழுவைப் பேசுகின்றனர். ஆனால் தேர்தலை நடத்துகின்ற அதிகாரம் மாத்திரமே எம்மிடமுள்ளது. அதற்கான அனுமதி, அதிகாரங்களை நாடாளுமன்றம் தான் தரவேண்டும்.

> “ தேர்தலில் தமது வாக்குமூலம் அரசியல்வாதி ஒருவரைத் தெரிவு செய்வதுடன் எமது கடமை முடிந்தது என்று மக்கள் நினைத்து விடமுடியாது.

உதாரணமாகக் கிரிக்கட் போட்டியை நடத்துவதற்கான மைதானம், வீரர்கள், வசதிகள் இருந்தாலும், அதற்கு ஐ.சீ.சீ. அனுமதி தரவேண்டும் இல்லையானால் போட்டியை நடத்த முடியாது. அதுபோலத்தான் எமது நிலைமையும்.
உள்ளூராட்சித் தேர்தல்களைப் பொறுத்தவரை, உள்ளூராட்சித் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிற போதுதான் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தமுடியும். விரைவில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானமும் இதில் முக்கியமானது.
தேர்தலில் தமது வாக்குமூலம் அரசியல்வாதி ஒருவரைத் தெரிவு செய்வதுடன் எமது கடமை முடிந்தது என்று மக்கள் நினைத்து விடமுடியாது. தேர்தல்கள் நடத்தப்படவில்லையானால் மக்கள் கேள்வி கேட்கவேண்டும்- என்றார். (த-ய)

## நீர்கொழும்பு வைத்தியசாலையில் இரு புதிய டெங்கு நோயாளர் பிரிவு

கொழும்பு, ஜூலை05
டெங்கு நோயாளர்களுக்காக இலங்கை இராணுவத்தின் பொறியியலாளர் படைப்பிரிவு நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு இரண்டு புதிய தற்காலிக மருத்துவப் பிரிவுகளை நிர்மாணித்துள்ளது.
நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மருத்துவ அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதற்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு இராணுவ மருத்துவப் படைப்பிரிவின் 25 இராணுவத்தினர் செயற்பட உள்ளனர். இதேவேளை, இந்தத் திட்டத்தில் இரத்தப் பரிசோதனைக்காகப் பிரத்தியேக ஆய்வுகூடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ய)

# பதவி விலகினார் தூதுவர் லியனகே

## கிழக்கு மாகாண ஆளுநர் பதவி கிடைக்காமையால் ஏமாற்றம்



கொழும்பு, ஜூலை 6
கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை எதிர்பார்த்திருந்த கட்டாருக்கான இலங்கைத் தூதுவர் ஏ.எஸ்.பி.லியனகே, அந்தப் பதவி கிடைக்காததையடுத்து, தனது தூதுவர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கட்டாருக்கான தூதுவர் பதவியை வகிக்க விரும்பவில்லை என அவர் கூறினார்.
கிழக்கு மாகாண ஆளுநர் பதவி முன்னாள் அயலுறவு அமைச்சர் றோகித போகொல்லாகமவுக்கு வழங்கப்பட்டமை குறித்து லியனகே கடும் அதிருப்தி வெளியிட்டார்.
தமது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளார்.
தாம் இலங்கையில் சேவையாற்ற விரும்புவதாகவும் வேறு நாடுகளில் சேவையாற்றுவதில் ஆர்வம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மாகாண ஆளுநர் பதவிக்கு வெற்றிடம் ஏற்படும் போது அந்தப் பதவியில் நியமிப்பதாக அரச தலைவர் வாக்குறுதி அளித்திருந்தார் எனவும், அந்த வாக்குறுதியை மைத்திரி நிறைவேற்றவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.
அரச தலைவரைக் குறைகூறவில்லை எனவும், தாம் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் இதனால் பதவியை விட்டு விலகுவதாகவும் அவர் கூறினார். (த)

## பயங்கரவாதத் சட்டத்தை நீக்கவும் பிக்குகள் எதிர்ப்பு

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு வதற்கும், பௌத்த பீடங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் முயற்சிகளைக் கைவிடுமாறு அரசிடம் மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும், சங்க சபாக்களும் கோரியுள்ளனர். கண்டியில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதையும் கைவிடுமாறு அரசிடம் பௌத்த பீடங்கள் கோரியுள்ளன. புதிய அரசமைப்புக்கும் பௌத்தபீடங்கள் ஏற்கனவே கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## 100 வயதுக்கு மேற்பட்டோரின் விவரங்கள் அரசால் சேகரிப்பு

கொழும்பு, ஜூலை 6
எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் வரவுள்ள பன்னாட்டு முதியோர் தின நிகழ்வில் சன்மானங்களை வழங்குவதற்காக இலங்கையிலுள்ள நூறு வயதுக்கு மேற்பட்டவர்களினதும், 15 பிள்ளைகளைக் கொண்டவர்களினதும் விவரங்களைச் சேகரிக்கும் பணியில் இலங்கையின் முதியோர் செயலகம் ஈடுபட்டுள்ளது.
இதுதொடர்பான விவரங்களை இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அண்மையிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
பன்னாட்டு முதியோர் தின நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பத்தரமுல்ல வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் 500 முதியவர்கள் கலந்துகொள்வார்கள் எனச் செயலகம் தெரிவித்துள்ளது. (த-ய)

## கிராமப்புற வைத்தியசாலைகளில் டெங்கு சிகிச்சைக்கு சிறப்புக் குழு

கொழும்பு, ஜூலை05
டெங்கு நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அனைத்து கிராமப்புற வைத்தியசாலைகளிலும் சிறப்பு மருத்துவக் குழு ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
வைத்தியசாலைகளில் நிலவும் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதகாகச் சுகாதார அமைச்சின் சிறப்பு மீருத்துவர் அமல் ஹர்சடி சில்வா தெரிவித்தார்.
டெங்கு நோயாளர்களை விரைவாக அடையாளம் காண்பதற்காக அனைத்து வைத்தியசாலைகளிலும் வெளிநோயாளர்பிரிவில் இரத்தப்பரிசோதனை செய்வதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர், குறுகிய நேரத்திற்குள் இது தொடர்பான அறிக்கையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் குறிப்பிட்டார்.
மேல்மாகாணத்தில் 42 சதவீதமான டெங்கு நோயாளர்கள் காணப்படுகின்றனர். ஒவ்வொருவரும் தமது இருப்பிடச் சுற்றாடல் பகுதியில் டெங்கு நுளம்புகள் பெருகாமல் வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (த-ய)

# தேர்தல் நடத்தும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கே உண்டு

## பிரதீபா மஹாநாமஹேவா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை05
மாகாணசபை ஒன்றின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் புதிய தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது என கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா கூறியுள்ளார்.



மாகாணசபையின் பதவிக் காலம் முடிவடைந்த காலத்தை நீடிக்கவேண்டுமாயின் அரசமைப்பில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்என்றும்அவர்சுட்டிக்காட்டினார்.
அரசமைப்பின் 154/இ பிரிவின்படி மாகாணசபைகளின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். அந்தக் காலத்தைத் தாண்டும் மாகாண சபைகள் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும்.
அதன்படி சப்ரகமுவ, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் பதவிக் காலம் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் நிறைவடைய உள்ளன.
இதேவேளை, தேர்தல் பிற்போடப்படுவது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் பொறுப்பேற்கவேண்டும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை திட்டமிட்டு வீழ்த்திய மைத்திரியின் தலைமையை மீண்டும் எப்படி ஏற்று நடப்பது?

## சாடுகின்றது பொது எதிரணி



கொழும்பு, ஜூலை 6
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நடுநிலை வகித்திருந்தால் இன்று தலைமை அமைச்சர் மகிந்த தான். திட்டமிட்டுரணிலைத்தலைமை அமைச்சராக்கிய மைத்திரியின் தலைமையின் கீழ் எப்படி மீண்டும் ஒரு தடவை போட்டியிடுவது என்று கேள்வி எழுப்பியுள்ளார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனி வரும் தேர்தல்களில் மகிந்த அணியும் மைத்திரி அணியும் ஒன்றிணைந்து போட்டியிடவேண்டும் என்று மைத்திரி அணியில் உள்ள அதிகமானவர்கள் விரும்புகின்றனர். அதற்கான முயற்சியில் இறங்கியும் உள்ளனர். ஆனால் இது எப்படிச் சாத்தியமாகும்?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் மைத்திரியின் தலைமைத்துவத்தை ஏற்று ஒன்றிணைந்து போட்டியிட்டோம். மகிந்தவைத் தலைமை அமைச்சர் ஆக்குவதே எமது நோக்கமாக இருந்தது. அதற்கான வாய்ப்பும் மக்கள் ஆதரவும் அதிகமாகவே இருந்தன. ஆனால் இறுதி நேரத்தில் மைத்திரி கவிழ்த்துவிட்டார்.

மைத்திரி அந்தச் சர்ச்சைக்குறிய கூற்றை வெளியிடாது நடுநிலைமை வகித்திருந்தால் மகிந்த நிச்சயம் தலைமை அமைச்சர் இருப்பார். மைத்திரி திட்டமிட்டு ரணிலைத் தலைமை அமைச்சர் ஆக்கினார். இப்படியான ஒருவரின் தலைமையின்கீழ் எப்படி மீண்டும் ஒரு தடவை போட்டியிடுவது?

இரண்டு அணிகளையும் இணைப்பதற்கு முயற்சி செய்பவர்கள் மைத்திரி அணியினரே தவிர மகிந்த அணியினர் அல்லர். எம்மை இணைத்தால் தான் எல்லாத் தேர்தல்களிலும் வெற்றிபெற முடியும். இல்லாவிட்டால் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றியடையும் என்ற உண்மையை மைத்திரி அணியினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அந்த உண்மையை அவர்கள் வெளிப்படையாகக் கூறி வருவதைப் பார்க்கின்றோம்.

இன்று நாளுக்கு நாள் மகிந்தவுக்கான மக்கள் ஆதரவு பெருகி வருகின்றது. எங்கு கூட்டம் நடத்தினாலும் அங்கு மக்கள் வெள்ளம் நிரம்பி வழிகின்றது.

மே தினக் கூட்டம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இந்த அரசின் செயற்பாடுகள்மூலம் மக்கள் சொற்ப காலத்துக்குள்ளேயே அதிருப்தியடைந்துவிட்டனர். மகிந்த ஆட்சியை மீண்டும் விரும்புகின்றனர் - என்றார். (த-3)

விமல் அணி சபையில் கூக்குரல்

# வடக்கில் இருக்கும் விகாராதிபதிகளுக்கு கடும் அச்சுறுத்தலாம்

கொழும்பு, ஜூலை 6
நாகவிகாரையில் புத்தர் சிலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவதுடன், முல்லைத்தீவு விகாரையிலிருந்து விகாராதிபதியை வெளியேறுமாறு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டிய விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த சமரவீர, வடக்கில் இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேருநர்களைப் பதிவுசெய்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டவரைவு மீதான விவா தத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரபாகரனின் இரும்புப் பாதபிடிக்குள் இருந்து விடுபட்ட வடக்கு மக்களுக்குச் சகல வசதிகளும் வழங்கப்பட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. போரால் இடம்பெயர்ந்தவர்கள் இங்கு வரவேண்டும். அவர்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தெற்கில் தமிழ், சிங்கள், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்த நாட்டில் எவருக்கும் எங்கு வாழும் உரிமையும் இருக்கின்றது. ஆனால், வடக்கின் நிலைமை வேறாக இருக்கின்றது. நாகவிகாரையில் புத்தர் சிலை அமைப்பதற்கு எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

முல்லைத்தீவில் விகாரை அமைப்பதற்குப் போர்க்கொடி தூக்கப்பட்டு, விகாராதிப தியை வெளியேறுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அங்கு இப்படியொரு நிலை இருக்கும்போது இங்கு எப்படி வேறு கோணத்தில் சிந்திப்பது? இந்நிலை மாற வேண்டும் - என்றார்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், ""வடக்கிலுள்ள கோயில்கள்தான் உடைக்கப்படுகின்றன'' என்று சுட்டிக்காட்டினார். (த)

TVS KING

## TVS மோட்டார் கம்பனி நிறுவனம் மற்றும் அபான்ஸ் உடனுழைப்பில் முச்சக்கர வண்டிகள் இலங்கையில் இறக்குமதி செய்யப்படுகின்றன

Abans

முதன் முறையாக இலங்கை விற்பனை சந்தைகளில் TVS king 200CC முச்சக்கர வண்டிகள் அறிமுகமாகிறது.

2017 ஜூன் 28, கொழும்பு: இந்தியாவில் முன்னணி முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் என்ற பெருமைக்குரிய TVS மோட்டார் கம்பனி நிறுவனம். இலங்கையில் மோட்டார் வாகனத் துறையின் முதல்வனாக போற்றப்படும் அபான்ஸ் ஓட்டோ நிறுவனத்துடன் கூட்டிணைந்து இலங்கையில் முதல் முறையாக TVS King 200CC மாதிரியிலான முச்சக்கர வண்டிகளை அறிமுகம் செய்துள்ளது.

இந்த கூட்டு ஒப்பந்தத்தின் படி அபான்ஸ் குழுமம் நாடளாவிய ரீதியில் தன்வசம் கொண்டுள்ள 2000 இற்கும் அதிகமான் காட்சியறைகளின் மூலம் TVS King 200CC முச்சக்கர வண்டிகளை உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து வருகிறது. அதேபோல் TVS King வாடிக்கையாளர்களுக்காக அபான்ஸ் பினான்ஸ் மூலம் குறைந்த விலையிலான விசேட நிதி வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அபான்ஸ் குழுமத்துடன் இணைந்துகொண்டமை தொடர்பாக TVS மோட்டார் கம்பனி நிறுவனத்தின் சர்வதேச வியாபாரத்திற்கான சிரேஷ்ட துணை தலைவர் திரு. ஆர். திலிப் அவர்கள் தனது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார். இலங்கையர்கள் அனைவரும் அறிந்த அபான்ஸ் என்ற பெரும் நாமத்திற்கு கீழ் இயங்கும் அபான்ஸ் ஓட்டோவின் நாடளாவிய 1500க்கும் அதிகமான காட்சியறைகளின் மூலம் மிகச்சிறந்த முறையில் வாடிக்கையாளர்களுக்கான சேவையை நிச்சயமாக வழங்கமுடியும் என்பதே எனது நம்பிக்கையாகும். விற்பனை மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவைகளை மிகவும் சிறப்பாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கவேண்டும் என்ற இலக்கை கொண்டுள்ள TVS நிறுவனம் இலங்கையில் முன்னணி நிறுவனமாக திகழும் அபான்ஸ் ஓட்டோவுடன் இணைந்த இப்பணியை சிறந்த முறையில் வழங்கி வாடிக்கையாளர்களின் மேன்மையான திருப்தியை பெறும் என்பதே எனது நம்பிக்கையாகும். என அவர் தெரிவித்தார்.

அபான்ஸ் PLC, முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. பேமன் பெஸ்டொன்ஜி அவர்கள் தெரிவித்த கருத்தாவது. இலங்கையின் அனைத்து சூழ்நிலைகளுக்கும் மிகவும் சிறந்த முறையில் பொருந்தும் முச்சக்கர வண்டியாக TVS King .யை அறிமுகம் செய்ய முடியும். அபான்ஸ் பினான்ஸ் வழங்கும் மிகச்சிறந்த நிதியியல் தீர்வுகளினால் இலங்கை வாடிக்கையாளர்கள் மத்தியில் புகழ்பெற்ற நாமமாக மனம் நீங்கா இடம்பிடிக்கும் என்பதே எனது நம்பிக்கையாகும். என அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள இந்த TVS King முச்சக்கர வண்டியானது, பலம், தோற்றம், சொகுசு, கவர்ச்சி, மற்றும் இதன் ஓட்டத் தன்மை தற்போதைய நகரமய சூழ்நிலைகளுக்கு மிகச்சிறப்பான முறையில் பொருந்தும். அதியுயர் 200CC கொள்ளளவில் நவீன Low Friction 7-Port என்ஜினுடன் வரும் இந்த முச்சக்கர வண்டி மேடு, பள்ளங்களுக்கு மிகவும் சிறந்த முறையில் ஈடுகொடுப்பதோடு, போக்குவரத்து நெரிசல்களின் போது கியர்களை அளவுக்கதிகமாக மாற்றிட தேவையில்லை. வீதிகளில் வழங்கப்பட்டுள்ள வேக வரையறைகளுக்கமைவாக மாத்திரம் இந்த முச்சக்கர வண்டியின் என்ஜின் இயங்குவதால் இது நீண்ட நாட்களுக்கு உழைக்கும் வல்லமையைக் கொண்டுள்ளதோடு, மிகச்சிறந்த முறையில் எரிபொருளை சேமிக்கின்றது.

TVS King முச்சக்கர வண்டியின் ரிவர்ஸ் கியர் அமைப்பு கைப்பிடியில் (Handle) அமைந்துள்ளது. இது ஏனைய மற்றும் போட்டி மாதிரிகளில் இல்லாத சிறப்பம்சம் என்பதால் ஓட்டுநருக்கு மிகவும் இலகுவாகவும், வண்டியின் தோற்றத்திற்கு மிகவும் கவர்ச்சிகரமாகவும் அமைந்துள்ளது. அதேபோல் இதில் 35 வொட்டுவின் ஹெட் லேம்பைக் கொண்டுள்ளதுதோடு, மிகப்பெரிய கவர்ச்சிகரமான பின்புற விளக்குகள் மற்றும் லேமினேட்டட் கிளாஸ் கொண்ட பிரமாண்ட ஒற்றை விண்ட்ஸ்கிரீனை கொண்டுள்ளது. இதன் உட்புறம் மிகவும் கவர்ச்சிகரமான தோற்றத்தில் உள்ளதோடு, மோட்டார் காருக்கு நிகரான டேஷ் போர்ட், எரிபொருள் காட்டி, கையடக்கத் தொலைபேசி சார்ஜர் சொக்கட், சௌகரியமான டுவல் டோர்ன் இருக்கைகள் மற்றும் இன்டிகிரேடட் பம்பர்களை கொண்டுள்ளது. அதேபோல் இது இலெக்ட்ரிக் ஸ்மார்ட் சிறப்பம்சத்தை கொண்டுள்ளதால் ஓட்டுநருக்கு அதிக சிரமம் இல்லாமல் சௌகரியமாக ஓட்டிச்செல்ல முடியும். தலை மற்றும் பாதங்களுக்கு இடையூறு இல்லாமல் மிகவும் சௌகரியமாக அமர்ந்து செல்லக்கூடிய அதிக இடவசதிகளை கொண்டுள்ளதோடு, சஸ்பென்ஷன் மற்றும் இருக்கைகளின் அதிக சொகுசுடன் நீண்ட தூரம் எந்த பிரச்சினையும் இல்லாமல் பயணிக்க முடியும்.

TVS King முச்சக்கர வண்டிகள் G5 - ஆரம்ப மாதிரி, FLD - fully loaded மாதிரி மற்றும் FB - ஃபன்பிரேட் மாதிரியினால் நாடளாவிய ரீதியில் அபான்ஸ் ஓட்டோ காட்சியறைகளில் ரூ. 691,000/- இலிருந்தான விலைகளில் சிகப்பு, பச்சை, நீலம், கருப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை ஆகிய நிறங்களில் உங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

TVS மோட்டார் கம்பனி நிறுவனம் தொடர்பாக TVS மோட்டார் கம்பனி நிறுவனம் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான முன்னணி நிறுவனமாகும். இது 7 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொண்ட TVS குழுமத்தின் பிரதான நிறுவனமாகும். போக்குவரத்து வாகனத்துறையில் முன்னணியாளன் என்ற உச்சத்தை தொடும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு இந்த நிறுவனம் உழைத்து வருகிறது. நம்பிக்கை, மதிப்பு மற்றும் வாடிக்கையாளர் தேவைகளை சரியான முறையில் இனங்கண்டு 100 வருடங்களுக்கும் மேலாக மிகச்சிறந்த முறையில் செயல்பட்டதே இந்நிறுவன வெற்றியின் இரகசியமாகும். 60க்கும் அதிகமான நாடுகளின் வாடிக்கையாளர்களை முழுமையாக திருப்திபடுத்திய பெருமை இந்நிறுவனத்தையே சாரும். புகழ்பெற்ற டேமின் விருதுகளைப் பெற்றுள்ள ஒரேயொரு மோட்டார் சைக்கிள் நிறுவனமும் இதுவாகும். கடந்த 2 வருட காலத்தில் இதன் உற்பத்திகள் அனைத்தும் JD Power IQS மற்றும் Apeal Survey வகையினத்திற்குள் உள்ளடக்கப்பட்டது இந்நிறுவனத்தின் உற்பத்திகள் பெற்றுக்கொண்ட சிறப்பம்சமாக கருதமுடியும். JD Power வாடிக்கையாளர் சேவைகளுக்கான திருப்தி தொடர்பான கருத்துக் கணிப்பில் தொடர்ச்சியாக 2 வருடங்கள் முதலாம் நிலையை தக்கவைத்து இல. 1 என்ற தரநிலையை பெற்றுகொண்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு www.tvsmotor.com என்ற வலைதளத்திற்கு பிரவேசிக்கவும்.



For further information please contact :

TVS Motor Company -
Varghese Thomas / KS Harini
vm.thomas@tvsmotor.com / ks.harini@tvsmotor.com

Aban's Contact –
Rajitha Ranasinghe / Chinthaka Perera
rajithar@abansgroup.com / chinthaka_auto@abansgroupcom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவுக்கு உதறலை ஏற்படுத்தவல்ல

# புடின் - ஜின் பிங் முக்கிய சந்திப்பு



மொஸ்கோ, ஜூலை 6
சீன அதிபர் ஜி ஜின் பிங் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இருவருக்கும் இடையிலான சந்திப்பொன்று ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. நிகழ்கால உலக அரசியல் போக்கில் இந்தச் சந்திப்பு மிகமிக முக்கியமானது என்று கருதப்படுகிறது.

இரு நாடுகளும் அமெரிக்காவுக்கு எதிரான போக்கை உடையன. தென்சீனக் கடல் விவகாரத்தில் அமெரிக்காவுடன் முரண்படுகிறது சீனா. அதேபோல் அணுவாயுதத் திட்டம், ஆணுவாயு பலம் ஆகியவற்றில் அமெரிக்காவுக்கு போட்டியாக ரஷ்;யா உள்ளது.

இதனால் அமெரிக்காவுக்கு எதிரான போக்குடைய இந்த இரு நாடுகளின் தலைவர்களுக்கு இடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு மிகமிக முக்கியமானது என்று கருதப்படுகிறது. (ம)

## சீனாவின் மிகவும் உயரமான கண்ணாடிப் பாலத்தில் விரிசல்

பீஜிங், ஜூலை 6
சீனாவில், மகிழ்ச்சி மற்றும் திகிலூட்டும் அனுபவத்தை வழங்கும் உலகின் மிகப்பெரிய மற்றும் உயரமான கண்ணாடிப் பாலத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இதன் உயரம் 400 அடிக்கும் அதிகமாக இருக்கும். இத்தகைய உயரத்தில் இருந்து கீழே பார்க்கும் போது நகரின் காட்சி பார்வையாளர்களுக்கு திகில் கலந்த சந்தோஷத்தை ஏற்படுத்தும். இதனால் இந்தப் பாலத்தின் சுவாரஸ்யத்தை அனுபவிக்க அதிக அளவில் பார்வையாளர்கள் வந்து செல்கின்றனர்.

இந்த பாலம் தென்மேற்கு சாங்குயிங் பகுதியில் இருந்து 70 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

கண்ணாடி பாலத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளதால் தற்சமயம் ஒரே நேரத்தில் 30 பேர் மட்டுமே நடக்க அனுமதிக்கப்படுகின்றனர். (ம)





# வடகொரியாவுக்கு கவனிப்பு நிச்சயம்

## பென்டகன் கொதிப்பு

வொஷிங்டன், ஜூலை 6
வடகொரியாவின் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைக்கு அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இதற்கு வடகொரியா கடும் விலைகொடுக்க வேண்டிவரும் என்றும் எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. வடகொரியா நேற்றுமுன்தினம் கண்டம் விட்டுக்கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்தது. இந்தச் சோதனை "அமெரிக்காவுக்கான சுதந்திர தினம் பரிசு" என்று வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்தார்.

"அமெரிக்கர்களுக்கு இது நல்ல செய்தி அல்ல.

அவர்களுக்கு இது போன்று இன்னும் ஏராளமான பரிசுகள் அனுப்பப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு அமெரிக்கா கடும் கண்டம் தெரிவித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையைக் கூட்டுவதற்கு அமெரிக்கா அழைப்பும் விடுத்துள்ளது. இந்த நிலையில் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் வடகொரியாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

'வடகொரியாவின் வளர்ந்துவரும் அச்சுறுத்தலுக்கு எதிராக எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள திறன்களை முழு அளவில் பயன்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்தச் சோதனைகளுக்கு வடகொரியா கடும் விலைகொடுக்கும்' என்று பென்டகனின் கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



அமெரிக்காவின்
தினம் வடகொரிய
ணையின் ஒளிப்
கண்டம் பாயக்கூ
கணை வெற்றிக



இஸ்
மலா
நரேந்
மோப
பெய

# எட்னாவின் மர்மங்களை ஆராய ரோபோக்கள் களத்த





உலகின் மிகவும் அபாயகரமான எரிமலைகளில் ஒன்றான எட்னா எரிமலை தொடர்பான ஆய்வுகளை முன்னெடுக்க ரோபோக்களின் உதவியுடன் களத்தில் இறங்கியுள்ளனர் ஜேர்மனிய விஞ்ஞானிகள்.

ஐரோப்பாவின் தென் இத்தாலி சிசிலித் தீவில் உள்ளது எட்னா எரிமலை. 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் யுனெஸ்கோ அமைப்பு உலகப் பாரம்பரியங்களில் ஒன்றாக இதை அறிவித்தது. 4ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முதல் முதலாக வெடித்த இந்த எரிமலை தற்போதுவரை உயிர்ப்புடன் உள்ளது.

1669ஆம் ஆண்டு வெடித்ததில் சுமார் 20ஆயி
ரம் பேர் உயிரிழந்
யாக கடந்த 2013
ஒக்ரோபர் மாதம் 2
வெடித்தது. எனிவு
வில் ஆபத்துக்க
டுத்தவில்லை. கரு
கியதுடன் மிகச்
பையே இறுதியாக
இந்த நிலையில்
மற்றும் விஞ்ஞா
னாவை ஆய்வு
களமிறங்கியுள்ள
மேல் 9 ஆய்வுகூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ங்காவின் சுதந்திர தினமான நேற்றுமுன் ...டகொரியா நடத்திய ஏவுகணைச் சோத...ன் ஒளிப்படமே இது. கண்டம் விட்டுக் ... பாயக்கூடிய வகையிலான இந்த ஏவு... வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. (ம)

# 70 ஆண்டுகள் காத்திருந்தோம்

## மோடியின் வருகையால் நெத்தன்யாகு பெருமிதம்

டெல் அவிவ், ஜூலை 6

“இந்தியத் தலைமை அமைச்சரை வரவேற்பதற்கு 70 ஆண்டுகள் காத்திருந்தோம்” இவ்வாறு தெரிவித்தார் இஸ்ரேல் தலைமை அமைச்சர் பென்சமின் நெத்தன்யாகு. இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தற்போது இஸ்ரேலுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளார். அவருக்கு அங்கு உற்சாக வரவேற்று வழங்கப்பட்டது.

நெத்தன்யாகு, மோடியை வானூர்தி நிலையத்துக்கே சென்று வரவேற்றார். பின்னர் மோடியின் வருகை தொடர்பில் உரையாற்றுகையில், “இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நாள், இந்திய தலைமை அமைச்சருக்காக 70 ஆண்டுகள் காத்திருந்தோம். எனது நண்பரை இங்கு சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்” என்று நெத்தன்யாகு தெரிவித்தார்.

இஸ்ரேலின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்த மோடி, “ஆயுத கலாசாரத்துக்கு எதிராக இஸ்ரேலுடன் இணைந்து போரிட இந்தியா தயாராக உள்ளது. வன்முறை, அடக்கு முறை ஆகியவற்றுக்கு எதிரான போக்குடைய ஒவ்வொரு தனிமனிதனும் போராட வேண்டிய தருணம் இது” என்று மோடி தெரிவித்தார். (ம)



நெத்தன்யாகு, மோடியை வானூர்தி நிலையத்துக்கு சென்று வரவேற்றபோது......

# ரக்காவில் போர் உக்கிரம்



டமஸ்கஸ், ஜூலை 6

சிரியாவின்ரக்காநகரில்இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு விரட்டப்படுவதற்கான போர் மிகவும் உக்கிரத்தன்மையுடன் நடை பெற்று வருகிறது என்று அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை அறிவித்தது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தியிருந்த இடங்களில் ரக்காவும் ஒன்று. கடந்த ஜூன் மாதம் நகரை மீட்கும் போரை அமெரிக்கக் கூட்டுப்படைகள் ஆரம்பித்தன.

சிரியாவின் பழைய நகருக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தற்போது முகாமிட்டுள்ளதால் அங்கு கடும் போர் நடைபெற்று வருகிறது. இலகுவாக முன்னேறிச் செல்வதற்கு வசதியாக பழமையும் புகழும் வாய்ந்த ரபிகா சுவரின் சிறு பகுதியை அமெரிக்கா உடைத்துள்ளது. எனினும் 25 மீற்றர் நீளமுடைய பகுதிகளே உடைக்கப்பட்டுள்ளன.

மிகுதியாக இருக்கும் 2 ஆயிரத்து 475 மீற்றர் பகுதியை பாதுகாக்க தாம் கடும் முனைப்புடன் செயற்படுவோம் என்று அமெரிக்கக் கூட்டுப்படை குறிப்பிட்டுள்ளது. (ம)



# ...ஸ்ரேலின் ...லரினத்துக்கு ...ரேந்திர ...மாடியின் ...பயர்

டெல் அவிவ், ஜூலை 6

இஸ்ரேலில் வளரும் மலர் ஒன்றுக்கு இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் நாட்டுக்கு முதன்முதலாக இந்தியத் தலைமை அமைச்சர் ஒருவர் வருகை தந்ததையொட்டி இஸ்ரேலில் சமீப காலமாக பெருமளவில் வளரும் மலரினத்துக்கு மோடியின் பெயரை சூட்டியுள்ளனர்.

‘இஸ்ரேலி கிரைசாந்தமம்’ என்ற மலர் இனி ‘மோடி’ என அழைக்கப்படும் என அந்த நாடு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. (ம)

முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு
28 . 07 . 1948



உதிர்வு
06 . 07 . 2016

திருமதி பஞ்சலிங்கம் இக்னேஸம்மா

அணையா எம் அகல்விளக்கு
அணைந்ததோ அன்று
ஆண்டவனடியில் வீழ்ந்து ஒளிவிளக்காய்
ஆனதே இன்று
அம்மா உங்கள் ஆசை முகம் காண மறுபடி வருவாய்
என்றென்றும் எம் தாயாய்
உங்களை தொலைத்தும் உங்கள் நினைவுகளால்
உறக்கம் தொலைத்தும் ஆனது ஆண்டு ஒன்று
நீங்கள் எமக்காக விட்டுச்சென்ற மிகப் பெரியவலி
நாம் உங்களுடன் பேச நினைக்கையில்
பேச முடியாமல் இருப்பதே... நீங்கள் வேணும் அம்மா.....
- எமக்கு நீங்கள் வேணும் அம்மா.....
உயிருக்கு உயிராக இதயத்தின் துடிப்பாக
உன்னத அன்பால் உங்கள் நினைவுகளில்
- நாங்கள் அம்மா

அந்தோனியார் கோயில் வீதி,
மந்துவில் புதுக்குடியிருப்பு.
077 345 9877

மாறாத உங்கள் பிரிவால் வருந்தும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# ...த்தில்

...யிரிழந்தனர். இறுதி ... 2013ஆம் ஆண்டு ...மாதம் 27ஆம் திகதி ... எனினும் பெரியள...துக்களை அது ஏற்ப...லை. கரும்புகை கக்... மிகச் சிறு வெடிப்...றுதியாக வெளிக்காட்டியது.

...லயில் ஜேர்மனியின் ஆய்வாளர்கள் ...ஞ்ஞானிகள் ஒன்றிணைந்து எட்...ஆய்வு செய்யும் பணியில் தற்போது ...கியுள்ளனர். எட்னா எரிமலையின் ...ய்வுகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுமார் 25 ரோபோக்கள் அதி நவீன தொழில்நுட்பங்கள் என்பனவும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எட்டாவின் தற்போதைய நிலை, அது அடுத்ததாக வெடிக்கப்போகும் மேற்கொள்ளும் காலப்பகுதி என்பன தொடர்பில் முக்கியமாக ஆய்வு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# அரசியல் என்பது வாய்ப்புக்கு ஏற்ப வளைவதுதான்

இதுவரை காலமும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று கூறிவந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இப்போது தனது கொள்கையைக் கைவிட்டுஅல்லதுதளர்த்திதேர்தலில்போட்டியிட முன்வந்துள்ளது. வடக்கு மாகாண சபை தமிழ் மக்களுக்கான தீர்வு அல்ல என்ற காரணத்தாலேயே, அதாவது மாகாண சபையை ஒரு தீர்வாகத் தாம் ஏற்காத காரணத்தாலேயே அந்தத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அந்தக் கட்சி கூறிவந்தது. இப்போது அந்த எண்ணத்தை மாற்றிவிட்டது. அது நல்ல விடயம்தான்.

போருக்குப்பின்னர்இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ்கட்சிதமிழ்த் தேசியக்கூட்டமைப்பில்இருந்து வெளியேறியது. அதன்பின்னர் வந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் எல்லாம் தனித்தே போட்டியிட்டுவந்தது. ஆனால்ஒருஆசனத்தைக்கூட அதனால் பெற முடிந்திருக்கவில்லை.

போருக்குப் பின்னரான தேர்தல்களில் ஈபிடிபி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றால்கூட நாடாளுமன்ற ஆசனங்களை வெல்ல முடிந்தபோதும், முன்னணியால் ஒரேயொரு ஆசனத்தைக்கூடப் பெற முடிந்திருக்கவில்லை.

இத்தனைக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பேசி வரும் கூட்டாட்சித் தத்துவத்திலிருந்து விலகி ஒரு நாடு இரு தேசம் என்கிற தீவிர தமிழ் அரசியலைப் பேசுவதாக அந்தக் கட்சி உரிமை கோரி வந்தபோதும் தமிழ் மக்கள் சில ஆயிரம் பேரைத் தவிர பெரும்பான்மையானோர் அந்தக் கட்சியை ஆதரிக்கத் தயாராக இருக்கவில்லை.

2015ஆம் ஆண்டில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில்கூட அந்தக் கட்சிக்கு 15ஆயிரம் வாக்குகளே வீழ்ந்தன. சமூக ஊடகங்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் ஆதரவுடனான பரப்புரைகள் ஊடாக அந்தக் கட்சிக்குக் கணிசமான வாக்குகள் கிடைக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தகுந்த மாற்று அரசியல் சக்தியாக அது வளரும் என்ற மாயை ஒன்று ஏற்படுத்தப்பட்டபோதும் அந்தக் கட்சி நாடாளுமன்ற ஆசனம் ஒன்றைத் தானும் கைப்பற்றவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய தமிழ்க் காங்கிரசும், கூட்டமைப்பின் ஊடாகத் தேர்தலில் வாய்ப்பு மறுக்கப்பட்ட தனிநபர்கள் சிலரும் சேர்ந்தே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கூட்டை உருவாக்கினார்கள். இந்தக் கூட்டு தொடர்ச்சியாக 3 நாடாளுமன்றத் தேர்தல்களில் தோற்றது. ஒரேயொரு ஆசனத்தையாவது பெறுவதற்கு நெருக்கமான வாக்குகளைப் பெறவும் தவறியிருந்தது.

இந்தப் பின்னணியில்தான் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப்போவதாக அந்தக் கட்சி இப்போது அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபை ஒரு ஏமாற்று என்பதை அம்பலப்படுத்துவதற்காகவும் மாகாண சபை முறைமை தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக இருக்க முடியாது என்பதை நிரூபிப்பதற்காகவும் தாம் மாகாண சபையிலும் உள்ளூராட்சி சபையிலும் போட்டியிடுவோம் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற ரீதியில் இந்த அறிவித்தலைஅந்தக்கட்சிவிடுத்தாலும், மாகாணசபையிலும் உள்ளூராட்சி சபையிலும் போட்டியிடுவதற்கு அந்தக் கட்சி எடுத்திருக்கும் முடிவு நல்லதே. இந்தச்சபைகளில் ஆக்கபூர்வமான எதிரணிக்கு இருக்கக்கூடிய வாய்ப்பை பயன்படுத்துவதற்கு மக்களும் அவர்களுக்குச்சிலவேளைகளில் இடமளிக்கக் கூடும். அது அவர்கள் எதிர்காலத்தில் செய்யப்போகும் அரசியலைப் பொறுத்தது.

எப்படியிருந்தாலும், அரசியல்என்பதுவாய்ப்புக்குஏற்பவளைவதுதான்என்பதைஅந்தக்கட்சிஇப்போதாவதுபுரிந்திருப்பதும், சப்பைக்கட்டுக்காரணங்களுடன்அதற்குமுன்வந்திருப்பதும் நல்லதொரு பட்டறிவுதான்.

அதே வாய்ப்புக்கேற்ப வளையும் அரசியலைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செய்கிறது என்கிற பட்டறிவையும் அந்தக்கட்சிபெறும்போதுகூட்டமைப்புடன்சேர்ந்துபயணிக்கும் புள்ளியை அது அடையும் என்று எதிர்பார்க்கலாம்.

# திட்டமிட்ட குடியேற்ற முயற்சிகளை தடுத்து நிறுத்தப் போராடியவர் மூதூர் தங்கத்துரை

மு.ஈழத்தமிழ்மணி

திருகோணமலை மாவட்டத்தில்மூதூர் தொகுதி தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திவரும் தமிழ் அரசுக் கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய மூதூர் தொகுதி முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் அ.தங்கதுரையின் 20ஆவது நினைவு தினம் ஜூலை 5ஆம் திகதியாகும்.

அமரர் தங்கத்துரை தமது இளம் வயதிலேயே அரசியல் ஈடுபாடு காட்டிச் செயற்பட்ட ஒருவராவார். தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழ் அரசுக்கட்சியில் இணைந்து 25 ஆண்டுகள் வரை பன்முகத்தோற்றம் கொண்ட நேர்மையான, கண்ணியமிக்க அரசியல்வாதியாக இருந்து திருகோணமலை மாவட்ட மக்களுக்க சேவையாற்றியிருந்தார்.

மூதூர்த் தொகுதியில்தமிழ் அரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட தங்கத்துரை, ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவராவார். கிளிவெட்டிக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து உயர்கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில்அவருக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் பதவி கிடைக்கப் பெற,உயர்கல்வியை இடைநடுவில் கைவிட்டார்.

## 1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் மூலம்அரசியலுக்குள் உள்வாங்கப்பட்டவர் அமரர் தங்கத்துரை

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் இரட்டைஅங்கத்தவர்தொகுதியான மூதூரில் அவரைத் தமிழ் அரசுக் கட்சி தனது வேட்பாளராக நிறுத்தியிருந்தது. அவரது இளமைத் துடிப்பும், ஆளுமையும், குரல்வளமும், நேர்மையான சிந்தனை கொண்ட எளிமையான போக்கும் மூதூர்த் தொகுதி மக்களுக்கு அவர் மீது ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த அந்தப் பொதுத்தேர்தலில் இரட்டைநாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மூதூர்த்தொகுதிக்கு அமரர் அ.தங்கத்துரை இரண்டாவது உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அமரர் தங்கத்துரை அந்த வெற்றியால் இறுமாப்படையாமல் தனது தொகுதியின்சகலமக்கள் மீதும் எந்தவித பேதங்களுமின்றி , அவர்கள் நலனில் அக்கறைகாட்டித் தமது அரசியல் பணியை முன்னெடுத்துச் சென்றார்.

ஏழு ஆண்டுகள் காலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தங்கத்துரை, தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட பின்னர் மூதூர் தொகுதியில் போட்டியிட முடியாத சூழ்நிலை 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி முஸ்லிம் மக்களுக்கான தொகுதியாக மாற்றியமைக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கான புதிய தொகுதியாக சேருவில உருவாக்கப்பட்டது. இதனால் மூதூர்த் தொகுதி தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்த போதிலும், தங்கத்துரை தமிழ் மக்களுக்கான தமது பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து வந்தார்.

## சிங்களமயமாக்கலை தீவிரமாக எதிர்த்தமை சிறைவாசத்துக்கு வழி வகுத்தது

1978ஆம்ஆண்டுஅமரர் தங்கத்துரையின் அரசியல் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டிருந்தது. ஏப்ரல் மாதகாலப்பகுதியில் கிளிவெட்டி பிரதான வீதியிலிருந்த பழமை வாய்ந்த அரச மரத்தை இரவோடு இரவாக தறித்தார் என்று குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளியாக இனம் காணப்பட்டு சிலகாலம் அவர் சிறைவாசம் அனுபவித்திருந்தார்.

சிறையில் இருந்த அந்தக் காலப்பகுதியில் சட்டப்படிப்பை மேற்கொண்டு சட்டத்தரணியாகஆனார். கிளிவெட்டிப் பிரதேசத்தை சிங்களமயமாக்கும் அப்போதைய அரசினது முயற்சிகளை எதிர்த்து முறியடித்திருந்தார். அவர் சிறைவாசம் அனுபவிப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என தமிழ் மக்கள் நம்பினர்.

1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட சபைத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் முதன்மை வேட்பாளராக நிறுத்தப்பட்டு மூவினமக்களின் சார்பில் வெற்றி பெற்று மாவட்ட சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த தங்கத்துரை, 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக கூட்டணி மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாகத் தமது தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

1994ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற சந்தர்ப்பம் தமிழர் விடுதலைக் கூட்டணியால் மீண்டும் தங்கத்துரைக்கு வழங்கப்பட்டது. அந்தப் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தங்கத்துரை தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றம் செல்ல வாய்ப்புக் கிட்டியது.

## திருகோணமலை மாவட்ட மேம்பாட்டுக்கு முன்னின்று உழைத்தவர்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கல்வித்துறை வளர்ச்சி மற்றும் சுகாதாரத் துறை மேம்பாடு என்பவற்றுக்குப் பெரிதும் உழைத்ததோடு, அந்த மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களையும் தடுத்து நிறுத்திய பெருமைக்குரியவர் அமரர் தங்கத்துரை. திருகோணமலை மாவட்டம் சிங்களமயமாக்கப்படுகின்ற முயற்சிகளை தோற்கடிப்பதற்காக தங்கபுரம், குமாரபுரம் என இரு கிராமங்களை உருவாக்கி தமிழ் மக்களை அங்கு குடியமர்த்தி வைத்தார்.



அமரர் அ. தங்கத்துரை

1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி கிளிவெட்டிப் பிரதேசத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது படையினர் பலர் கொல்லப்பட்டதையடுத்து படையினர் தமிழ் மக்கள் மீது நடத்திய தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டிருந்தனர். அந்தப் படுகொலைச் சம்பவத்தை உலகுக்குக் கொண்டு சென்றதில் தங்கத்துரையின் பங்கு அளப்பரியது.

அமரர் தங்கத்துரை 10 ஆண்டுகள் வரையில் நாடாளுமன்ற உறுப்பினராகவும், இரண்டு ஆண்டுகள் வரையில் மாவட்ட சபைத்தலைவராகவும் பதவி வகித்து, தமிழ்த்தேசியப் போராட்ட வரலாற்றில் துயரமானதொரு சம்பவத்திற்கு ஆளானார்.

1997 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி பிற்பகல் வேளையில் திருகோணமலை சிறி சண்முகா இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற புதிய கட்டிடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டிருந்தபோது, சில இளைஞர்களால் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கிளிவெட்டிப் பிரதேசமக்கள் இன்றும் அமரர் தங்கத்துரையின் சேவைகளைநன்றியுடன்நினைவு கூருகின்றனர். அவர் மறைந்து 20 ஆண்டுகள் கழிந்தாலும் வரலாற்றில் அவரது பெயரும் புகழும் நிலைத்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்



# மௌனம் கலையட்டும்!

ஓடும்; ஓடாது. என்ற ஒற்றை, இரட்டை பிடிக்கும் நிலையில் இருக்கும் நெடுந்தாரகை படகு, வடக்கு மாகாணசபையால் நெடுந்தீவு மக்களது பயன்பாட்டுக்கென வழங்கப்பட்டதொன்று. நெடுந்தாரகை பயணம் மேற்கொள்கிறது என்றால் இன்று அது ஒரு புதினம். நெடுந்தீவு மக்களுக்கு சிரமமற்ற கடற்பயணத்தையும், இறங்கு துறையையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதில் தீவின் முன்னைய கிராமசபைத் தலைமைகள் எடுத்த முயற்சிகள் காரணமாக சில்வஸ்பிறே, எலாரு, ராஜேஸ்வரி, அலையரசி, வடதாரகை, வலம்புரி, மணிமேகலை, குமுதினி போன்ற நெடுந்தீவுக் கடலைச் சமாளிக்கக் கூடிய சிறந்த படகுகளையும், குறிகாட்டுவான் துறை முகப் பாலத்தையும் அந்த மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக, ஏன், இன்றும்கூட குமுதினிப் படகு மக்களை ஏற்றி இறக்கி கடற்பயணத்தை மேற்கொண்டுவருகிறது.

நெடுந்தீவுக்கான ஒரேயொரு பயண வழித்தடம் படகுப் பயணமே. அது தடங்கல்கள் இன்றி ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதால், புதியபடகுகளை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக, வடதாரகை II, நெடுந்தாரகை என நவீன வசதிகளுடன் கூடிய படகுகளை நெடுந்தீவு மக்களுக்கு வழங்கியுள்ளதாக அரசும் வடக்கு மாகாணசபையும் பிதற்றிக் கொண்டதுதான் மிச்சம். இந்த இரண்டு படகுகளாலும் மக்களுக்கு எந்தவிதப் பயனும் கிட்டவில்லை. கடந்த கால கட்டங்களில் இடம் பெற்ற கஷ்டங்களை விட மக்கள், தற்போதுதான் மிகமோசமான கடற்பயணத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதாவது இருந்த படகுகளை விட புதிதாக வந்த படகுகள் மிகவும் கூடுதலான கஷ்டங்களை ஏற்படுத்தியதுதான் நிஜம்.

இந்தப் படகுகள், பாவனைக்கு வழங்கப்பட்ட வேளை மக்கள் அவற்றை வரவேற்ற ஆராவாரமும் மகிழ்ச்சியும் இப்போது இல்லாமல் போய்விட்டன. பெரும் நிதிச் செலவில் கட்டப்பட்ட இந்த நவீன படகுகளாலும், குறிகாட்டுவான் துறைமுகப் பாலத்தினாலும் நெடுந்தீவு மக்கள் எதிர்பார்த்த பயண வசதியும் நிம்மதியும் அவர்களுக்குக் கிட்டவில்லை. வடதாரகை II வருடத்தில் சிலநாள்களே பயணிகளை ஏற்றி இறக்கினாலும், பல மாதங்களுக்குப் படுக்கையில் வீழ்ந்து விடுகிறது. தற்போது உதிரிப்பாகங்கள் கிடைக்காததால் சிரம நிலையில் அது உறங்கிக் கிடக்கிறது.

### நெடுந்தாரகை படகை வழங்கியுள்ளதாக பெருமிதம் தெரிவிப்பு

'நெடுந்தாரகை படகைத் தந்திருக்கிறோம். நெடுந்தீவு மக்களுக்கு இனிப் பயணக் கஷ்டம் இல்லை' என்று பெருமைப்பட்டுக் கொண்ட வடக்கு மாகாணசபையினர், இப்போது அந்தப் படகையே மறந்துவிட்டவர்களாகி பிரதேசசபையின் பொறுப்பில் நெடுந்தாரகையைக் கையளித்துவிட்டு மௌனமாகிவிட்டார்கள். அதனை உரிய நிலையில் பயணிக்க வைக்க இயலாது இன்றுபிரதேசசபைதிண்டாடிக்கொண்டிருக்கிறது. இந்தப் படகுக்கு ஒரு நிரந்தர ஓட்டுநர் கிடையாது. பொறியியலாளர் இல்லை. இடைக்கிடையே எவராவது ஒருவரை வாடகைக்கு அமர்த்தி பயணிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு படகுக்கென ரூபா 98 லட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டு, பின்னர் நெடுந்தீவு பிரதேசசெயலகம் அந்தப் பணியைப் பொறுப்பேற்றதாகவும், அந்த நிதிக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலை உள்ளதாகவும், நெடுந்தாரகைக்கான செலவில் குமுதினி மற்றும் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் படகான சமுத்திரா தேவி போன்ற இரண்டு படகுகளைக் கட்டியிருக்கலாம் என்றும் பேசப்படுகின்றது. ஒழுங்கான சேவையை வழங்கக்கூடியதாக, நெடுந்தீவுக்கு உகந்ததாக, உரிய முறையில் படகு ஊழியர்களை அமர்த்தக் கூடியதாகத் திட்டமிட்டுக் கட்ட வேண்டிய படகுகளை எழுந்தமானமாகக் கட்டி ஒரு பகுதி நிதியைச் செலவிட்டுமிகுதியைத்தமதாக்கிக்கொண்டுவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்களும் இல்லாமலில்லை.

### துறைமுகத்தில் பயணிகள் படகுகளிலிருந்து இறங்கி ஏற இயலாத சிரம நிலை

படகுச் சேவைகள் சீர்குலைவு என்பது ஒருபுறம்என்றால், மறுபுறத்தில் பயணிகளுடன் வரும்படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுப் பயணிகளை இறக்கி ஏற்றுவதிலும் சிரமங்கள் எழுந்துள்ளன. ஓடமுடியாமல் கிடக்கும் தனியார் படகுகளும் துறைமுகப் பாலத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் பயணிகள் படகிலிருந்து இறங்கவும் படகில் ஏறவும் படகில் முடியாமல் சிரமப்படுகின்றனர். கட்டிக்கிடக்கும் படகுகளில் இறங்கி ஏறியே அவர்கள் வெளியேற வேண்டியுள்ளது. குறிகாட்டுவானில் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்ட இந்த நடைமுறை தொற்று நோயாக நெடுந்தீவுக்கும் பரவியுள்ளமைதான் வேடிக்கை. வடதாரகை, நெடுந்தாரகை படகுகள் இரண்டுமே நெடுந்தீவு துறைமுகப் பாலத்தின் இருபுறமும் நிறுத்திவைக்கப்பட்டிருக்க, ஏனைய படகுகளும் அவற்றுடன் இணைந்து நிற்க, பயணிகளுடன் வரும் படகுகள் நீண்ட நேரம் பயணிகளை இறக்க முடியாது தரித்து நிற்க வேண்டியுள்ளது. பிரதேச சபை இது குறித்து நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாததுடன். படகுகளுக்கான வரியும் கூடவசூலிக்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது. மக்கள்பிரதிநிதிகள் என வருவோர் அடுத்த தேர்தலில் தமக்கு வாய்ப்புக்கள் உண்டா என்பதை மட்டுமே அவதானித்துச்செல்கின்றனர்.

### பயணிகளது பயணச் சிரமம் குறித்து அக்கறை காட்டாத அதிகாரத் தரப்புக்கள்

கடந்த காலங்களில் பயணிகளுக்குப் பயணக் கஷ்டங்கள் ஏற்பட்ட வேளைகளில் முன்னைய தலைமைகள் உடன் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சிலபொது அமைப்புக்களின் நடவடிக்கையால் அப்போது படகுச்சேவைக்குப் பொறுப்பாக இருந்த இயந்திரப் பொறியியலாளர் திணைக்களத்தில்பணியாற்றிய என். நித்தியானந்தன், எம் . ஆர். பொன்னாண்டோ போன்ற தலைமைப்பொறியியளாளர்கள் ஒவ்வொருமாதமும் நெடுந்தீவுக்குவருகைதந்துபடகுச்சேவை நிலைமைகளை அவதானித்துத் திரும்பியதுடன் குறைபாடுகளை நிவர்த்திப்பதில் கவனம் செலுத்தினர். அத்தகைய நிலை தற்போது இல்லாமை துரதிஷ்டமே. நெடுந்தீவு பிரதேசசபை, பிரதேச செயலகம், மக்கள் பிரதிநிதிகள் என்போர் உட்பட மாகாணசபை நிர்வாகமும் தற்போதுநிலவும்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகளைமுன்னெடுக்கவேண்டும்மக்களும் மௌனங்களைத் துறக்க வேண்டும். அனாவசியமாக துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட படகுகளை அப்புறப்படுத்த வேண்டும்

> படகுச்சேவைகள் சீர்குலைவு என்பது ஒருபுறம் என்றால், மறுபுறத்தில் பயணிகளுடன் வரும் படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப் பட்டுப் பயணிகளை இறக்கி ஏற்றுவதிலும் சிரமங்கள் எழுந்துள்ளன.





## ஆசிரியருக்கான கடிதம்

### உதயனைத் தினமும் வாசித்து அறிய வாய்ப்பு ஏற்படுத்தித் தருவீர்களா?

உதயன் நாளிதழ் தமிழ்பேசும் மக்களின் மனம் நிறைந்த ஒரு நாளிதழாக உள்நாட்டிலும் பன்னாடுகள் ரீதியிலும் உலக நடப்புக்களை அன்றாடம் தாங்கி வந்து கல்லாதவர்கள் கூட கற்றறியும் வகையில் எம் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற நாளிதழாகத் திகழ்கிறது என்பதை எவராலும் மறுப்பதற்கில்லை. இருந்தபோதிலும், இந்த மண்ணில் இதுவரை உதயன் பத்திரிகைப் பிரதிகள் கிடைக்கப்பெறாதிருக்கின்ற ஊர்களையும் அவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற மக்களையும் காணக்கூடியதாகவே இருக்கின்றது. இதில் முக்கியமாக, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலே நல்லூர் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட முக்கொம்பன் பகுதி, மக்கள் செறிவு கூடிய இடமாக உள்ளது. இங்கு 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும், உதயனின் நாளிதழ் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள இயலாதிருப்பது மனதுக்கு வருத்தமளிக்கின்ற ஒன்றாகப் படுகின்றது. பூநகரி வாடியடி வரையும் மற்றும் அக்கராயன் ஸ்கந்தபுரம் வரை மேற்கொள்ளப்படுகின்ற உதயன் பிரதிகளின் விநியோக சேவையை, சிரமங்களை கவனத்தில் கொள்ளாது முக்கொம்பன் வரை மேற்கொள்ள வேண்டும் என்பது அந்தக் கிராம மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த விடயத்தை உதயன் நிர்வாகிகள் கவனத்தில் கொண்டு மக்கள் மத்தியில்வாசிப்புதிறனையும்விழிப்புணர்வையும் ஏற்படுத்த செயலாற்ற வேண்டும் என்பதே இந்தக் கிராமத்து மக்களின் வேண்டுகோளாகும்.

ஐ. லோகநாதன், முக்கொம்பன், பூநகரி

### பொதுசன நூலக வாசகர் வட்டம் தொடர்பில் தொடரும் விமர்சனங்கள்

கடந்தஜூன்மாதம்29ஆம்திகதிவியாழக்கிழமையன்று ஆசிரிருக்குக் கடிதம் பகுதியில்வெளிவந்தம. பாலசுப்பிரமணியம் என்ற உதயன் வாசகரின் கடிதத்தைப் படித்துவிட்டு அதிர்ந்துபோன நான், ஜூன் 15ஆம் திகதிய உதயனில் வெளிவந்த குறிப்பிடப்பட்ட சி. சிவதரனது கடிதத்தையும் தேடிப்படித்தேன்.

படிக்கப் புத்தகங்கள் ஒழுங்காக இல்லை எனக்கவலைப்படுபவருக்குப்படம் பார்க்கும்படி புத்திசொல்வதைக் கேட்டபோது, "சாப்பிடப் பாண் இல்லை என்றால் என்ன கேக் சாப்பிடலா:மே?" என்று கேட்ட ராசாவின் கதை நினைவுக்கு வருகிறது.

படம் பார்ப்பதால் தவளைகள் கிணற்றுக்கு வெளியே வந்து விடலாமென மானிப்பாய் ம. பாலசுப்பிரமணியம் கருதுவதாகத் தெரிவதால், தொடர்ந்து படம் பார்க்கும் தவளைகள் எல்லாம் கிணற்றுக்கு வெளியே வந்து விட்டனவா? எனக் கேட்கத்தோன்றுகின்றது.

சி. துளசிகாமணி, பிரம்படிலேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரி.வி.எஸ். கிங் 200 சிசி' முச்சக்கர வண்டிகள் சந்தைக்கு அறிமுகம்

## விற்பனைக்குப் பின்னரான சேவையை சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள முடிகிறது

இலங்கை விற்பனை சந்தைகளில் 'ரி.வி.எஸ் கிங் 200 சிசி' முச்சக்கர வண்டிகள்;கடந்த ஜூன் மாதம் 28 திகதி தொடக்கம் அறிமுகமாகியுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்தியாவில் முன்னணி முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான ரி.வி.எஸ் மோட்டார் கம்பனி மற்றும் இலங்கையில் மோட்டார் வாகனத் துறையின் முன்னணி நிறுவனமான அபான்ஸ் ஒட்டோ நிறுவனம் என்பன ஒன்றிணைந்தவிதமாகவே 'ரி.வி.எஸ் கிங் 200 சிசி' மாதிரியிலான முச்சக்கர வண்டிகளை இலங்கையில் முதன் முறையாக அறிமுகம் செய்துள்ளது.



> "ரி.வி.எஸ். கிங் முச்சக்கர வண்டிகளின் ஜி5 ஆரம்ப மாதிரி, எவ்.எல்.டி – கரடடல லோடட் மாதிரி மற்றும் எவ்.பி – ஜி.டி பிரேட் மாதிரிகளை நாடு முழுமையுமாகவுள்ள அபான்ஸ் ஒட்டோ காட்சியறைகளில் 6 லட்சத்து 91 ஆயிரம் ரூபா விலை நிர்ணயத்தில் சிவப்பு, பச்சை, நீலம், கறுப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை நிறங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் கூட்டு ஒப்பந்தத்தின் படி அபான்ஸ் குழுமம் நாடு முழு மையுமாக அமைத்துக் கொண்டுள்ள 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காட்சியறைகளின் மூலம் ரி.வி.எஸ் கிங் 200 சிசி மாதிரியிலான முச்சக்கர வண்டிகளை உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து வருவதுடன் ரி.வி.எஸ் கிங் வாடிக்கையாளர்களுக்காக அபான்ஸ் பினான்ஸ் மூலம் குறைந்த விலையிலான விசேட நிதி வசதிகளும் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணைவு குறித்துக் கருத்துரைத்துள்ள ரி.வி.எஸ் மோட்டார் கம்பனி நிறுவனத்தின் பன்னாட்டு வியாபாரத்துக்கான சிரேஸ்ட துணை தலைவர் ஆர். திலிப்.

"இலங்கையர்கள் அனைவரும் அறிந்து கொண்டுள்ள அபான்ஸ் என்ற பெரு நாமத்தின் கீழாக இயங்கும் அபான்ஸ் ஒட்டோவின் நாடளாவிய ஆயிரத்து 500 இற்கும் அதிகமான காட்சியறைகளின் மூலம் மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க வேண்டும் என்பதே எமது நம்பிக்கை. விற்பனை மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவைகளை சிறந்தமுறையிலே வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு மேன்மையான திருப்தியை சேவை மூலம் வழங்குவதே எமது இலக்கு." - என்றார்.

அபான்ஸ் பி.எல்.சி முகாமைத்துவப் பணிப்பாளர் பேமன் பெஸ்டொன்ஜி இது குறித்துக் கருத்துரைக்கையில்:

"இலங்கையின். அனைத்துச் சூழ்நிலைகளுக்கும் மிகவும் சிறந்த முறையில் பொருந்தும் முச்சக்கர வண்டியாக ரி.வி.எஸ் கிங் 200 சிசி இனை அறிமுகம் செய்ய முடியும்." - என்றார்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள இந்த ரி.வி.எஸ் கிங் 200 சிசி முச்சக்கர வண்டியானது பலம், தோற்றம், சொகுசு, கவர்ச்சி மற்றும் ஓட்டத் தன்மை என்பன தற்போதைய நகரமயச் சூழ்நிலைகளுக்கு பொருத்தமுடையதாக அமைந்துள்ளது. அதியுயர் 200சிசி கொள்ளளவில் நவீன 'Low Friction 7Port' இயந்திர வலுவைக் கொண்டுள்ளது. வீதிகளில் வழங்கப்பட்டுள்ள வேக வரையறைகளுக்கமைவான முறையிலே இயந்திரங்கள் இயங்குநிலை பெறுவதால் நீண்ட நாள்களுக்கு உழைக்கும் வல்லமையைக் கொண்டுள்ளதோடு. மிகச்சிறந்த முறையில் எரிபொருளை சேமிக்கின்றது. ஏனைய போட்டி மாதிரிகளில் இல்லாத சிறப்பம்சமாக ஓட்டுநருக்கு மிகவும் இலகுவாகவும், வண்டியின் தோற்றத்துக்கு மிகவும் கவர்ச்சிகரமாகவும் அமைந்துள்ளது.

# 'வேல்ட் கப்பிரல் சென்ரர்' திட்டம் கைச்சாத்து

## ஆசியாவின் மூன்றாவது உயரமான கட்டடத்தை அமைக்கத் தீர்மானம்

இலங்கை முதலீட்டு சபையின் 'வேல்ட் கப்பிரல் சென்ரர்' எனும் திட்டத்துக்கான 2 பில்லியன் ரூபா பெறுமதி உடைய தான-புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதான தகவல்கள் தெரி



விக்கப்பட்டுள்ளது.
முதலீட்டுச் சபையின் தலைவர் [illegible] சூரியவங்கு[illegible] 'வேல்ட் கப்பிரல் [illegible]

திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் இடையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது.

மேலும் இத்திட்டத்தில் முதலீடு செய்வதற்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் 'அல் அமான்' வர்த்தக நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த உத்தேச [illegible] துக்கு அமைவாக 117 மாடிகளைக் கொண்டமைந்த 625 மீற்றர் உயரமான கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் இத் திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்தால் ஆசியாவின் மூன்றாவது உயரமான கட்டடமாகவும் உலகின் ஒன்பதாவது கட்டடமாகவும். இது பதிவாகும் என்பது நோக்கத்தக்கது.

# நட்டத்தை மீள அறவிட முடியும்

## முறிகள் விநியோகம் குறித்து சட்ட மா அதிபர் தகவல்

முறிகள் விநியோகத்துடன் நேரடி தொடர்புடையதான ஏதேனுமொரு தரப்பு நட்டத்தை ஏற்படுத்தியிருந்தால் அந்தத் தரப்பிடம் இருந்தே மீள அறவிட முடியும் என்ற தகவல் தரல் சட்ட மா அதிபரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நிதி கையாளல் தொடர்பில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதாகச் சொல்லப்படும் மத்திய வங்கியின் முறிகள் விநியோகம் தொடர்பான கோப் குழு அறிக்கை குறித்து நாடாளுமன்ற செயலாளர் நாயகம் கேட்டதான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையிலே சட்ட மா அதிபர் அனுப்பி வைத்துள்ளதான கடிதப் பிரதியிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும்,

"முறிகள் விநியோகம் தொடர்பில் குற்றவியல் விசாரணை நடத்துவதற்கு பொலிஸ் முறைப்பாடு அத்தியாவசியமானது. ஏற்கனவே மத்திய வங்கியின் ஆளுநர் இந்த முறைப்பாட்டினை மேற்கொண்டுள்ளதால் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் நட்டத்தை மீள அறவிடுவதற்கு முன்னதாக நீதிமன்றத்தில் அதனை நியாயமான முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும். இந்த மதிப்பீட்டினை கணக்காய்வாளர் நாயகமே மேற்கொள்ள வேண்டும். இதற்காக நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெற முடியும். ஆரம்ப வாடிக்கையாளர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய வங்கிக்கு சட்ட அதிகாரம் உள்ளது" என்பதான தகவல்களும் சட்ட மா அதிபரின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலைசிறந்த வங்கிக்கான விருதை கொமர்ஷல் வங்கி வென்றது

## ஏழாவது ஆண்டாகவும் தெரிவு நிலைக்குட்பட்டுள்ளது




ஹொங்கொங்கில் இடம்பெற்ற பினான்ஸ் ஏஸியாவின் சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் கொமர்ஷல் வங்கி தொடர்ந்து ஏழாவது ஆண்டாகவும் இலங்கையின் தலைசிறந்த வங்கிக்கான விருதைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் சார்பாக அதன். முதன்மைச் செயற்பாட்டு அதிகாரியும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எஸ்.ரெங்கநாதன் பங்கேற்றதுடன் விருதைப் பெற்றுக்கொண்டார்.

வங்கிகளின். செயற்பாடுகள், குறிப்பிட்ட ஆண்டில் அதன் பிரதான நிகழ்வுகள், லாபம் உட்பட நிதிப் பெறுபேறுகள்.என்.பி.எல் விகிதாசாரங்கள். ஒதுக்கீடுகள், பங்குவருமானம், மூலதன சமவிகிதாசாரம், மொத்த சொத்துக்கள், கடன்கள், வைப்புக்கள், கிளைவலையமைப்பு, தூர நோக்கு மற்றும் நீண்டகால மூலோபாயம், சந்தைநிலை, கிட்டிய போட்டியாளர், பிரதான லாப மூலம், பங்குச் சந்தை மதிப்பீடுகள் பற்றியதான பின்னூட்டங்கள் என்பனவற்றை கருத்திற் கொண்டே இந்தத் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றமை குறித்து நோக்கத்தக்கது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

5/7/2017
www.cse.lk

| | | | |
|---|---|---|---|
| ASPI | -24.37 | 6,709.76 | 6,734.13 |
| S&P SL20 | -13.47 | 3,907.12 | 3,920.59 |
| [illegible] | | 854,731,650 | 509,240,864 |
| உள்நாட்டு [illegible] | | 193,979,904 | 202,277,440 |
| [illegible] | | 250,098,960 | 269,906,336 |
| வெளிநாட்டு [illegible] | | 660,751,740 | 306,963,424 |
| [illegible] | | 604,632,700 | 239,334,528 |



| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| [illegible] | JKH.N | 175.50 | 1,610,263 | 285,014,235 |
| [illegible] | CCS.N | 860.00 | 135,956 | 115,572,170 |
| [illegible] | HHL.N | 153.00 | 458,141 | 70,095,940 |
| [illegible] | COMB.N | 139.10 | 350,211 | 48,993,519 |
| [illegible] | DIAL.N | 11.90 | 4,023,651 | 47,881,137 |
| [illegible] | HNB.N | 243.00 | 181,021 | 43,811,861 |
| [illegible] | HNB.X | 193.10 | 209,772 | 40,514,628 |
| [illegible] | RICH.N | 10.70 | 2,404,963 | 24,787,201 |
| [illegible] | AEL.N | 25.90 | 565,064 | 14,505,373 |
| [illegible] | CRL.N | 38.00 | 303,336 | 11,224,473 |

- பங்குலாபம் -

[illegible] - ரூபா 0.07 சதம்
[illegible] - ரூபா [illegible]
[illegible] - ரூபா 1.87

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | [illegible] |
| பரிமாற்றத்தில் | 229 |
| [illegible] | 11.5 |
| [illegible] | 1.5 |
| [illegible] | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னவன்



# எனை நீயும் உனை நானுமாய் காவல் செய்வோம்

## மனிதம் கொள்ளும் இயற்கையின் வேண்டுகை

இறைபடைப்பில் இயற்கைமனிதர்களோடு ஊடாடும் அன்பு காத்திரமானது. நிலைத்திருப்பெனும் சமனிலையின் சூத்திரமானது. ஆனாலும் அங்குவலிகளும், ஒற்றுமையின் கூட்டிணைவற்ற உடைவுகளும்வீழ்ச்சிநிலைகளைத் தருகின்றன. இந்நிலையில் எனை நீயும் உனைநானுமாய் காவல் செய்வோம் என்ற பரிபாசைகள் எம்மிடையாய் இயற்கையின் மொழி வடிவாய் அசைவுறுகின்றன. மனிதம் கொள்ளும் இயற்கையின் வேண்டுகையாய் தனித்துவம் பெறுகின்றன. ஆசுவாசமாய் கதை பறைகின்றன. கேட்டிருப்போம்.

**அழைப்பிடல்**

வலிகளால் உனக்கொருகடிதம் மனிதா. நீஎனக்குச்செய்துவிட்டகொடுமைகளால் என் பொறுமையும் காற்றோடு கலந்துவிட்டது. நான்உனைப் படைத்தவள் என்றும், உனை வாழவைப்பவள் என்றும் தெரிந்துகொண்டு செய்துவிட்டகொடுமைகள் கொஞ்சமல்லஅதிகம் தான்.

நீ எனை அழிக்கும் போதுநானும் கேட்டலின்றிதன்னிலையுள் உறைந்திருந்தேன். கண்கள் பனித்திருந்தேன். கோபம் கொண்டவளான போதும் உனக்காகப் பொறுமைகொண்டேன். கலகலப்போடுமரங்களாய் அசைவுற்றிருந்த எனை நீங்கள் வெட்டி வீழ்த்தியதும் சரிந்தது என் உடல்கள். ஆனால் மறைந்துகொண்டது உம் சரித்திரம்.

சுயநலக்காரனாய் நவீனங்களுள் சொகுசுகொண்டாய். அதிலும் ஏதோகண்டுகொண்டாய். எனை வீழ்த்தியதால் சந்ததிகள் காலஅந்தரிப்போடுஅழியப்போவதைஎண்ணிப் பார்க்கவில்லை. குழந்தைஎன்று நான் உனைஎண்ணிக்கொண்டேன். அதுபற்றிப் பூரித்தும் போயிருந்தேன். ஆனாலும் நீயோ எனை அழித்துப் பெருமூச்சோடு ஏப்பம் விடுகிறாய். ஏனிந்தநிலை பெறல்? இப்போது நீபடும் வேதனைகளைக் கண்டுகொள்கிறேன். என்னிலையுள் தவிக்கிறேன். எதுவாகிலும் நான் உன் தாயல்லவோ..?

**சொற் பொழிவு**

வெப்பத்தால் நீ கருகுவதையும், பசுமை துறந்து இறந்துகிடப்பதையும் பார்த்துத் துடித்துப்போகிறேன். அதைப் போக்கிடஎன் கைகளைநீட்டிஉனக்குப்பசுமைதரத்தான் நினைக்கின்றேன். முடியவில்லை. பசுமை நிறைந்துஎங்கும் பரந்திருக்கவேண்டிய நிலங்கள் இன்று பாலைவனமாய் காட்சியுறுகின்றன. எனை கண்கள் கூசும்படியாய் இருக்கின்றன. என்ன சொல்ல, உனை மன்னிக்கும் எண்ணம் எனக்குக் கொஞ்சமும் இல்லை. நீ தெரிந்து செய்த பிழை என்பதால் தவறுகளுக்கான தண்டனைகள் ஆரம்பம், இனிமுடிவில்லை!


மழையைவேண்டிப் பொங்கல் இடுகிறாய். குளிர்த்தியும் செய்கிறாய். இருந்தும் பயனேதுமின்றிப் பரிதவிக்கின்றாய். நீ எனைச் சரித்து வீழ்த்திய போதுகதறினேன். கை எடுத்தும் கும்பிட்டேன். கண்டுகொள்ளவில்லையே உன் மனம். எனை நீ அழிக்கும் போதுநான் அனைத்தையும் ஏற்றிருந்தேன். பிறகெதற்கு வார்த்தைகளின் தூற்றல்? உனை நான் அழிக்கும் போது மட்டும் எனை பழிக்காறியாக்குகிறாய்! இரக்கமில்லாதவள் என்றும் வைகிறாய்! என்ன பிழைசெய்தேன் என்று எனையும் குற்றவாளிக் கூண்டில் நிற்கச் சொல்கிறாய்?

**பிறப்பு**

அன்று உன் பிறப்பும் பிஞ்சுக் கால்களின் எட்டிஉதைப்பும் எனக்குக் கொஞ்சமுமாய் வலிதரவில்லை. எனை ஆழங்கண்டு விதையாய் திருநிலைப்படுத்திப் பயிராக்கிய போது அன்னையாய் பூரித்துப் போனேன். இன்று புது முகம் கொள்கிறாய். என்னுள் ஆழங்கண்டு அணுகுண்டுகளையும், வெடிகுண்டுகளையும் பரிசோதனைசெய்கிறாய். ஆடிப்போகிறேன். அதிர்வு கொண்டு துடிக்கிறேன். அன்றுகுப்பைகள் புதைத்து எனை ஆகாரம் கொண்டுஆதாரம் செய்து பதப்படுத்தினாய். இன்று ஜீரணமற்ற புதைவுகளைத் திணித்து மூச்சடங்கச் செய்கிறாய். இயற்கையை வஞ்சிக்கும் உளம் கொண்டு மனிதம் இழந்து போவதும் சரிதானா..? முன்னொரு காலம் என் கடற்கரையோரங்களின் மாசுமருவற்றகாற்றை அனுதினமும் சுவாசம் கொள்வாய். இன்று நோய்களோடு ஆசுவாசம் கொள்கிறாய். வினைவிதைத்து நயமற்ற அறுவடையும் செய்கிறாய்.

என்னைப் பகைத்துக் கொள்ளும் அளவுக்கு உந்தன் விந்தையுறும் விஞ்ஞானம் இன்னமும் வளர்ச்சி காணவில்லை. காலத்தின் அர்த்தமானகடல்தாவரங்கள் என் குழந்தைகள். எனை அலங்காரம் செய்துமகிழ்ந்தனர். உந்தன் அழி நிலையால் உயிர் துறந்தனர். கரையோரங்கள் கரைகின்றன. சீற்றம் கொண்டுஉம்மிடம் நாடிவிரையப் பணிக்கின்றன.

கடற்தாயவளாய் கோரக் காட்சிகள் கண்டு எனை விமர்சனம் செய்கிறீர்.



**புரிதலின்மை**

மனிதா! நீ முதிர்வு கண்டுவிட்டாய். முதுமையும் கொண்டாய். விஞ்ஞானம் என்றுரைத்து வளர்ச்சிகண்டாய். ஆனாலும் உன் தாயாகி இயற்கையாய் இன்னமும் மாற்றமின்றி இருக்கிறேன். மாறவில்லை அழிவுற்றிருக்கிறேன். இல்லை இல்லைஉன்னால் அழிவைக் கண்டுகொண்டுள்ளேன். இதுவே மிகப்பொருத்தம். வெளிச் சொல்லிவிடமுடியாதமனவருத்தம். நீதூங்கவில்லை மனிதா. தூங்குவதைப்போலவே நடிக்கிறாய். முன்னேறிச் செல்ல விரும்புகிறாய். உன் பயணத் தடைகளைச் சிந்தனையின்றி அழிக்கிறாய்.

மனிதா! நீ அழித்தவையும் தவறவிட்டவைகளும் திரும்பப் பெறமுடியாதவை. புரிந்துகொள்ளமறுக்கிறாய். உண்மை தான், உன் வளர்ச்சி வீசும் புயலையும் பெய்யும் மழையையும்சுட்டெரிக்கும்சூரியனையும் மாற்றிவிட்டது. நீ நீயாக இன்னமும் எதனையும் அறியமுற்படவில்லை. பல உருவங்களும், பலநாமங்களும் எனக்குண்டு. சீற்றம் கொண்டு அடை மழையாய் கண்ணீர் சொரிவேன். பெரும் புயலாய் மூச்செறிந்துபேசுவேன். என் வேதனைகள் அத்தனையையும் இடியாய் முழங்கிடுவேன். மண்சரிவாய் என் முகம் மூடிப் பரிவு கொள்ளேன். கோபம் கொண்டுகண்களால் கனலைக் கக்கிஎங்கும் வறட்சி நிலவச் செய்திடுவேன். அலைகளின் விஸ்வரூபம் கொண்டு அமைதியற்று சுனாமி ஆவேன். நிலநடுக்கமாகி அதிர்வுகொண்டு உமை விழுங்கிடுவேன்.

**வேண்டுகை**

இனியாவதுநிறுத்திக் கொள் மனிதா! கற்றுக்கொடுக்கிறேன் கற்றுக்கொள்! நீ வெயிலில் கருகுவதையும், வெள்ளத்தில் மூழ்குவதையும், மணலினுள்ளாய் திணறிச் சாவதையும், கடலலைகளுடன் கட்டுண்டுபோவதையும், தண்ணீரின்றித் தவிப்பதையும், வறட்சியால் வாடுவதையும் தாயாக இரசனை கொண்டுபார்த்திருக்கமுடியவில்லை. வலிகொள்கிறேன். எனை நீயும் உனை நானுமாய் காவல் செய்வோம். மனிதம் கொள்வோம். இயற்கை எனும் உறவுகடந்து ஆத்மார்த்தமாய் இரு கரம் பற்றிஅரவணைப்புறுவோம். உன் புதுவரவை எண்ணியபடி காத்திருப்பேன். நம்பிக்கை கொண்டு வலிகளோடே விடை பெறுகிறேன். விரைவில் நற்சிந்தனையோடு என் பாதைகள் சீர் செய்து உன் பாதையின் ஆளுகைகள் நிமிர்வு காணப் பயணம் கொள்வாய். இயற்கையோடு தீங்கின்றி இயல்பாய் இயற்கை யுறுவாய் மனிதா....



> என்னைப் பகைத்துக் கொள்ளும் அளவுக்கு உந்தன் விந்தையுறும் விஞ்ஞானம் இன்னமும் வளர்ச்சிகாணவில்லை. காலத்தின் அர்த்தமான கடல்தாவரங்கள் என் குழந்தைகள். எனை அலங்காரம் செய்துமகிழ்ந்தனர். உந்தன் அழி நிலையால் உயிர் துறந்தனர். கரையோரங்கள் கரைகின்றன. சீற்றம் கொண்டுஉம்மிடம் நாடி விரையப் பணிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு, கேது பெயர்ச்சிப் பலன்கள்



## கன்னி

உத்திரம் 2,3,4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2ம் பாதம்

சமயோசித புத்தியுடன் செயலாற்றுபவர்களே! உங்களுக்கு 27.7.17 முதல் 13.2.19 வரை ராகு இலாப வீட்டிலும், கேது 5ம் வீட்டிலும் அமர்ந்து பலன் தரப்போகிறார்கள்.

**ராகுவின் பலன்கள்:**
ராகு உங்கள் ராசிக்கு இலாப வீடான 11ம் வீட்டுக்கு வருவ தால் உங்களின் புகழ், கெளரவம் உயரும். எதிலும் வெற்றி பெறுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் குடிக்கொள்ளும். வீண் செலவுகளைக் குறைப்பீர்கள். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். கல்வியில் பிள்ளைகளின் நிலை உங்களைத் தலைநிமிரச் செய்யும்.

**ராகு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:** உங்களின் ராசியாதிபதியும் ஜீவனாதிபதியுமான புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் 27.7.17 முதல் 4.4.18 வரை ராகு செல்வதால், இந்தக் காலகட்டத்தில் பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். ஆபரணங்கள் வாங்குவீர்கள்.
5.4.18 முதல் 10.12.18 வரை உங்களின் ஜீவனாதிபதியும் லாபாதிபதியுமான சனி பகவானின் பூசம் நட்சத்திரத்தில் ராகு செல்வதால், நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். மகளுக்குஊரேமெச்சும்படிதிருமணத்தை நடத்துவீர்கள். பழைய கடன் பிரச்னை ஒன்று தீரும்.
11.12.18 முதல் 13.2.19 வரை, உங்களின் சுக சப்தமாதிபதியான குருவின் புனர்பூசம் நட்சத்திரம் 4ம் பாதம், கடகராசியில்ராகு பயணிப்பதால், சிக்கனம் அவசியம்.

**கேதுவின் பலன்கள்:**
கேது பகவான் தற்போது, உங்கள் ராசிக்குப்பூர்வ புண்ணிய வீடான 5ம் வீட்டுக்கு வந்து அமர்கிறார். முடிவுகள் எடுப்பதில் குழப்பம், எடுத்த காரியங்களில் தடை தாமதம் ஏற்படும். பூர்வீகச் சொத்துப் பிரச்னை பெரிதாகும். புதியவர்களை நம்ப வேண்டாம்.
குடும்பத்தினருடன் செலவிடக்கூடிய நேரம் குறையும். பழையகடன்பிரச்னையைநினைத்துப்புலம்புவீர்கள். வாகனம் பழுதாகி சரியாகும். முகஸ்துதி செய்பவர்களை நம்ப வேண்டாம். வெளிவட்டாரத்தில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும்.

**கேது பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
27.7.17 முதல் 29.11.17 வரை உங்களின் திரிதிய, அஷ்டமாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரம் 1, 2ம் பாதம் மகர ராசியில் கேது பகவான் செல்வதால், இந்தக் காலகட்டத்தில் சகோதரர்களால் நிம்மதி கெடும். சொத்து வாங்குவது விற்பதில் வில்லங்கம் உண்டாகலாம். சொந்த வாகனத்தில் இரவு நேரப் பயணங்களைத் தவிர்க்கவும்; சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும்.
உங்களின் லாபாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 30.11.17 முதல் 6.8.18 வரை கேது செல்வதால் குடும்பத்தில் சந்தோஷம் குடிகொள்ளும். புது பதவிகள், பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுவீர்கள். புது வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும்.
7.8.18 முதல் 13.2.19 வரை உங்களின் விரயாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2, 3, 4ம் பாதம் மகர ராசியில் கேது செல்வதால், செலவுகள் துரத்தும். அரசு காரியங்கள் தாமதமாகி முடியும். வியாபாரத்தில் சந்தை நிலவரத்துக்கேற்ப முதலீடு செய்யுங்கள். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். வேலைச் சுமை அதிகரிக்கும்.
புதிய உத்தியோக வாய்ப்புகள் வந்தாலும் பொறுத்திருந்து செயல்படுவது நல்லது. மொத்தத்தில் இந்த ராகு கேது பெயர்ச்சி, உங்கள் செயல் வேகத்தை அதிகப்படுத்துவதுடன் பணம், பதவியைப் பெற்றுத் தருவதாக அமையும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1986- வடக்கும் கிழக்கும் இணையாத திட்டத்தைப் பரிசீலிக்கத் தயாரில்லையென போராளிகள் குழு எம்.ஜி.ஆரிடம் அறிவித்தன.
1995- நாடாளுமன்றஉறுப்பினர்கள் கட்சி மாறி வாக்களிக்க வழிசெய்யும் சட்ட ஏற்பாடு விரைவில். சிறப்பு அரசமைப்பு திருத்தமாகக் கொண்டுவர அரசு முடிவு
1483- இங்கிலாந்துஅரசராகமூன்றாம்றிச்சார்ட் முடிசூடினார்
1484- கொங்கோ ஆற்றின் வாய்ப் பகுதியை போர்த்துக்கேய கடல் கப்டன் டியசோ காவோகண்டுபிடித்தார்.
1535- இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி யரசனுக்குஎதிரானதேசத்துரோகக்குற்றச்சாட்டில் சேர் தோமஸ் மூர் சாவுத்தண்டனைக்கு உள்ளானார்.
1630- ஹஸ்ரவஸ் அடல்பஸ் தலைமையிலான நாலாயிரம் சுவிஸ் துருப்புக்கள் ஜேர்மனி பொமறேனியாவில் தரையிறங்கின.
1892- பிரிட்டன் நாடாளுமன்றின் முதல் இந்தியஉறுப்பினராகதாதாபாய்நவ்ரோஜி தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1892- மூவாயிரத்து எண்ணூறு உருக்குத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோதுபின்கோரன்நிறுவனத்தினருடனானஒருநாள்மோதலில் பத்துப்பேர் உயிரிழந்ததுடன், டசின் சணக்கானோர் காயமடைந்தனர்.
1936 - இங்கிலாந்து மான்செஸ்டர் போல்ரன் அன்பெரி கால்வாய் உடைப்பெடுத்து, பெருமளவுநீர்200அடிநீர்வீழ்ச்சியாக இர்வெல் ஆற்றில் சேர்த்தது.
1939 - ஜேர்மனியிலிருந்த யூதர்களின் கடைசி வர்த்தக நடவடிக்கைகளும் முடக்கப்பட்டன.
1944 - அமெரிக்காவில் ஹாட்போர்ட் சேர்க்கஸ் தீயில் 168 பேர்வரை சாவடைந்ததுடன், 700 பேர் வரை காயமடைந்தனர்
1964 - ஐக்கிய இராச்சியத்திடமிருந்து மாலாவி சுதந்திரப் பிரகடனம் செய்தது
1975 - பிரான்சிடமிருந்துகொமோறோஸ்சுதந்திரம்செய்தது
1989 - டெல்அவிவ் இல்பஸ்ஒன்றுதற்கொலைத் தாக்குதலுக்கு உள்ளாகியதில் 14 பயணிகள் உயிரிழந்தனர்
2006- சீன இந்தியப் போரை அடுத்து இந்தியா, சீனாவுக்கு இடையேயான நாதுலா கடவை மூடப்பட்டது. 44 ஆண்டுகளின் பின்பே வர்த்தக நடவடிக்கைகளுக்காக மீளத்திறக்கப்பட்டது.

**நாளை**

**ஆனி - 23**
வெள்ளிக்கிழமை -07.07.2017
திதி: திரயோதசி கா. 06.37 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப.01.02 வரை
சுபநேரம்:05.58-07.28 வரை
ராகுகாலம்:10.30-12.00 வரை

# இது தகுமா?

வழக்கம்போல் மற்றொரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி. இம்முறை அவர் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார். இஸ்ரேல் சென்றதன்மூலம் அந்த நாட்டுக்குச் சென்ற முதலாவது இந்தியத் தலைமை அமைச்சர் என்ற சிறப்பு மோடிக்குக் கிடைத்துள்ளது. எந்த நாட்டுக்குச் சென்றாலும் அந்த நாட்டின் குறைகளை மறைத்து ஒப்பந்தங்களை நகர்த்துவதில் கில்லாடியான மோடி, இஸ்ரேலில் வைத்து வன்முறைகள் மற்றும் தீவிரவாதம் என்பவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தள்ளார்.
இஸ்ரேலில் அவர் ஆற்றிய முதல் உரையில் 'மனிதம் மற்றும் நாகரீக மதிப்பு இருக்கும் ஒவ்வொருவரும் தீவிரவாதம், வன்முறைக்கு எதிராகப் போராட முன்வர வேண்டும் , அதற்கான காலம் இது என்று தெரிவித்துள்ளார். அவரது உரையின் சாராம்சம் வன்முறை மற்றும் அடக்குமுறைகளைச் சார்ந்ததாக இருந்தது. ஆனால் அதையே தனது தலையாக கடமைகளில் ஒன்றாகச் செய்யும்இஸ்ரேல்நாட்டில்நின்றுகொண்டு மோடி இவ்வாறு தெரிவித்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.
1946ஆம் ஆண்டு வெளியான உலக வரைபடத்தின்படி இஸ்ரேல் சிறு துரும்பாக இருந்தது. பலஸ்தீனம் பரந்துவிரிந்து காணப்பட்டது. இஸ்ரேலிய இராணுவம் ஊடுருவித்தாக்குதல் நடத்துவதில் உலகின் ஆகச் சிறந்த படையாக உள்ளது. எனவே அது தனக்கெ உரிய பாணியில் பல்வேறு ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு பலஸ்தீன எல்லைகளை வேட்டையாட ஆரம்பித்தது. 1947ஆம் ஆண்டு வரைபடத்தில் இஸ்ரேலும் பலஸ்தீனமும் சம அளவில் இருந்தன. 2000ஆம் ஆண்டின் வரைபடத்தின்படி இஸ்ரேல் பரந்துவிரிந்துள்ளது. பலஸ்தீனம் மிகக் குறுகியதாக வந்துவிட்டது. இன்னும் ஓரிரு தசாப்த காலத்தில் பலஸ்தீனம் என்ற ஒரு நாடு இல்லாமல் போகும் அளவுக்கு




இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோபாவம் உள்ளது. கிழக்கு ஜெருசலேம், மேற்குக் கரை உள்ளிட்ட இடங்களில்எல்லாம்இஸ்ரேலின் வெள்ளை மற்றும் நீல வர்ணக் கொடிகள் தற்போது தாறுமாறாக பறக்கின்றன. இது தமது பாரம்பரியம் என்றும் அதை தமக்கு விட்டுவிட வேண்டும் என்றும் பலஸ்தீனம் வாதாடுகிறது. ஐக்கிய நாடுகள் சபையும் பலஸ்தீனத்தின் பக்கமே உள்ளது. மேலும் பிரான்ஸ், ஜேர்மனி, கனடா உள்ளிட்ட நாடுகளும் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக உள்ள போதிலும் உலக வல்லரசான அமெரிக்காவின் ஆதரவைவைத்துத்தனது ஆக்கிரமிப்பைச் சிறப்பாக கொண்டு செல்கிறது இஸ்ரேல்.
அப்படியாயின் இஸ்ரேலிடம் வன்முறை இல்லையா, தீவிரவாதப் போக்கு இல்லையா? ஆக்கிரமிப்புக்கும் எண்ணம் இல்லையா? இதற்கு ஆம் என்ற பதில் கிடைக்குமாயின் மோடி, இஸ்ரேல் தனது தீவிரவாதம், ஆக்கிரமிப்பு, வன்முறை ஆகியவற்றைக் கைவிட வேண்டும் என்று தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் தெரிவிக்கவில்லை. இஸ்ரேலில் உள்ள அழகிய மலருக்கு மோடி என்று பெயரிடப்பட்டுள்ளதாம். வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எடுத்த வேலைகளில் தடைதாமதம் ஏற்படும். வீண் அலைச்சல் உண்டாகும். எதிலும் கூடுதல் கவனம் தேவை. சொத்துக்களை அடைவதில் தடைகள் ஏற்படும்.

**இடபம்:** வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம். சுக்கிரன் சஞ்சாரத்தால் எதிர்பார்த்த பண வரவு இருக்கும். வீட்டிற்கு தேவையான வசதிகள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். பு உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது.

**கடகம்:** குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்கு வாதங்கள் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வது நல்லது.

**சிங்கம்:** திட்டமிட்டு செய்தாலும் காரியங்களில் தடை ஏற்படும். எதிர்பாராத செலவு உண்டாகும். உத்தியோகம் தொடர்பான விஷயங்கள் தாமதமாக நடக்கும். புதிய நட்புகள் கிடைக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை தள்ளி போடுவது நல்லது. காரிய தடை உண்டாகலாம். எதிலும் கவனம் தேவை. சூரியன் சஞ்சாரத்தால் உஷ்ணம் சம்பந்தமான நோய் ஏற்படுத்தும். வீண்பயம் ஏற்படும்.

**துலாம்:** சுக்கிரன் சஞ்சாரத்தால் வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். சிலர் வெளியூர் பயணம் செல்வார்கள். எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். கூட்டாகச் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலைதூக்கலாம். எச்ச ரிக்கையாக இருப்பது நல்லது.

**தனுசு:** குடும்பத்தில் அமைதி நிலவ குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனவருத்தம் உண்டாகலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவது நல்லது.

**மகரம்:** எதிலும் தேவையற்ற வீண் கவலை உண்டாகும். பயணங்கள் செல்ல நேரிடலாம். கடன் விஷயங்களில் கவனம் தேவை. வீண் அலைச்சல். காரிய தடை ஏற்படலாம். புதிய முயற்சிகளை தள்ளி போடுவது நல்லது.

**கும்பம்:** குறிக்கோளற்ற வீண் அலைச்சல் உண்டாகலாம். சூரியன் சஞ்சாரத்தால் ஜீரண கோளாறுகள் ஏற்படலாம். உடல்சோர்வு உண்டாகும். பணம் பலவழிகளிலும் செலவாகும். காரியதாமதம் ஏற்படும்.

**மீனம்:** வீண்கவலை ஏற்படும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும். தொழில் வியாபாரம் மந்தமாக இருக்கும்.

# கேத்ரினின் குத்தாட்டம் இனி இல்லை



தமிழ், தெலுங்கு, கன்னட படங்களில் நடித்து வருபவர் கேத்தரின் தெரசா. சமீபத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக 'கடம்பன்' படத்தில் நடித்தார். தெலுங்கில் பல படங்களில் நடித்து வருகிறார். என்றாலும் 2ஆவது நாயகியாக நடிக்கவே அதிக வாய்ப்பு வருகிறது. இது தவிர படங்களில் ஒரு பாடலுக்கு குத்தாட்டமும் ஆடி வருகிறார். அடுத்து பெல்லம் கொண்டா சிறினிவாஸ் நாயகனாக நடிக்கும் 'ஜெய ஜானகி நயகா' படத்தில் ஒரு பாட்டுக்கு ஆட சம்மதித்து இருக்கிறார். இதற்கு சம்பளம் இலங்கை மதிப்பில் சுமார் 1 கோடியே 20 லட்சம் என்று கூறப்படுகிறது. இது பற்றி கேத்தரின் தெரசா தெரிவிக்கையில்,

"இந்த படத்தை இயக்கும் போயப்பட்டி சீனு கேட்டுக்கொண்டதால் இதில் ஒரு பாட்டுக்கு நடனம் ஆடுகிறேன். அவருக்காகத்தான் இதற்கு ஒப்புக்கொண்டேன். இதுவே கடைசி. இனி குத்தாட்டம் போட மாட்டேன். அவர் 'சரைநோடு' என்ற தெலுங்கு படத்தில் நல்ல கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு அளித்தார். எனவே ஒரு பாட்டுக்கு ஆட ஒப்புக் கொண்டேன். இனி அழுத்தமான வேடங்களில் மட்டும் தான் நடிப்பேன்" என்றார்.



# பெண்கள் பற்றி...

ஒரு பெண்ணைப் பற்றி
அவதூறு சொல்வதை விட ஓர்
ஆலயத்தை எரிப்பது
குறைந்த பாவம்.

**சேர்பியா**

ஒரு நல்ல பெண்ணின் காலடியில்
போலி பழி சொற்கள் மடிகின்றன.
தனி மனிதனுடைய அதிர்ஷ்டமும்
துரதிர்ஷ்டமும் அவனுக்கு அமைந்த
மனைவியே.

**ஸ்பெய்ன்**

பணத்திற்காக திருமணம் செய்துகொள்ள
வேண்டாம்.பணம் குறைந்த வட்டியில்
வெளியில் கிடைக்கிறது.

**ஸ்கொட்லாந்து**

ஒரு நல்ல பெண்
ஏழு குழந்தைகளுக்கு மேல் .

**ஆர்மேனியா**

கோடரியின் ஒரே வெட்டு மரத்தைச்
சாய்க்க முடியாது ஆனால் காதலியின் ஒரே
பார்வையில் மனிதனை சாய்க்க முடியும்.

**மெக்ஸிக்கோ**

ஒரு பெண்ணுக்கு அவள் நடத்தையால்
கௌரவம், நாக்குதான் ஒரு பெண்ணின்
வாள் அது எப்போதும் துருப் பிடிப்பதே இல்லை

**ஜப்பான்**

ஆணை விட பெண்ணுக்கு பசி இரட்டிப்பு, புத்தி
நான்கு மடங்கு.ஆசைகளோ எட்டு மடங்கு.

**பிரிட்டன்**

நல்லவளாக இருப்பதை விட அழகியாக இருப்பதையே ஒவ்வொரு பெண்ணும் விரும்புவாள்.

**ஜேர்மனி**

மனைவியை தேர்ந்தெடுக்கும் போது கிழவனின்
அனுபவமும் பார்வையும் வேண்டும் .

**ஆர்மேனியா**


உங்களது அன்பை மனைவியிடம்
காட்டுங்கள்.உங்களுடைய ரகசியங்களை
தாயிடம் மட்டுமே சொல்லுங்கள் .

**அயர்லாந்து**

அழகிற்காக மட்டும் ஒரு பெண்ணை
மணப்பவன் அடித்திற்கும் பூச்சுக்காக மட்டும் ஒரு
வீட்டை வாங்குபவன் ஆவான்.

**ஆபிரிக்கா**

## திருமண விருந்தில் பெண்கள்



ஒளிப்படம் எடுக்கும்போது | ஒளிப்படம் எடுத்தபின்பு

## தேசியப் பறவையாக கொசுவைத்தான் அறிவிக்க வேண்டும்.



எங்க பார்த்தாலும் அதான் இருக்கு...
அதுக்குத்தான் கைதட்டலும் கூட....

## twitter

நிதரா

ஏரிகளின் மேல் கட்டிய அடுக்குமாடிக்
கட்டடங்களில் ஏறி தண்ணீர்ப் போத்தல்
களைப் போடுகிறான் இளைஞன்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 9 | | | 7 | | 2 | |
| | | | | | | | | 4 |
| 6 | | 2 | 1 | | | 9 | | |
| | | | 7 | | | | 1 | |
| | | | 3 | 5 | 2 | | | |
| | 2 | | | | 8 | | | |
| | | 1 | | | 9 | 6 | | 7 |
| 5 | | | | | | | | |
| | 7 | | 6 | | | 5 | 8 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 3 | 1 |
| 6 | 7 | 1 | 9 | 3 | 8 | 4 | 5 | 2 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 6 | 8 | 7 |
| 2 | 6 | 9 | 7 | 8 | 5 | 3 | 1 | 4 |
| 4 | 1 | 8 | 2 | 9 | 3 | 7 | 6 | 5 |
| 7 | 3 | 5 | 1 | 4 | 6 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 6 | 3 | 2 | 4 | 1 | 7 | 8 |
| 1 | 8 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 3 |
| 3 | 4 | 2 | 8 | 7 | 1 | 5 | 9 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள்; இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் வினாக்களில் ஒவ்வொரு நிரையிலும் உள்ள சொற்களுள் ஒன்று ஏனையவற்றிலும் ஏதோ ஒரு வகையில் வித்தியாசமானது. அந்தச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக**

உதாரணம் :

அவா, நட்பு, தயை, கருணை, அன்பு.

இங்கே நட்பு, தயை, கருணை, அன்பு என்ற நான்கும் நல்ல இயல்புகளைக் குறிக்கின்றன. அவா வேறுபட்டது. எனவே அவாவின் கீழ்க் கோடிடப்பட்டுள்ளது.

1. பூனை, கரடி, மாடு, ஆடு, நாய்
2. பேனை, காகிதம், பென்சில் மேசை, மை
3. சத்தியம், மெய், பொய், வாய்மை, உண்மை
4. சிங்கம், புலி, செம்மறி, யானை, காண்டாமிருகம்
5. குற்றம், மாசு, களங்கம், மறு, உடல்
6. வெள்ளை, கறுப்பு, கருமை, நீலம், சிவப்பு
7. காகம், கிளி, மைனா, குதிரை, புறா
8. கத்தரி, வெண்டி, மாம்பழம், பூசணி, மிளகாய்
9. இல்லம், மனை, அகம், வீடு, அரண்மனை
10. தளத, கபக, ககன, சவச, பலப

**கீழே தரப்பட்டுள்ள சொற்களுள் ஒன்று ஏதோவொரு விதத்தில் மற்றைய சொற்களிலிருந்து பெரிதும் வித்தியாசமானது. வித்தியாசமான சொல்லின் கீழ்க் கோடிடுக**

1. தம்பி, மாமா, மாமி, தங்கை,வேலையாள்
2. குமார், சிறுமி, மாலினி, தேவி, கந்தையா
3. மா, பலா, வேம்பு, தோடை, கத்தரி
4. கடல், குளம், ஆறு, நதி, அணை
5. கலன், கிலோமீற்றர், நிறை, அடி, இறாத்தல்
6. எலி, பூனை, குரங்கு, கழுகு, மாடு
7. நடனம், வித்தை, சங்கீதம், நாடகம், கலை
8. ஆசியா, பசுபிக், ஆபிரிக்கா ஐரோப்பா, ஆஸ்திரேலியா

## வர்ணம் தீட்டுவோம்



# மின்மினியும் நெருப்பும்

ஒரு வனத்தில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன. அது ஒரு குளிர்காலம். குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை.

கொஞ்சம் நெருப்புக் கிடைத்தால் சருகுகளைப் போட்டு தீ மூட்டி குளிர் காயலாம் என்று ஒரு குரங்கு கூறிற்று. "நெருப்புக்கு எங்கே போவது? என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு மின் மினிப் பூச்சி 'பளிச்' 'பளிச்' சென்று மின்னியவாறு பறந்து சென்றது. அதனைக் கண்ட ஒரு குரங்கு அந்த மின் மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது. மற்றக் குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூளங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சி மீது போட்டன. பின்னர் நெருப்பு கொழுந்து விட்டு எரியுமென எதிர்பார்த்து எல்லாக் குரங்குகளும் குப்பையைச் சூழ அமர்ந்து கொண்டன. ஆனால் குப்பையோ எரிவதாக இல்லை. இப் போது குரங்குகள் வாயினால் குப் பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன. இந்த குரங்குகளின் கோமாளித்த னத்தை கவனித்துக் கொண்டி ருந்த புறா ஒன்று 'கல' 'கல' வென சிரித்தபடி மரத்திலிருந்து இறங்கி வந்து கீழே அமர்ந்தது.



பின்னர் குரங்குகளை நோக்கி "நண்பர்களே! மின்மினிப் பூச் சியை நெருப்பு என்று எண் ணிக் கொண்டு தீ மூட்ட வீண் முயற்சி எடுக்கிறீர்கள். நீங்கள் எப்படி வாயினால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிலிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டு விடுங்கள்" என்று அறிவுரை கூறிற்று. "உனக்கு ஒன்றும் தெரியாது வாயை மூடிக் கொண்டு உன் வேலையைப் பார்" என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால் ஊதி தீ உண்டாக்க முயற்சி செய்தன.

புறா குரங்குகளின் அறியாமையை எண்ணி மேலும் அவற்றின் மேல் இரக்கப்பட்டு திருப்பத் திரும்ப அவைகளுக்கு அறிவுரை கூறிக் கொண்டிருந்தது. புறாவின் அறிவுரையைத் தமக்குப் பெருந் தொல்லை எனக் கருதிய குரங்குகள் கோபமுற்று புறா மீது பாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக் கொன்று போட்டன.

**முட்டாள்களுக்கு புத்தி கூறுவதிலும் பார்க்க மௌனமாக இருப்பதே மேலானது.**



# தாயுமான தந்தை

பிரிட்டனில் உள்ள பிளாக் பூல் உயிரினப் பூங்காவில் வாழ்ந்து வரும் ஆண் சிங்கம் ஒன்று இதுவரை ஆண் சிங்கங்கள் பற்றி ஆய்வாளர்கள் கருதி வந்த எண்ணங்களை மாற்றியமைத்துள்ளது. இந்தப் பூங்காவில் வாழ்ந்த ஆணும் பெண்ணுமான இரு சிங்கங்களுக்கு 2015 இல் ஹரி என்ற ஆண் குட்டி ஒன்று பிறந்தது. குட்டி பிறந்த 9 மாதங்களில் தாய்ச் சிங்கம் நோய் வாய்ப்பட்டு இறந்து போனது. பெண் சிங்கங்களே குட்டிகளை வளர்ப்பது இயல்பு. குட்டிகளுக்கு வேட்டையாடக் கற்றுக் கொடுத்து பராமரிப்பதும் அவைகளே. ஆண் சிங்கங்கள் இனப் பெருக்கம் செய்வதோடு கடமையை முடித்து விடுகின்றன. தமக்குப் பசி எடுக்கும் போது மட்டும் ஆண்கள் வேட்டையாடும். அதுவும் பெண் சிங்கங்கள் தான் வேட்டையாடுவதில் அதிக அக்கறை காட்டும். பெண் வேட்டையாடுவதிலே ஆண் சிங்கம் பங்கு போட்டு உண்ணும். அவ்வளவு தான். ஆனால் கண் முன்னே தன் துணை இறந்த சோகத்தில் இருந்த இந்த ஆண் சிங்கம் அது இறந்த சில நாள்களில் குட்டியை அன்புடன் கவனிக்க ஆரம்பித்தது. தனக்கு அளிக்கப்படும் உணவைக் கொடுத்து குட்டியைச் சாப்பிட வைத்தது. குட்டியு டன் சேர்ந்து விளையாடவும் செய்தது. குட்டியும் தாயை மறந்து தகப்பனுடன் நெருக்கமானது. தகப்பன் செல்லும் இடமெல்லாம் குட்டியும் தொடர்ந்து சென்றது. தகப்பன் கர்ஜிப்பதைப் பார்த்து வெகு விரைவிலேயே குட்டியும் கர்ஜிக்கத் தொடங்கியது. வேட்டையாடும் வித்தையையும் கற்றுக் கொண்டது. "ஆண் சிங்கம் பற்றிய எண்ணத்தையும் அது தொடர்பான பல்வேறு பட்ட ஆய்வு முடிவுகளையும் மாற்றியுள்ளது வாலஸ் என்ற இந்தச் சிங்கம்" என்கிறார் உயிரினப் பூங்காவின் அதிகாரியான அடம்.

# சுவர் பத்திரிகை

## பூனையின் சாமர்த்தியம்

ஆஸ்திரேலியா நாட்டில் வடக்கு குயின்ஸ் லான்ட் நகரில் ஒரு வீட்டில் தீ விபத்து ஏற்பட்டது. முதலில் அந்த வீட்டுக் வேலைக்காரப் பெண் மீது தான் தீ பற்றியது. அதையறியாமல் குடும்பத்தினர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். உடனே அந்த வீட்டில் வளர்க்கப்படும் செல்லப் பூனை சமயோசிதமாகச் செயற்பட்டது. உறங்கிக் கொண்டிருந்த குடும்பத் தலைவர் மீது பாய்ந்து அவரது முகத்தில் தனது கால் விரல் நகங்களால் விறாண்டியது. இதனால் அவர் தூக்கம் கலைந்து விழித்தார். விபரீதத்தை உணர்ந்து தனது மனைவி மற்றும் குழந்தைகளையும் எழுப்பி வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றார். பூனையின் புத்திசாலித் தனத்தால் குடும்பத்தின் நான்கு பேரும் காப்பாற்றப்பட்டனர்.



-ம.சியாமளன்

## தவளை சூப்

தவளை சூப் எலும்புகளுக்கு நல்லதாம். ஐரோப்பியத் தவளை என்றழைக்கப்படும் பச்சைக்கால்தவளை இனம் ஆசிய ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் காணப்படுகிறது. இந்தத் தவளையை சீனா, இந்தோனேசியா, ஜப்பான் போன்ற நாடுகளில் சூப் செய்து குடிப்பதற்குப் பயன்படுத்துகிறார்கள். இந்த பச்சைக்கால் தவளை சூப்பைத் தொடர்ந்து அருந்தி வந்தால் உடல் தசைகளில் நெகிழ்வுத் திறனும் எலும்புகளுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையும் அதிகமாகும் என்னும் நம்பிக்கை தென் கிழக்காசிய நாட்டு மக்களிடையே பரவலாக இருப்பதால் அமோக சூப் விற்பனை நடைபெறுகிறதாம்.



- வி.பாலா

## நாய்க்கும் ஓய்வூதியம்

காவல் துறையில் ஒரு மோப்ப நாய்அதிக பட்சம் 7 ஆண்டுகள் மட்டுமே பணியாற்றும். அதன் பின் கட்டாய ஓய்வு கொடுக்கப்படும். 7ஆண்டுகளுக்குப் பிறகும் உடல் பாதிப்பின்றி திடகாத்திரமாக இருந்தால் மட்டுமே தொடர்ந்து அந்த நாய் பயன்படுத்தப்படும். அதிக பட்சம் 12 ஆண்டுகள் மோப்ப நாய்களைப் பயன்படுத்தலாம். அதன் பின் கட்டாய ஓய்வு கொடுக்க வேண்டும். ஷான் என்ற நாய் திடகாத்திரமாக இருந்ததால் 12 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு இப்போது காவல்துறை ஓய்வளித்துள்ளது. இந்த நாய் சென்னை காவல் துறையின் கென்னல் கிளப்பில் சேர்த்து பராமரிக்கப்படுகிறது. ஓய்வு காலத்தில் ஷானுக்கு தினமும் சாப்பாட்டுக்காக ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.



-சி. தற்பரன்

## நாய் வண்டி

குதிரை வண்டி, மாட்டு வண்டி இவற்றை எமக்குத் தெரியும். நாய் வண்டியை யாருக்குத் தெரியும். தெற்கு சீனாவின் புஜிலான் மாநிலத்தில் உள்ள புசல் என்னும் இடத்தில் வாழும் மக்கள் கடைகளுக்குச் செல்லும் போது கூடவே தங்கள் வளர்ப்புச் செல்லமான நாயையும் அழைத்துச் செல்கிறார்கள்.

காய்கறிகள் பழங்கள் சமையலுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் நாய்களுக்குப் பிடித்த பிஸ்கட், எலும்பு என அனைத்தையும் வாங்கி நாயில் பிணைத்தி ருக்கும் சிறிய வண்டியில் போட்டு விடுகிறார்கள். பாரம் ஏற்றியவுடன் அங்கும் இங்கும் பாராமல் நல்ல பிள்ளையைப் போல பொருள்களைப் பாதுகாப்போடு தன் எஜமானரின் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறது நாய்.



-ச.மாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி நடத்தல்...
கப் போவதாக, மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையில், வழிநடத்தல் குழுவின் நேற்றைய கூட்டத்தில் அந்த அணி சார்பு உறுப்பினர்கள் எவரும் பங்கேற்கவில்லை.
வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் கூடியபோது, மகிந்த அணி சார்பு உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். இடைக்காலஅறிக்கை தொடர்பான தமது கருத்துக்களை நேற்றுமுன்தினம் இரவு கூடி ஆராய்ந்த பின்னர் நேற்றைய அமர்வில் சமர்பிப்போம் என்றும், நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் தெரிவித்திருந்தனர்.
ஆனால் நேற்றைய அமர்வில் அவர்கள் பங்கேற்கவில்லை. இதற்கான காரணத்தையும் அவர்கள் வழிநடத்தல் குழுவிற்குத் தெரிவிக்கவில்லை.

(5)

## மரண அறிவித்தல்



## அருணாசலம் தவரத்தினம்

ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் தவரத்தினம் நேற்று மாலை (05.07.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரி தேவியின் (ஆயத்தடி மட்டுவில்) அன்புக் கணவரும் சுகிதா (சுவிஸ்), சுதன் (சுவிஸ்), சுரேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வநாதன் (சுவிஸ்), திலீபன் (முகாமையாளர், கொழும்பு பங்குப் பரிவத்தனை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தானுகா, தானிகா, தஜிக்கா, சபினயா, யதுஸ்திகா ஆகியோரின் அன்புபேரனும் சரஸ்வதி காலஞ்சென்ற டாக்டர் கணேசமூர்த்தி, கமலாம்பிகை காலஞ்சென்ற ஞானாம்பிகை, வேதமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (06.07.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 205 8014**

## Vacancy

**மேற்படி எமது ஸ்தாபனத்திற்கு 40 வயதுக்கு மேற்பட்ட ஆங்கில அறிவும், வாசித்து அறிந்து கொள்ளும் திறமை உள்ளவரும் பொருள்களை ஏற்றி இறக்குவதிலும் Delivery செய்வதிலும் அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகின்றார்கள். விருப்பமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையை 10.07.2017 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.**

(பின்பு ஊழியர் சேமலாப நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்)

**09, Stanley Road, Jaffna**

## வேலை வாய்ப்புக்கள்

**நாடளாவியரீதியில் இயங்கிவரும் எமது Everest நிறுவனத்தின் புதிய கிளைகள் கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, மாங்குளம், மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் நிறுவப்படவுள்ளது. அதற்கான பணியாளர்கள், கணக்காளர்கள், உதவி முகாமையாளர்கள், முகாமையாளர்கள் போன்ற பதவிகளுக்கான நேர்முகத் தேர்வு Everest நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தில் இடம்பெறும்.**

**காலம் 07.07.2017 - 15.07.2017**

தொடர்புகளுக்கு :- **077 171 7278, 077 174 3524**

## மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா சபாரத்தினம்



**பிறப்பு.12.03.1932**
**இறப்பு.05.07.2017**

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சாபரத்தினம் நேற்று (05.07.2017) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் கண்மணியின் அன்புச் சகோதரியும் இரத்தினகுமார், தேம்பாமலர், சோதிமலர், மகிழ்மலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலராணி, நடராஜா, வைத்திலிங்கம், நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிநல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று(06.07.2017) வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொ.பே. 021 222 9152**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 . 09 . 1935 | 06 . 06 . 2017 |



## அமரர் கந்தையா அன்னலிங்கம்

கடந்த 06.06.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்திகேட்டு உடன்வந்து ஆறுதல்கூறி உதவிபுரிந்தவர்கள் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள் மலர்வளையம் சாத்தியவர்கள் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோர் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் வெளிநாட்டிலிருந்து துயர்பகிர்தவர்களுக்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் 7ஆம், 9ஆம் விடுதிகளில் பணிபுரிந்த மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (06.07.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் ககலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நந்தாவில் [illegible]**
**தாவடி கிழக்கு, கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2017**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

| | |
|---|---|
| கேள்விப் படிவக்கட்டணம் | : ரூபா. 500.00 + VAT + NBT |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | : 07.07.2017 தொடக்கம் 19.07.2017 பிற்பகல் 2.30 மணி வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளல் | : 20.07.2017 முற்பகல் 9.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் | : 20.07.2017 முற்பகல் 10.00 மணிக்கு |

**தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் ரூபா – 2,340.00**

விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஆணையாளர். மாநகரசபை. யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு நானாவித இறைவரிப்பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 20.07.2017 முற்பகல் 9.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையினை 21.07.2017 பிற்பகல் 02.30 மணிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை. நானா வித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரை படத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**குறிப்பு:**

- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகளும். உற்சவ காலத்திற்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி திறந்து வியாபாரம் நடத்தவும். விளம்பரங்கள். விளம்பர பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு அனுமதியின்றி நடத்தப்படும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.
- கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகரசபையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.
- குத்தகைக்கான விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் ஆவணத்தில் அடங்கிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டே விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டும்.

**திரு.பொ.வாகீசன்.**
**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 . 03 . 1938 | 05 . 07 . 2017 |



## திருமதி கமலாவதி இராஜகுலசூரியர்

திருமதி கமலாவதி இராஜகுலசூரியர் நேற்று (05.07.2017) புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதியரின் செல்வப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராஜகுலசேகரம் - கௌரியம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் இராஜகுலசூரியர் (இளைப்பாறிய ஆசிரியர் மெமோறியல் ஆங்கில பாடசாலை) இன் அன்பு மனைவியும் கஜரூபன் (முகாமையாளர் -கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதிக்கிளை) இன் அன்புத் தாயாரும் திருமதி தபோதினி கஜரூபன் (முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி, சுன்னாகம் கிளை) இன் அன்பு மாமியும் செல்வன் தனஞ்செயன் (மாணவன், யா/பரியோவான் கல்லூரி) இன் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (முன்னாள் அரச அதிபர் - யாழ்ப்பாணம்), பத்மாவதி, மகாதேவா, திருக்கேஷன், ஜெகதீசன், சோமசுந்தரம், திலகவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி, காலஞ்சென்ற கோபால பிள்ளை, செல்வராணி, ஞானேஸ்வரி, வீரவனிதா, ரட்ணலக்ஷ்மி, செல்லையா, காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் விஜயகுல சிங்கம் மற்றும் கௌரிமனோகரி, அமரகுலசிங்கம், குமாரகுலசிங்கம், ஜெயகுலசிங்கம், காலஞ்சென்ற தேவமனோகரி காலஞ்சென்ற இராஜேஸ்வரி, யோகாம்பிகை, மகாதேவன், விமலாதேவி, பவானி, காலஞ்சென்ற நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2017) வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மடத்தடி ஒழுங்கை,**
**மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.**

தகவல்:
**இராஜகுலசூரியர் (கணவர்),**
**கஜரூபன் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 01 . 1944



மறைவு
05 . 07 . 2017

# இராசையா ஸ்ரீரங்கநாதன்

**(முன்னாள் முகாமையாளர், சிற்றம்ஸ்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்டவருமான இராசையா ஸ்ரீரங்கநாதன் நேற்று (05.07.2017) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சுந்தரம் தம்பதியரின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்ற தங்கராணி, சரோஜனாதேவி ஆகியோரின் அன்புக் கணவரும் சாய்ஜெயராம், சாய்சுதன், காயத்ரி ஆகியோரின் அருமைத் தந்தையும் நாகநந்தினி, கார்த்திகா ஆகியோரின் அருமை மாமனும் அபிநயா, சாயிஷா, சரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சட்டத்தரணி ஆஸ்திரேலியா) அவர்களின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இல.23, பிளச்சஸ் லேன் (Flechers Lane), சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.ஒரு மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்,**
**மகன் (076 699 1955)**

*மயிலிட்டி...*

விக்கு மாறுகோரி முதியவர் நேற்றுத் தொடக்கம் துறைமுகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த பகுதி சில நாள்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டபோதும் ஒரு பகுதியை இராணுவத்தினர் விடுவிக்க வில்லை. அந்த இடத்தை இராணுவதினர் முட்கம்பிகள் கொண்டு சுற்றுக் காவல் அமைத்துள்ளனர். அந்த இடம் தனது வீடு என்று கூறும் குறித்த முதியவர் அதனை விடுவிக்கும்வரை போராட்டத்தை நிறுத்தப்போ வதில்லை என்றுகூறி போராட்டத்தைத் தொடர்கிறார்.

போர்க் காலத்தில் இடம்பெயர்ந்த அவர் தற்போது முல்லைத்தீவில் வசித்து வருகிறார். நேற்றுத் துறைமுகத்துக்குச் சென்ற பொலிஸார் போராட்டத்தை விடுத்து வீடு செல்லுமாறு முதியவரைக் கோரியபோதும் முதியவர் கோரிக்கையை மறுத்து போராட்டத்தை தொடர்கிறார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-26)

## மரண அறிவித்தல்

# பொன்னையா காசிநாதன்

**(வடமாகாண ஓய்வுநிலை பொதுச் சுகாதார பரிசோதகர் P.P.H.I)**



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா காசிநாதன் (வடமாகாண ஓய்வுநிலை பொதுச் சுகாதார பரிசோதகர் ) நேற்று (05.07.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் அனித்தா (ஜேர்மனி) காலஞ்சென்ற சயந்தன் (ஆசிரியர் இரத்தினேஸ்வரி வித்தியாலயம் பத்தமேனி), சிந்துஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வல்லிபுரநாதன், சிவலோகநாதன் காலஞ்சென்ற கதிர்காமநாதன், அருணாகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமால், சுதாகர் ஆகியோரின் அன்பு மாமனாரும் கனிஸ்ரிகன், கஜானன், ஐஸ்மிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2017) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.06**
**டிஸ்ப்பென்சரி வீதி,**
**உரும்பிராய்.**

**021 205 4516**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



**பிறப்பு.03.11.1941**
**இறப்பு.05.07.2017**

# ஜோசப் அகஸ்ரின் (பொன்னுத்துரை)

இளவாலை, நல்லாயன் வீதியை பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அகஸ்ரின் (பொன்னுத்துரை) நேற்று (05.07.2017) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் றோசலின் தம்பதியரின் அன்பு மகனும் மேரி திரேசாவின் அன்புக் கணவரும் மரிஸ்ரெலா (லண்டன்) றெறன்ஸ்(இத்தாலி), யூலியற் (இத்தாலி), ஜெனிற்றா (சுவிஸ்), சுகித்திரா (இலங்கை), சுரேஸ் (லண்டன்), ரின்சா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை, சின்னத்துரை, அருமைத்துரை, வேவி, ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் றொஜானி, றொணி, ஜெனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் மெல்றோஸ் (சுவிஸ்), லங்கராஜா , சோபிகா, லோகேஸ்வரன், செல்வக்குமார், சுவற்மன் (பொறியியல் உதவியாளர், முல்லைத்தீவு), அஸ்வினி, வாமதாஸ், நிக்சன் ஆகியோரின் அன்பு மாமனும் அபிநயா, சானுஷா, சானுகா, சோனியா, செரேனா, துஷாந், சேனுஜன், சுபித்தா, திஷான், டில்சான், சஜித், ஆருஸ், றோய், சுஜானி, டெனிஸ், ஜெரிக், சியாறா, கடின் ஹர்ஷன் ஆகியோரின் அன்பு பேரனும் றோஸ்மலர், திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (07.07.2017) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் புனித கதிரைமாதா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அம்மன் வீதி,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**[illegible]மன் (மருமகன்)-077 755 9769**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடலம்...

தரை போன்ற) வைத்தே கூட்டு வன்புணர்வுக் குட்படுத்தியுள்ளமை அவரின் உடலில் காணப்பட்ட அடையாளங்களை வைத்து உறுதியாகக் கூற முடியும்"

இவ்வாறு சட்ட மருத்துவ அதிகாரி உருத்திர பசுபதி மயூரதன் தீர்ப்பாயத்திடம் நேற்றுச் சாட்சியமளித்தார்.

வழக்குத் தொடுனர் தரப்பால் இந்த வழக்கில் முன்வைக்கப்பட்ட முக்கிய 2 சாட்சிகளால் கூறப்பட்ட பாழடைந்த வீட்டில் வைத்தே மாணவி வன்புணரப்பட்டார் என்பதை உறுதி செய்யும் வகையில் சட்ட மருத்துவ அதிகாரியின் நிபுணத்துவ சாட்சியம் அமைந்தது.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்று வருகிறது. மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தின் 6ஆம் நாள் அமர்வு நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுனர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், லக்சி டீ சில்வா மற்றும் மாலினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய 9 எதிரிகளும் தீர்ப்பாயத்திடம் முற்படுத்தப்பட்டனர்.

1ம் ,2ம் , 3ம் , 5ம் மற்றும் 6ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் மகிந்த ஜெயவர்த்தன , எம். என். நிஷாந்த, சரங்க பாலசிங்க ஆகியோரும் 5ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ஆம், 7ஆம் மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். அத்துடன் 8ஆம் எதிரி சார்பிலும் தீர்ப்பாயத்தால் 1 தொடக்கம் 9 எதிரிகள் சார்பில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலையாகியிருந்தார்.

### தடயவியல் பொலிஸ் அலுவலகர் சாட்சியம்

இந்த வழக்கின் 22ஆவது சாட்சியமான யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் தடயவியல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் ரொஷான் சந்தனகுமார சாட்சியமளித்தார்,

2015. 05.14 ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. புங்குடுதீவு ஆலடி சந்திக்கு அருகில் பாடசாலை மாணவி ஒருவரின் சடலம் கிடப்பதாகவும், அது தொடர்பில் தடயவியல் பரிசோதனைகளை மேற்கொள்ள வருமாறு எமது பிரிவுக்கு அந்த தொலைபேசி அழைப்பின் மூலம் தெரியப்படுத்தப்பட்டு நாம் அந்த இடத்துக்குச் சென்றிருந்தோம்.

### இரு முடிகளை மீட்டேன்.

சடலத்தில் அவதானித்த போது அதன் மேல் பகுதியில் முடி இரண்டு இருந்தன. அவற்றைச் சேகரித்துக் கொண்டேன். பின்னர் சடலம் கட்டப்பட்டு இருந்த கட்டுக்களை அவிழ்க்க முடியாது இருந்தமையால், அவற்றை பிளேட்டினால் வெட்டி அகற்றினேன். பின்னர் சடலத்தைத் திருப்பி பார்த்த போது உடலின் பின் பகுதியில் இடுப்பு பக்கத்தில் உராய்வுக் காயங்கள் இருந்தன.

அதன் பின்னர் சடலம் மீட்கப்பட்ட இடத்தில் நிலத்தைப் பரிசோதித்தோம். சந்தேகத்துக்கிடமான எந்தத் தடயப் பொருள்களையும் மீட்கவில்லை.

பின்னர் சட்ட மருத்துவ அதிகாரி கொண்டு வந்த வெள்ளை நிற பையில் சடலத்தை பொதி செய்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம்" என்று தடயவியல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் சாட்சியமளித்தார்.

சடலத்தில் இருந்து மீட்கப்பட்ட இரண்டு முடிகளையும் என்ன செய்தீர்கள்? என பிரதி மன்றாடியார் அதிபதி கேட்ட போது, அதனை ஊர்காவற்றுறை நீதிவானின் உத்தரவின் பேரில் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தேன் என சாட்சி பதிலளித்தார்.

### ஆய்வு அறிக்கைகள் திறக்கப்பட்டன

அதனை அடுத்து பிரதி மன்றாடியார் அதிபதி ஜின்டேக் நிறுவனத்தால் மன்றுக்கு பாரப்படுத்தப்பட்ட மரபணுப் பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட ஆய்வு அறிக்கைகள் உள்ளடங்கிய பொதியை திறந்த மன்றில் பார்க்க அனுமதி கோரினார். அதற்கு தீர்ப்பாயம் அனுமதித்ததையடுத்து பொதி திறக்கப்பட்டது.

அந்தப் பொதியில் இருந்து மாணவியின் சடலத்தில் இருந்து மீட்கப்பட்ட முடி அனுப்பட்ட உறையை சாட்சியத்திடம் காண்பித்த போது, அதில் தான் எழுதிய தகவல்கள் உள்ளன என சாட்சி அந்த உறையை அடையாளம் காட்டினார்.

### எதிரி தரப்பு சட்டத்தரணிகளுக்கு அறிக்கைகளின் பிரதி கையளிப்பு

அதனையடுத்து எதிரி தரப்புச் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன, ஜின் டேக் நிறுவன அறிக்கையின் பிரதிகள் தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. அதனை வழங்க வேண்டும் என மன்றில் கோரினார். அந்த அறிக்கைகள் வழக்கின் மூல கோவையில் இணைக்கப்பட்டுள்ளதால் அதனை எதிர் தரப்பு சட்டத்தரணிகளுக்கு வழங்க முடியவில்லை. இன்றைய தினம் அந்த அறிக்கைகளின் பிரதிகளை எதிரி தரப்பு சட்டத்தரணிகளுக்கு வழங்கப்படும் என தீர்ப்பாயம் தெரிவித்தது.

அதனை அடுத்து சாட்சியத்திடம் எதிரி தரப்பு சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி குறுக்கு விசாரணை செய்தார்.

எத்தனை தடவைகள் இந்த வழக்கு தொடர்பில் களப் பரிசோதனை செய்ய குற்றச்செயல் இடம்பெற்ற பகுதிக்குச் சென்றீர்? என கேட்டார். இரண்டு தடவைகள் என சாட்சி பதிலளித்தார். அங்கு சென்ற திகதிகளைக் குறிப்பட முடியுமா ? என சட்டத்தரணி கேட்டார். சடலம் கண்டெடுக்கப்பட்ட தினமான 14ஆம் திகதியும் பின்னர் 19ஆம் திகதியும் சென்றேன் என சாட்சி பதிலளித்தார்.

19ஆம் திகதி மீண்டும் ஏன் அங்கு சென்றீர்? என சட்டத்தரணி கேட்டார். "கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், மாணவியை பிறிதொரு இடத்தில் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தி உள்ளார்கள் என ஊர்காவற்றுறை பொலிஸார் எமது பிரிவுக்கு அறிவித்தனர். அதனால் நாம் 19ஆம் திகதி சந்தேகநபர்கள் கூறிய இடம் என ஊர்காவற்றுறை பொலிஸாரால் காண்பிக்கப்பட்ட இடத்தை பரிசோதனை செய்தோம்.

அங்கு ஏதேனும் தடயப் பொருள்களை சேகரித்தீர்களா ? என சட்டத்தரணி கேட்டதற்கு, அன்றைய தினம் 19ஆம் திகதி நான் உதவிக்கு சென்று இருந்தேன். "அன்றைய தினம் தடயப் பொருள்களை சேகரித்தது என்னுடன் வந்த பிறிதொரு உத்தியோகத்தர் ஆவார்" என சாட்சி பதிலளித்தார்.

அத்துடன் தடயவியல் பொலிஸ் உத்தியோகத்தரின் சாட்சியம் முடிவுறுத்தப்பட்டது.

### காலை களத்தில் பரிசோதனை மாலை உடற்கூற்றுச் சோதனை

வழக்கின் 23ஆவது சாட்சியமான சட்ட மருத்துவ அதிகாரி உருத்திர பசுபதி மயூரதன் நிபுணத்துவ சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை நீதிவானின் அழைப்பின் பேரில் களப் பரிசோதனைக்காக சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு 2015ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி காலை 10 .30 மணியளவில் சென்றேன்.

சடலத்தை அவதானித்த போது. இரண்டு கைகளின் பெருவிரல்களும் ஒன்றாக சேர்த்துக் தலையில் பின் பகுதியில் கட்டப்பட்டிருந்தது. கால்கள் இரண்டும் 180 பாகைக்கும் அதிகமாக விரித்து கட்டப்பட்டு இருந்தது. கண்கள் வீங்கி இருந்தன. காதின் ஒரு பகுதி மூக்கு போன்ற இடத்தில் இருந்து குருதிக் கசிவுகள் காணப்பட்டன. வாய்க்குள் உள்ளாடை திணிக்கப்பட்டு இருந்தது.

பின்னர் சடலத்தின் கட்டுக்களை தடயவியல் பிரிவினரின் உதவியுடன் அவிழ்த்தேன். அப்போது சடலத்தின் கழுத்து பகுதியில் பாடசாலை கழுத்துப்பட்டியால் கழுத்து இறுக்கி கட்டப்பட்டு நிலத்தில் இருந்து சுமார் இரண்டு அடி உயரத்தில் உள்ள மரத்தில் கட்டப்பட்டு இருந்தது. அந்தக் கட்டுகளிலிருந்து விடுவித்து சடலத்தைத் திருப்பி பார்த்த போது பிட்ட பகுதியில் காயங்கள் இருந்தமையை அவதானித்தேன்.

அதன் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை எடுத்து வந்தோம். அன்றைய தினம் (14 ஆம் திகதி ) மாலை 5 மணியளவில் உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்டேன்.

### சடலத்தில் 8 காயங்கள்

சடலத்தில் 8 காயங்களை அவதானித்தேன். தலையின் வலது பகுதியில் தோள் பக்கத்துக்கு மேல் பகுதியில் ஒரு காயம் காணப்பட்டது. மண்டையோட்டில் உள்ள எழும்புகள் முறியவில்லை. குருதிக் கசிவுகள் ஏற்பட்டு இருந்தன. மொட்டையான விசை பாவிக்கப்படும் போதோ அல்லது தட்டையான கடினமான (தார் வீதிகள் அல்லது சிமெந்து பூசப்பட்ட சமாந்தரமான நிலம் போன்ற) இடத்தில் தலை தாக்கப்படும் போதோ அவ்வாறான காயம் ஏற்படலாம். விழுந்து இருந்தால் மண்டையோடு உடைந்து இருக்கும். இது தாக்கப்பட்ட காயமாகவே இருக்கும்" என்று சாட்சியமளித்தார்.

இரண்டாவது காயம் தலையின் உச்சி பகுதியில் 7 இடங்களில் காணப்பட்டன. இவை பெரும்பாலும் தலைமுடியை அதிக விசையைக் கொண்டு இழுக்கும் போது ஏற்பட்டு இருக்க கூடிய காயங்களாகும். மூன்றாவது காயம் வலது பக்க கன்னத்தில் ஏற்பட்ட கண்டல் காயம். இது தாக்கப்பட்டதாலோ அல்லது அதிக விசை கொண்டு அழுத்தியதாலோ ஏற்பட்டு இருக்கலாம்.

நான்காவது மேல் உதட்டின் உட்புறம் ஏற்பட்ட கண்டல் காயம். இது தாக்கப்பட்டதாலோ அல்லது அதிக அழுத்தம் கொடுத்தமையாலோ ஏற்பட்ட காயமாக இருக்கலாம். ஐந்தாவது காயம் கழுத்துப் பட்டியால் கழுத்தை இறுக்கியமையால் கழுத்தைச் சுற்றி கண்டல் காயம் ஏற்பட்டுள்ளது.

ஆறாவது காயம் கண்டல் காயம். இது இடுப்பு பகுதியின் பின்புறமாக வலது பக்க இடுப்பு பகுதியில் காணப்படுகின்றது. இது மென்மையாகத் தாக்கும் போது ஏற்படும் காயமாகும். ஏழாவது உராய்வுக் காயம் வலது பிட்டத்தில் காணப்பட்டது.

எட்டாவது காயம் வலது காலில் கணுக்காலுக்குச் சற்று மேல் முள் குத்திய காயம். அந்த காயத்தினுள் முள் ஒன்று முறிந்த நிலையில் கிடந்தது. கண் மூடி இருந்தது. மூடிய கண்ணைத் திறந்து பார்த்த வேளை, கண்ணுக்குள் குருதிக் கசிவு காணப்பட்டது. பெரும்பாலும் மூச்சு திணறலால் ஏற்பட்ட உயிரிழப்பின் போது அவ்வாறு கண்ணில் குருதிக் கசிவு ஏற்படச் சந்தர்ப்பமுண்டு.

### கூட்டு வன்புணர்வு

சடலத்தைச் சோதனையிட்ட போது பலர் சேர்ந்து வன்புணர்வுக்குட்படுத்தி உள்ளார்கள் என்பது தெரியவந்தது.

இரைப்பையில் மஞ்சள் நிற திரவம் இருந்தது. அது 100 மில்லி லீற்றர் அளவில் காணப்பட்டது. அதை வைத்து பார்க்கும் போது உயிரிழப்பானது தேநீர் குடித்து 2 மணி நேரத்துக்குள் சம்பவித்துள்ளது எனும் முடிவுக்கு வரலாம்.

### தடயங்கள் அழிய சந்தர்ப்பம் இருந்தது

சடலத்தில் எறும்புகள் மொய்த்துக்கொண்டு இருந்தமையால் , தடயப் பொருள்கள் அழிவடையக் கூடிய சந்தர்ப்பமும் இருந்துள்ளது. அத்துடன் சடலம் பழுதடையும் நிலைக்கு வந்து விட்டது. அதனாலும் தடயங்கள் அழிந்து இருக்கலாம்.

### சடலம் கிடந்த இடத்தில் குற்றம் நடக்கவில்லை

சடலம் கிடந்த இடத்தில் வன்புணர்வு ஏற்பட்டவில்லை என அனுமானிக்க முடியும். ஏனெனில் நான் சடலத்தைப் பார்வையிட்ட போது அதன் கீழ் பகுதியின் நிலத்தை அவதானித்திருந்தேன். அதன் போது நிலத்தில் இருந்த சருகுகள் மற்றும் அந்த இடம் என்பன சாதரணமாகவே இருந்தது. பலர் சேர்ந்து பல தடவைகள் அந்த இடத்தில் வைத்து வன்புணர்ந்து செய்திருந்தால், அந்தப் பகுதி சாதாரணமாக இருக்காது. அதனால் சடலம் கிடந்த இடத்தில் வன்புணர்வு நடைபெற்று இருக்க சாத்தியம் குறைவு.

அத்துடன், மாணவி கடினமான இடத்தில் வைத்தே வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளார் என அவரது உடலில் காணப்பட்ட காயங்களை வைத்து உறுதிப்படுத்த முடியும்" என சட்ட மருத்துவ நிபுணர் சாட்சியமளித்தார்.

### அடுத்த அமர்வு 18ஆம் திகதி

சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியம் முடிவுறுத்தப்பட்டது. அதனையடுத்து, தீர்ப்பாயத்தால் வழக்கு விசாரணை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதுவரையில் ஒன்பது எதிரிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறும் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

அன்றைய தினத்தில் இருந்து ஜூலை மாதம் 19ஆம் , 20ஆம் , 24ஆம் , 25 ஆம், மற்றும் 26ஆம் , ஆகிய தினங்களிலும் பின்னர் ஓகஸ்ட் 2ஆம் , 3ஆம், மற்றும் 4ஆம் திகதிகளில் வழக்கு விசாரணைகள் நடைபெறும் என தீர்ப்பாயம் அறிவித்தது. (வ-12-37)

## வாய்க்குள்...

காணப்படுகிறது" என நிபுணத்துவ சாட்சியமளித்த சட்ட மருத்துவ அதிகாரி உருத்திரபசுபதி மயூரதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பாயம் முன்னிலையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மாணவியின் உயிரிழப்பு மூன்று காரணங்களால் ஏற்பட்டு இருக்கலாம். ஒன்று தலையில் ஏற்பட்ட காயத்தால் அதிக குருதிப் பெருக்கு ஏற்பட்டு , உயிரிழப்புச் சம்பவித்து இருக்கலாம். அது சில மணி நேரங்களில் தான் உயிரிழப்பை ஏற்படுத்தும்" என சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்த போது, தீர்ப்பாயம்," இவ்வாறான காயத்துக்கு குருதிப் பெருக்கை கட்டுப்படுத்தினால் உயிரிழப்பைத் தடுக்க முடியுமா ? என கேட்டது.

"இது உள்ளக குருதிப் பெருக்கு அதனை கட்டுபடுத்துவது கடினம். சத்திர சிகிச்சை மேற்கொள்ளவும் முடியாது. அதனால் உடனடியாக சிகிச்சை வழங்க முடியும். ஆனால் சிகிச்சையின் மூலம் காப்பாற்ற முடியும் என நிச்சயமாகக் கூற முடியாது" எனப் பதிலளித்தார்.

"இரண்டாவது கழுத்துப் பட்டியால் கழுத்தை நெரித்து கட்டியதால் கழுத்து நெரிந்து உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம். அதுவும் சில நிமிடங்களில் உயிரிழப்பை ஏற்படுத்தும். மூன்றாவது வாய்க்குள் உள்ளாடையை திணித்தமையால் சுவாசப் பாதை அடைக்கப்பட்டு உயிரிழப்புச் சம்பவித்து இருக்கலாம்.

வாய்க்குள் உள்ளாடையை திணித்தமையால் மூச்சு திணறல் ஏற்பட சந்தர்ப்பம் குறைவு. ஏனெனில் மூக்கினால் சுவாசிக்க முடியும். ஆனால் வாய்க்குள் திணிக்கப்பட்ட துணி உமிழ் நீர் சுரப்பினால் ஈரமாகி அதனால் துணி பாரம் கூடி தானாக தொண்டை குழியை நோக்கி உட்சென்று சுவாச பாதையை அடைத்து இருக்கலாம். அல்லது தொண்டை குழி வரையில் துணியை அடைந்து இருக்கலாம். அவ்வாறாயின் அந்த உயிரிழப்பு சில நிமிடங்களுக்குள் நிகழலாம்" என்று சட்ட மருத்துவ அதிகாரி சாட்சியமளித்தார். (வ-37)

## பௌத்த...

உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல்குழு தனது இடைக்கால அறிக்கையை விரைந்து முடிப்பதற்காக, நாடாளுமன்றத்தில் நேற்றுப் பி.ப. 2.30 மணிக்கு கூடியது. சுமார் இரண்டு மணி நேரம் விடயங்களை ஆராய்ந்தது.

இடைக்கால அறிக்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வரிக்கு வரி ஆராயப்பட்டன. எந்தவொரு எதிர்ப்புக்களும் பதிவு செய்யப்படவில்லை. காணி விடயம் இன்று ஆராயப்படவுள்ளது. இடைக்கால அறிக்கை, இன்றும் ஆராய்ந்து முடிக்காவிட்டால், நாடாளுமன்ற அமர்வு இல்லாவிடினும் நாளையும் ஆராய்ந்து அதனை வெகு விரைவில் முடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மகாநாயக்கதேரர்கள் புதிய அரசமைப்புத் தேவையில்லை என்று கூறியுள்ளமை தொடர்பில் வழிநடத்தல் குழுவில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அதனை 'சீரியசாக' எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுடரொளி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 6
மடு மாந்தை மேற்கு கால்பந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய தொடரில் வட்டக்கண்டல் சுடரொளி அணி சம்பியனானது.
மன்னார் அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சுடரொளி அணியை எதிர்த்து விடத்தல் தீவு யூனியன் அணி மோதியது.
முதல் பாதியாட்டத்தில் சுடரொளி அணி வீரர்கள் வினோத், திலீபன் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்ய 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது சுடரொளி.
இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி 3ஆவது நிமிடத்தில் சுடரொளி வீரர் வினோத் ஒரு கோலைப் பதிவுசெய்தார். இறுதிவரை போராடியது யூனியன் அணி. ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும் போது அவ்வணி வீரர் நிதர்சன் இரு கோல்களை பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் வட்டக்கண்டல் சுடரொளி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. ஆட்ட நாயகனாக சுடரொளி அணி வீரர் வினோத், சிறந்த கோல்காப்பாளராக சுடரொளி அணி வீரர் டினேஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். சிறந்த நன்நடத்தை அணியாக முத்தரிப் புத்துறை சென்.ஜோசப் அணி தெரிவானாது.
(ம-422)

## 3ஆவது ஆட்டம் இன்று

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. முதலிரு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றுள்ளன. (ம)

# இன்றைய மோதல்கள்

**தாச்சித் தொடர்**
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் கைதடி குமாரநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் இராண்டாவது ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்**
இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் ஜோன் கில்லறி ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்புக் குளம் அலையாசை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயதாரகை வி.கழக கால்பந்தாட்டத் தொடர்**
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23-108-4[illegible])

# வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட முடிவுகள்



கரணவாய், ஜூலை 6
வவுனியா மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட இளநிலைப் பிரிவினருக்கான தொடர் வவுனியா நகரசபை பூப்பந்தாட்டத் திடலில் அண்மையில் இடம்பெற்றது இந்தத் தொடரின் முடிவுகள்.

**11 வயதுப்பிரிவு**
11 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் சம்பியன் கிண்ணத்தை இறம்பைக்குளத்தைச் சேர்ந்த வை.சாய்கிருஸ்ணாவும் இரண்டாமிடத்தை சைவப்பிரகாச கல்லூரியைச் சேர்ந்த கே.சுகிர்தனும் பெற்றனர்.
பெண்கள் பிரிவில் ரம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த திருக்சி முதலாமிடத்தையும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.சுகிர்த்தனா இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

**13 வயதுப்பிரிவு**
13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எல்.ரதீசன் முதலாமிடத்தையும், அதே பாடசாலையைச் சேர்ந்த கே.சுவைத்தன் இரண்டாமிடத்தையும், இரட்டையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தைச் சேர்ந்த எல்.ரதீசன், கே.சுவைத்தன் இணை முதலாமிடத்தையும் [illegible] பி.[illegible]சரன் இணை இரண்டாமிடத்தையும் பெற்றன.
பெண்கள் பிரிவில் ஒற்றையர் ஆட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.திலக்சிகா முதலாமிடத்தையும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வி.சஞ்சிகா இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

**15 வயதுப்பிரிவு**
15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.இந்துஜன் முதலாமிடத்தையும் அதே கல்லூரியைச் சேர்ந்த பி.தனோஜன் இரண்டாமிடத்தையும், இரட்டையர் பிரிவில் தமிழ் மத்திய மகா வித்தியாலத்தைச் சேர்ந்த எம்.இந்துஜன், ஏ.றொபின்சன் முதலாவது இடத்தையும் அதே கல்லூரியைச் சேர்ந்த பி.தனோஜன், ஏ.கார்த்திகேசன் இணை இரண்டாமிடத்தையும் பெற்றன.
பெண்கள் பிரிவில் ரம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச்சேர்ந்த ஜே.அலக்சியா முதலாமிடத்தையும், அதே பாடசாலையை சேர்ந்து டி.அக்சியா இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

**17 வயதுப்பிரிவு**
17 வயதுக்குட்பட்ட வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எல்.செசன் முதலாமிடத்தையும் அதே பாடசாலையைச் சேர்நந ஆர்.தெராதரன் இரண்டாமிடத்தையும், இரட்டையர் பிரிவில் ஆர்.தெராதரன், எஸ்ஜனுசானந்தன் இணை முதலாமிடத்தையும் டி.ஆகாஸ், ஜி.யதுகுலன் இணை இரண்டாமிடத்தையும் பெற்றன.
பெண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் இரம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எல்.யதுசிகா முதலாமிடத்தையும் ஜே.சியாமளா இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

**19 வயதுப்பிரிவு**
19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.ஆர்.ஜோன்சன் முதலாமிடத்தையும் ஆர்.சுலக்ஸன் இரண்டாமிடத்தையும், இரட்டையர் ஆட்டத்தில் கே.துசான், ஏ.ஆர்.ஜோன்சன் இணை முதலாமிடத்தையும் ஆர்.சுலக்சன் வி.ருக்சன் இணை இரண்டாமிடத்தையும் பெற்றனர்.
பெண்கள் பிரிவில் ஒற்றையர் பிரிவில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ஆரங்கவியா முதலாம் இடத்தையும் கே.லதுர்சிகா இரண்டாமிடத்தையும், இரட்டையர் ஆட்டத்தில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.அருங்கவி. கே.சகானா இணை முதலாமிடத்தையும் யே.லதுர்சிகா கே.நிவேதிகா இணை இரண்டாமிடத்தையும் பெற்றன. (ம-108)

# காளியம்பாள், சிந்து அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜூன் 6
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் காளியம்பாள், ஆலடி சிந்து அணிகள் வெற்றிபெற்றன.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனந்தா விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் காளியம்பாள் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்ந்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிந்து அணி வெற்றிபெற்றது.
(ம-23)

# துள்ளுமீன் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின்கபடித்தொடரில்நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்ட துள்ளுமீன்.
ஐக்கியத்தின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் துள்ளுமீன் அணியை எதிர்த்து மலாயன் சாண்டோ அணி மோதியது. 55:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது துள்ளுமீன் அணி ஆட்ட நாயகனாக துள்ளுமீன் அணியின் பரத் தெரிவானார்.
(ம-23)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 6
தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி அபிவிருத்தி கழகங்கள் இணைந்து கழகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் துடுப்பாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டத் தொடர்களை நடத்த விண்ணப்பங்கள் கோரியுள்ளன.
கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் மற்றும் பாடசாலைகள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
(ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜெப் ஹோர்ணுக்கு எதிரான போட்டியில்

# பக்கியோ தோல்வி

உலக குத்துச்சண்டை அமைப்பின், 63.5 தொடக்கம் 66.7 கிலோகிராம் வரையிலான எடைப் பிரிவுக்கான சம்பியன் போட்டியில், உலகச் சம்பியன் மனி பக்கியோவை வீழ்த்தி சம்பியனானார் ஜெப் ஹோர்ண்.
ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்ன் நகரில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. 29 வயதான, ஹோர்ண், ஆக்ரோசமான செயற்பாட்டை வெளிப்படுத்தி, 117:111, 115:113, 115:133 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றார்.
38 வயதான பக்கியோ, தனது காலத்தில் தோன்றிய மிகச்சிறந்த வீரர்களுள் ஒருவராகக் கருதப்படுவதோடு, அவர் குறுகிய நேரத்தில் வெற்றிபெற்று விடுவார் என, அவரது அணியினரே தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் அவரது தோல்வி பக்கியோவின் ரசிகர்களுக்கு மட்டுமல்லாமல் குத்துச்சண்டை ரசிகர்களுக்கும் பெரும் அதிர்ச்சியை வழங்கியுள்ளது.
ஹோர்ணின் வெற்றி பன்னாட்டு ஊடகங்களால் பெரிதளவில் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது. இதனால் இன்னும் சில மாதங்களில், உலக ஜாம்பவான் மெவதர் மற்றும் ஹோர்ண் இடையில் மோதலொன்று நடைபெற வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## வெல்லவேண்டும் மேற்கிந்தியத் தீவுகள்

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஏற்பட்டுள்ளது.
நான்கு ஆட்டங்களில் முதலாவது ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. அடுத்த இரு ஆட்டங்களிலும் இந்தியா வெற்றிபெற்றது. நான்காவது ஆட்டத்தில் தீவுகள் வென்றது. இதனால் குறைந்தபட்சம் தொடரை 2:2 என்று முடிக்க இன்று வெல்லவேண்டும் என்ற நிலை தீவுகளுக்கு உண்டு. (ம)

## இந்தியாவுக்கு எதிராக களமிறங்குகிறார் கெய்ல்

இந்தியாவுக்கு எதிரான ரி-20 ஆட்டத் துக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி யில் கெய்ல் சேர்த்துக்கொள்ளப்பட் டுள்ளார்.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிவடைந்தவுடன் ரி-20 ஆட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.
இந்த நிலையில் இந்த ஆட்டத்துக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. கெய்ல் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.
மேற்கிந்தியத் தீவுகள் அணி விவரம் கார்லஸ் பிரீத்வைட், சாமுவேல் பத்ரி, ரோன்போர்ட் பீட்டன், கிறிஸ் கெய்ல், இவின் லெவிஸ், ஜேசன் மொகமட், சுனில் நரைன், கெய்ரான் பொலார்ட், ரோவ்மேன் பவல், மார்லன் சாமுவேல்ஸ், ஜெரோல் ரெய்லர், சத்விக் வல்டன், கெஸ்ரிக் வில்லியம்ஸ். (ம)



## றேஞ்சர்ஸ் ஐக்கியம் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 6
உதயதாரகையின் கால்பந்தாட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறின.
உதயதாரகையின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின.
ஆரம்பம் முதல் இறுதி வரை ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஐக்கிய அணி சதீஸின் ஹட்றிக் கோலின் உதவியுடன் 4:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் மோதின. பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மாதுஜன் 3 கோல்களைப் பதிவுசெய்ய 5:0 என கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-108)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 6
அரியாலை சனசமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு 6 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. நாளைமறுதினம் தொடர் ஆரம்பமாகவுள்ளது. கலந்துகொள்ள விரும்பும்; கழகங்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

## தலைவராக இன்று சாதிப்பாரா ரூட்?

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் தலைமைப் பொறுப்பேற்ற பின்னர் அந்த அணியின் தலைவராக இன்று தனது முதலாவது ஆட்டத்தில் களமிறங்குகிறார் ரூட்.
இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் இன்று ஆரம்பமாகிறது.
இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்த அலிஸ்டர் குக் இந்தியாவுக்கு எதிரான் டெஸ்ட் தொடரைப் பறிகொடுத்த பின்னர் அவர் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். அந்த இடத்துக்கு ரூட் தெரிவுசெய்யப்பட்டார். ரூட் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு 6 மாதங்கள் ஆகிவிட்ட போதிலும் இந்தக் காலப்பகுதியில் இங்கிலாந்து எந்தவொரு டெஸ்ட் தொடரிலும் விளையாடவில்லை. ரூட் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் இன்றுதான் அந்த அணி தனது முதலாவது ஆட்டத்தில் களமிறங்குகிறது. இதனால் ரூட்டின் பெறுபேறு தொடர்பில் பெரியளவில் எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.
தென்னாபிரிக்க அணியின் தலைவர் பிளாசிஸ் தம்பதியினருக்கு குழந்தை பிறந்துள்ளதால் அவரது சுயவிருப்பத்தின் பெயரில் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட்டில் இருந்து பிளாஸிஸ்க்கு விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை எல்கர் வழிநடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சிறப்புத் தேவையுடையவர்களுக்கான போட்டிகள் இம்மாத இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 13
வடமாகாண சிறப்புத் தேவையுடையவர்களுக்கான மாகாண மட்டப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.
100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர் ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டப் போட்டிகள், நீளம் பாய்தல், தட்டெறிதல், குண்டெறிதல், ஈட்டியெறிதல் கண் பார்வையற்றோருக்கான சத்தப் பந்து துடுப்பாட்டம், முற்றிலும் வாய் பேசாத காது கேளாதோருக்கான கால்பந்தாட்டம், பெண்களுக்கான கால்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டோர் 18 வயதுக்கு மேற்பட்டோர் என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.
ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்கள் தத்தமது பிரிவு பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைகள் பிரிவில் பதிவு செய்யலாமெனவும், போட்டிகள் மாகாண சமூக சேவைகள் திணைக்களம் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பான உயிரிழை அமைப்பு ஆகியவை இணைந்து நடத்தவுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோகோவிக் முன்னேற்றம்



விம்பிள்டன் ரென்னிஸ்தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார் சேர்பிய வீரர் ஜோகோவிக்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து கிலிசின் மோதினார். முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜோகோவிக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் காயம் காரணமாக கிலிசின் விலக ஜோகோவிக் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டது. (ம)


**தவறவிடப்பட்டுள்ளது**

திருவருட்செல்வன் பிரவின் என்பவருடைய NIC.No: 991 521 844 V தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 089 1530

**வாகனம் வாடகைக்குண்டு**

சாரதியுடன் வாகனம் வாடகைக்கு உண்டு.

Tata Super AC (Full Body)

077 925 4050, 077 958 8558

**வீடு விற்பனைக்கு**

யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)
தொடர்புகளுக்கு.

077 199 8747,076 991 0303

**முச்சக்கர வண்டி விற்பனைக்கு**

Bajaj - 4 Stroke CP AAS -XXXX
தொடர்புகளுக்கு:
077 691 3058

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

**BA, 1st YEAR, 1st SEMISTOR**

மேற்படி பல்கலைக் கழகத்தினால் உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 15.07.2017 நேரம் : காலை - 8.00மணி

**முக்கிய கவனிப்பு:**
பேராதனை பல்கலைக்கழகத்தினால் பரீட்சைகள் பிற்போடப்பட்ட BA 1ஆம் ஆண்டிற்கான பரீட்சைகள் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் நடைபெற இருப்பதனால் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் 08.07.2017 இல் கடந்த கால பாடநேர அட்டவணையின்படி நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். **கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.**

- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

நிர்வாகி: S.அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி** ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**A/L 2017** தொழில் நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான

**விசேட செயலமர்வு**

| திகதி | பாடம் |
|---|---|
| 7,8,9 | பொறியியல் தொழில் நுட்பம்<br>உயிர்முறைமைகள் தொழில் நுட்பம் |
| 10,11 | தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் |
| 15,16,17 | I.C.T , விவசாயம், புவியியல் |

நேரம் காலை 8.30 - 2.00

குறிப்பு:
- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகு ரீதியாக தெளிவுபடுத்தப்படும்
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாளும் அதற்குரிய விடைகளும் விளக்கங்களும் வழங்கப்படும்
- எதிர்பார்க்கை செயன்முறை தொடர்பான விளக்கங்கள் இடம்பெறும்

முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

கட்டணம் அறவிடப்படும்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு 0772487774

சனிக்கிழமை இரவு 9.55 க்கு

**Dialog Mega அதிஷ்டம் வெற்றியாளர்கள்**



ரூ. 10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர் கிரிஷா படுகெதர - ஹந்தபான்கொட

I. D. P. ஹதுருசிங்க கனுபோவில

K. சந்திரமோகன் நுவரெலிய

சன்னசூரிய அகுரஸ்ஸ

R. M. பிரசன்ன பதுளை

**இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,769,231/-**

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- ஒரு கோடி வென்ற 9 வெற்றியாளர்கள்
- 30 இலட்சம் வென்ற வெற்றியாளர் ஒருவர்
- 20 இலட்சம் வென்ற 8 வெற்றியாளர்கள்
- 10 இலட்சம் வென்ற 52 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 570 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் அதி பிரம்மாண்டமான பரிசுத் தொகை

121க்கு அழைத்து உங்கள் வெற்றி இலக்கங்களை தெரிந்துக்கொள்ளுங்கள்.

Dialog
an axiata company
www.dialog.lk
எதிர்காலம் இன்றே.

DLB CAR PLUS
சீட்டிழுப்பு இலக்கம் 13
சீட்டிழுப்பு திகதி 2017.07.05
வெற்றி இலக்கங்கள் 27 36 39 Z சனி
03 11 44
1 16
5,449,820/=
Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2899 திகதி 05.07.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கிலஎழுத்து
07 09 22 52 I
போனஸ் இல. 31
சனிக் கிழமை ஜக்பொட் 30, 000, 000/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 30 44 47 73
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.07.08 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

திரு.ஷாம்சன் அவர்களின்
**SPOKEN ENGLISH**
O/L, A/L எழுதியோர் இளைஞர், யுவதிகள்,பல்கலை மாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள்,வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
எமது பேச்சுமூலமான ஆங்கிலப்பயிற்சியில் இணைய எந்தவொரு அடிப்படை ஆங்கில அறிவும் தேவையில்லை

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 08.07.2017 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

சனி, ஞாயிறு IELTS பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் - 15.07.2017
காலை 08.00 - 10.00

SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் அருகில்) யாழ்நகர்.
021 320 3313
077 1570 486


## கண்ணீர் அஞ்சலி

### பொன்னையா காசிநாதன்
(வடமாகாண ஓய்வுநிலை பொதுச் சுகாதார பரிசோதகர்)



உரும்பிராய் இந்துவின் புகழ்பெற்ற பழையமாணவனும் பழைய மாணவர் சங்க ஆரம்பகால உறுப்பினருமான பொன்னையா காசிநாதன் அவர்கள் அருள்மிகு கற்பக விநாயகரின் மகோற்சவ காலத்தில் அவர்தம் பாதார விந்தங்களை தழுவிக்கொண்ட செய்தி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்துகின்றது.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா கற்பக விநாயகரின் பாதக்கமலத்தில் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

**உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.**
**லண்டன், கனடா, உரும்பிராய்**

இப்பத்திரிகை, நியூ உ... (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org